தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 422 பிலவ வருடம், மார்கழி மாதம் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை (07.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜுமா அத்துல் ஆகீர் - 03, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

முன்னறிவித்தலின்றி மின் விநியோகம் துண்டிக்கப்படலாம்!

எதிர்வரும் நாட்களில் முன்னறிவித்தலின்றி மின் விநியோகம் துண்டிக்கப்படலாம் என இலங்கை மின்சார சபை சேவைச் சங்கத்தின் தலைவர் ரஞ்சன் விஜயலால் தெரிவித்துள்ளார். இதனால் நாட்டு மக்கள் இருளில் இருப்பதற்குத் தயாராக வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

எரிவாயு வெடிப்பின் பின்னணியில் சதி!

இரகசிய விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவென்கிறார் அமைச்சர் ஜோன்ஸ்டன்

நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் கசிவு மற்றும் அடுப்புகள் வெடிக்கும் சம்பவங்களின் பின்னணியில் சதி உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. தற்போது கேஸ் அடுப்புகள் வெடிப்பு தொடர்பில் இரகசிய விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அந்த விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசாங்கத்தின் பிரதம கொறடாவும், அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குருநாகல் மலியதேவ மகளிர் வித்தியாலயத்தின் புதிய மூன்று மாடிக் கட்டடத்தை நேற்று (06) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரசாங்கத்தின் பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது.

இந்த புத்தாண்டில் சாதகமாக சிந்தித்து முன்னேற வேண்டும். கொரோனா தொற்று பல பிரச்சினைகளை ஏற்படுத்தியது. அநநிய சௌவணி கையிருப்பு ...

02 பக்கம்

புதிய வகை டெங்கு காய்ச்சல்; கொழும்பு, கம்பஹாவில் தீவிரம்

டொக்டர் தீபால் பெரேரா தகவல்

நாட்டில் புதிய வகை டெங்கு நோய் பரவி வருவதால் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

வெலிக்கடை கைதிகள் கொலை வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு

2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற பகிகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கிஹான் குலதுங்க, பிரதீப் ஹெட்டிஆரச்சி மற்றும் மஞ்சுள திலகரட்ன ஆகிய மூவரடங்கிய மேல்நீதிமன்ற விசேட நீதிபதிகள் குழாமினால் நேற்று (06) வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படவிருந்த நிலையில் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

ரூபவாஹினி புதிய தலைவர் சொனால

ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தின் தலைவர் ரெஜினோல்ட் குரே நேற்று (06) பிற்பகல் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதன்படி, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக தேசிய நூலகம் மற்றும் ஆவணச் சேவைகள் சபையின் தலைவர் சொனால குணவர்தன நியமிக்கப்படவுள்ளார்.

ரெஜினோல்ட் குரே ரூபவாஹினி கூட்டுத்தாபன ஊழியர்களிடம் உரையாடிவிட்டு தனது அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ காரை கையளித்துவிட்டு நேற்று (06) மதியம் 12.30 மணியளவில் ரூபவாஹினி கூட்டுத்தாபன வளாகத்தை விட்டு வெளியே நியதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் உயர் பதவிகளை மாற்றுவதற்கு அரசாங்கம் எடுத்த ...

02 பக்கம்

ஆவணத்தில் தமிழ்க்கட்சிகள் ஒப்பம் - மலையக, முஸ்லிம் கட்சிகள் இல்லை; சம்பந்தன் தலைமையிலான குழு இந்திய தூதுவரிடம் கையளிக்கும்

02 பக்கம்

ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான விவாதமொன்றை நடத்துக!

ரணில் விசேட கோரிக்கை

08 பக்கம்

கமெண்ட் கந்தர்..

புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றிகொள்வதில்லை...
வெற்றிபெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலியில்லை...

திருமலை எண்ணெய் தாங்கி ஒப்பந்தத்திற்கு எதிராக வழக்கு

நீதிமன்றத்தை நாடுகிறார் எல்லே குணவங்ச தேரர்



திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகம் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள ஒப்பந்தம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார். இந்த உடன்படிக்கை நாட்டுக்கு பாதகமானது எனவும், எனவே பல தரப்புக்கள் நீதிமன்ற தலையீட்டை நாடுவதற்கு தயாராகி வருவதாகவும் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு விரைவில் நீங்குமென நம்பிக்கை

லிட்ரோ நிறுவனம் வெளியிட்டது

சமையல் எரிவாயு கேள்வியை பூர்த்தி செய்யும் வகையில், நாளாந்தம் 90 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரையான எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

சந்தையில் தற்போது எரிவாயு சிலிண்டருக்கான தட்டுப்பாட்டை, குறுகிய காலத்திற்குள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

02 பக்கம்

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நிவர்த்திக்கும் சுற்றுநிருபம் வெளியீடு

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நிவர்த்திசெய்து பொது நிர்வாக அமைச்சினால் சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் - அதிபர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்காக கடந்த ஒக்ஸ்ட் மாதம் 30 ஆம் திகதி மற்றும் இந்த வருடத்தின் ஜனவரி 03 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களில்...

02 பக்கம்

எரிவாயு நெருக்கடியால் தறிக்கப்படும் மரங்கள்

சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை

02 பக்கம்

உஷ்

அமைச்சரவை மாற்றம் நடக்கும் போது விவசாய அமைச்சை இரண்டாகப் பிரித்து பயிர் அபிவிருத்தி அமைச்சு என்ற ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக தகவல். இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை அதன் அமைச்சராக நியமிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. எஸ்.எம்.சந்திரசேன விவசாய அமைச்சை எதிர்பார்த்தபோதும் அது சாத்தியப்படாதென தெரிகிறது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் இருக்கும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தியை, விளையாட்டுத்துறை அமைச்சின்கீழ் கொண்டுவர பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பி ஒருவருக்கு இராஜாங்க அமைச்சை வழங்கவும் தீவிரமாக ஆலோசிக்கப்படுகிறது.

கற்பனை அடிப்படையில் செய்திகளை வெளியிடாதீர்!

ஊடக அமைச்சர் டலஸ் திருமலையில் கோரிக்கை

(பதுர்தீன் சியானா, ரவ்பீக் பாயிஸ்)

கற்பனை அடிப்படையில் அன்றி தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் ஊடகவியலாளர்கள் செய்தியை வெளியிட வேண்டும் என ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று (06) அரசாங்க வெளியீட்டு பணிய கத்தினை திறந்துவைத்துவிட்ட ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே...

02 பக்கம்

அரச பணியாளர் ஓய்வுபெறும் வயதெல்லை சுற்றுநிருபம் நேற்று வெளியானது

அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கும் சுற்றுநிருபம் நேற்று (06) வெளியிடப்பட்டதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 வரவு செலவுத் திட்ட யோசனைக்கமைய இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது.

எவ்வாறாயினும், அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கும் திட்டத்திற்கு தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக இலங்கை நிர்வாக சேவை சங்கம் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தது.

02 பக்கம்

அரச புலனாய்வுப் பிரிவினர் வேவு பார்ப்பதை விசாரிக்கவேண்டும்

சுசில் பிரேமஜயந்த கோரிக்கை

அரச புலனாய்வு பிரிவினர் தம்மை வேவு பார்த்தனரா என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என சுசில் பிரேமஜயந்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புலனாய்வு துறையினர் வழங்கிய அறிக்கையின் அடிப்படையிலேயே சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கப்பட்டார் என அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளதை மேற்கோள்காட்டி அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புலனாய்வு பிரிவினரின் அறிக்கை எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் அரசாங்கத்தின் சிரேஷ்ட...

02 பக்கம்

ஆரிய குளத்தில் மதச் சின்னங்களை திணிக்க அரசு முனைந்தால் விளைவுகள் தெரியவரும்

சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தில் மதச் சின்னங்களை திணிப்பதற்கு அரசு முனைந்தால், இறந்தவர்களின் அஸ்தி கரைக்கும் புனித நீர் நிலையாக அதனை மாற்ற வேண்டிய நிலை ஏற்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக்கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று (06) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் ஆரிய குளம் எமது பாரம்பரியம். அது நேற்றுக் குப்பைகளுடன் காணப்படும் போது ஒருவருரும் திரும்பிப் பார்க்கவில்லை. அதன் பின்னர் யாழ். மாநகர சபையின் முயற்சியால், தற்போது அழகாக சீரமைக்கப்பட்டு மக்கள் தமது பொழுதுபோக்கு நேரத்தை செலவழிப்பதற்காக அங்கு வருகின்றனர்.

ஆனால், வடக்கு மாகாண ஆளுநர் தற்போது துக்கத்திலிருந்து விழித்தது போல புது புரளியை கிளப்பியுள்ளார். ஆரிய குளம் மாநகர சபைக்கு சொந்தமானது என ஆவணங்களை சுமப்பியங்கள், சமய சின்னங்கள் தொடர்பாக வெளிப்படுத்துங்கள் என வடக்கு மாகாண ஆளுநர், மாநகர சபைக்கு கடிதம் ஒன்றை தற்போது அனுப்பியுள்ளார்.

அன்று ஆரிய குளம் சீரமைக்கப்பட்டு திறந்து வைக்கும் நிகழ்வுக்கு ஆளுநர் வருகை தந்தபோது, அவருக்கு தெரியவில்லையா இது யாருடைய சொத்து என்று?

ஆரிய குளம் எமது சொத்து அதையும் அரசு கையகப்படுத்தப் பார்க்கிறது. எமக்கு தெரியும் வடக்கு மாகான ஆளுநர் ஜனாதிபதி கோட்பாலின் எடுபிடி, அவர் தன்னுடைய நிர்வாக வேலைகளை மட்டும் பார்க்க வேண்டும். எமக்கு விளையாட்டு காட்டவேண்டாம். மாநகர முதல்வரை பணிய வைக்கும் செயற்பாட்டுக்கு தமிழ் மக்கள் துணையாக மாட்டார்கள். பொத்த மக்கள் வழிபடுவதற்கு அருகில் நாக விகாரை உள்ளது. போய் வழிபட்டும் நாம் அதைப்பற்றி ஏதும் கேட்கில்லை. கண்டி வாவியில் பின்னையார் கோவில் கட்ட விடுவீங்களா? என் இப்போது இங்கு வந்து புதுப் புரளியை ஆளுநர் கிளப்புகின்றார்.

மதச் சின்னங்கள் தொடர்பில் அவர் பிரச்சினை செய்வாராணால், மக்களின் புனித அஸ்தி கரைக்கும் இடமாக ஆரிய குளத்தை மாற்ற வேண்டி வரும். அன்று திறப்பு விழாவுக்கு வருகை தந்தவர், இப்போது விடிய விடிய இறாமர் கதை கேட்பது போல, இந்த குளம் யாருடையது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆளுநர் என்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வர முடியுமா? அவரின் வாகனச் லைவு 58 இலட்சம், அதற்கு மேலதிகமாக பாதுகாப்பு பிரிவு. இதுவும் போதாதென்று தான் அனியும் ர்சேட்டுக்கு 7 ஆயிரம் செலவு, மோப்ப நாய்கள் என்று ஆடம்பரமாக ஆளுநர் திரிகின்றார்.



அனைத்தும் மக்களின் வரிப்பணத்தில் நடக்கிறது. அவருக்கு எதற்கு மோப்ப நாய்கள்? வெடி குண்டு வைத்து விடுவார்கள் என்ற பயமா?

மக்களின் பிரச்சினையை முதலில் பாருங்கள், சம்பளத்தை எடுத்துவிட்டு முடங்கிக்கிடக்காமல் மக்கள் தேவைகளை அறிந்து செயற்படுங்கள். மதப்பிரச்சினையை துண்டாதீர்கள்.

வடக்கில் தமிழர்களின் பாரம்பரிய இடங்கள் இந்துமத ஸ்தலங்கள் ஆக்கிரமிக்கப்படும் போது எங்கு சென்றீர்கள்? இப்போதும் தொடர்ந்துகொண்டிருக்கும் ஆக்கிரமிப்புக்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? அவை உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா?

தேவை இல்லாத வேலை பார்க்காமல் உங்களுக்கு இருக்கும் வேலையை பாருங்கள். ஆளுநரை கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கிறோம். இல்லை என்றால் இவர் போகும் இடம் எல்லாம் பிரச்சினை ஏற்படும் நிலை வரும் – என்றார்.

சமூகத்திற்குள் ஊடுருவியது ஒமிக்ரான் பரவல்; நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம்!

இலங்கையில் ஒமிக்ரொன் சமூகப் பரவலுக்குரிய அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவித்துள்ள சுகாதார அதிகாரிகள், இம்மாதம் இரண்டாவது வாரத்தில் தொற்றுநோயாளர் தொகையில் சடுதியான அதிகரிப்பு ஏற்படலாம் எனவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

நத்தார் மற்றும் புதுவருட விடுமுறைக் காலங்களில் மக்களின் பொறுப்பற்ற நடத்தைகள் தொற்று நோயின் தீவிர பரவலுக்கு வழிவகுக்கலாம் எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை 50க்கும் மேற்பட்ட ஒமிக்ரொன் தொற்று நோயாளர்கள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளனர். எனினும் தற்போது தொற்று உறுதியாவோரில் 12 வீதத்துக்கும் அதிகமானவர்கள் ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சுகாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ஒமிக்ரொன் சமூகத்தில் பரவியுள்ளது. பரவல் மேலும் வேகமடைந்தால் தற்போது ஜரோப்பிய நாடுகளில் உள்ள நிலை இலங்கையிலும் ஏற்படும் என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளரும் பிரதி சுகாதார சேவை பணிப்பாளருமான ஹேமந்த ஹேரத் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, ஒமிக்ரொன் திரிபு தொற்று நோயாளர் தொகை இரண்டு முதல் மூன்று நாட்களில் இரட்டிப்பாகிறது. இந்நிலையில் பொதுமக்களின் பொறுப்பற்ற நடத்தை நிலைமை தீவிரத்தை அதிகரிக்கும் என ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தடுப்பூசி போட்டுக்கொள்ள யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் பொதுமக்களின் ஆதரவு இல்லை என்றால் தொற்று நோயை ஒழிக்க முடியாது. தொற்று நோய் தீவிரமடைந்தால் அதன் விளைவுகள் மோசமாக இருக்கும். நாடு மீண்டும் ஒரு முறை முடக்கப் பட்டால் பொருளாதார நெருக்கடி தற்போது உள்ளதை விடக் கொடூயதாக இருக்கும் எனவும் அவர் எச்சரித்தார்.

இதற்கிடையில், ஒமிக்ரொன் பரவல் காரணமாக தொற்று நோயாளர் தொகை அதிகரித்தால் மருத்துவமனைகள் அவற்றின் பராமரிப்பு திறனை இழக்கநேரிடும் என வைத்திய நிபுணர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

ஆவணத்தில்

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியிடம் ஒப்படைப்பதற்காகத் தமிழ் பேசும் தரப்புக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணம் ஒன்றில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் கட்சிகள் நேற்று ஒப்பமிட்டன.

கடந்த 21ஆம் திகதி இறுதிசெய்யப்பட்ட ஆவணத்தில் சம்பந்தன் உட்பட பல தலைவர்களும் நேற்று ஒப்பமிட்டனர். அது விரைவில் இந்தியத் தூதுவர் ஊடாக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்பி வைக்கப்பட்டவுள்ளது.

அந்த ஆவணத்தில் இரா.சம்பந்தன், நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.ஸ்ரீகாந்தா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் ஆகியோர் நேற்று ஒப்பமிட்டனர். மாவை சேனாதிராஜா எந்த நேரத்திலும் அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நேற்று கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்தார். அவரது தரப்பினரும், முஸ்லிம்கள் தரப்பினரும், பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் பங்களிப்பு இல்லாமல், இந்தச் சந்திப்பின்போது மனோகணேசனுடன் நேரிலும், ரஷுப் ஹக்கீமுடன் தொலைபேசியிலும் பேசி பொது ஆவணத்தை பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவும் முடிவை சம்பந்தன் எடுத்தார்.

கடந்த 21 ஆம் திகதி குளோபல் டவர் ஹோட்டலில் நடைபெற்ற தமிழர் தரப்புக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் இறுதிசெய்யப்பட்ட கடிதமே இப்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால் ஒப்பமிடப்பட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படுகின்றது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியத் தூதுவரைச் சந்தித்து இக்கடிதத்தை அவர் மூலம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைப்பர் எனத்தெரிகிறது.

எரிவாயு நெருக்கடியால்...

எரிவாயு பிரச்சினை இன்னும் பல மாதங்களுக்கு நீடித்தால், எரிவாயுக்குப் பதிலாக விறகுகளைப் பயன்படுத்துவோரின் வீதம் அதிகரிக்குமெனவும் கிராமப்புறங்களில் இருக்கும் சாடுகள் அழியும் அபாயம் உள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சமையல் எரிவாயு விலை உயர்வு, சந்தையில் எரிவாயு தட்டுப்பாடு, எரிவாயு கசிவால் ஏற்படும் வெடிப்பு ஆபத்துகள் போன்ற காரணங்களால் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் விறகுப் பயன்பாடு அதிகரித்து வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

மேலும், விறகுகளைக் கண்டுபிடிப்பதற்காக மக்கள் காடுகளுக்குள் நுழைவதால், மரங்கள் மற்றும் செடி, கொடிகளின் சேதம் அதிகரித்து வருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

சமையல் எரிவாயு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படாமலிட்டால், அதனால் ஏற்படும் நடவடிக்கைகளின் பாதகமான விளைவுகளை எதிர்காலத்தில் காண முடியும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

முன்னறிவித்தலின்றி

எரிபொருள் இறக்குமதி நெருக்கடியின் காரணமாக மின் உற்பத்திக்கும், மின் விநியோகத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள் ளதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மசகு எண்ணெயை இறக்குமதிசெய்ய முடியாத காரணத்தினால் சப்புகல்லந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இரண்டாவது தடவையாகவும் மூடப்பட்டுள்ளது.

நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்திலிருந்து முன்னெடுக்கவில்லை.

தொழிற்சங்கத்தினரது ஆலோசனைகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. அதன் விளைவை தற்போது எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை கைதிகள்...

2012 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் 8 சிறைக்கைதிகள் கொலை செய்யப்பட்ட தொடர்பில் 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபரினால் வழக்கின் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த சிறைச்சாலைகளின் முன்னாள் உளவுப்பிரிவு அதிகாரியான இந்திக்க சம்பத் என்பவர் வழக்கு தொடரப்பட்ட சந்தர்ப்பத்தில் வெளிநாடு சென்றிருந்தார்.

அவரின்றி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், முறைப்பாட்டாளர் தரப்பினரால் அவருக்கு எதிரான சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை என சாட்சி விசாரணைகளின் நிறைவில் நீதிபதிகள் குழாம் தெரிவித்தது.

அதற்கிணங்க, குறித்த பிரதிவாதியை விடுதலை செய்த நீதிபதிகள் குழாம், நியோமால் ரங்கஜீவ மற்றும் எமில் ரஞ்சன் மைறிஹேவா உள்ளிட்டோருக்கு எதிராக வழக்கு விசாரணையை தொடர்ந்தும் முன்னெடுத்தது.

2012 நவம்பர் 09 ஆம் திகதி சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட கலகத்தின்போது 27 கைதிகள் கொல்லப்பட்டிருந்தநிலும் 08 கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பிலேயே வழக்கை தாக்கல்செய்வதற்கு போதுமான சாட்சிகள் சட்டமா அதிபருக்கு காணப்பட்டது.

எரிவாயு வெடிப்பின்...

குறைந்துள்ளது. அதனால், பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. எரிவாயுவில் சிக்கல் உள்ளது. எரிவாயு அடுப்புகள் வெடித்தலாக கூறப்படுகிறது. இந்த கேஸ் வெடிப்பு சம்பவங்களின் பின்னணியில் சதி உள்ளதா என்ற ஸ்தேகம் எழுந்துள்ளது. கொழும்பு 7இல் எரிவாயு வெடிக்கவது. வட மாகாணத்தில் எரிவாயு வெடிக்வது. கண்டி, குருநாகலில் எரிவாயு வெடிக்கவில்லை.

எனவே, இந்த எரிவாயு வெடிப்புகள் குறித்து முறையான விசாரணை நடத்தவேண்டும். ஜனாதிபதி தற்போது வாயு அடுப்புகள் வெடிப்பு தொடர்பில் இரகசிய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த எரிவாயு வெடிப்புகள் குறித்து நாட்டு மக்கள் இப்போது மிகவும் ஆர்வமாக உள்ளனர். மக்கள் இப்போது எரிவாயு நுகர்வுக்கு பயப்படுகிறார்கள். எப்படியோ அடுத்த சில வாரங்களில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என நம்புகிறேன்.

பாடசாலை மாணவர்கள் கொவிட் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கல்வி தடைப்பட்டது. அவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை இழந்தனர். அவர்கள் மன உளைச்சலில் இருந்தனர். எதிர்காலத்தில் இந்த கொவிட் தொற்றுநோயிலிருந்து மீண்டு வருவோம் என்று நம்புகிறேன்.

சபீபத்தில், ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினையை தீர்க்க அரசாங்கத்தை வற்புறுத்தினர். தற்போது ஆசிரியர்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டுள்ளோம். இப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசு முயன்றபோது பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் அவர்களை போராட்டத்திற்கு தூண்டினர். எங்கள் மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் சிலர் தெருவில் இறங்கினர். ஆசிரியர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே எமது இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டது. நாங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தருவோம் - என்றார் அமைச்சர் ஜோன்ஸ்டன்.

ஜனாதிபதியின் அக்கிராசன...

எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தின் புதிய சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பிலான சபை ஒத்திவைப்பு மீதான விவாதமொன்றை நடத்துமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் சபை முதல்வர் தினேஷ் குணவர்தன ஆகியோரிடம், ரணில் விக்ரமசிங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் சபை நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த டிசம்பர் 13ஆம் திகதி நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதன்படி, புதிய சபை நடவடிக்கைகளை எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே, ரணில் விக்ரமசிங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை முடிவடைந்ததை அடுத்து, ஜனவரி 19, 20 மற்றும் 21ஆம் திகதிகளில் இந்த சபை ஒத்திவைப்பு மீதான விவாதத்தை நடத்தமுடியும் எனவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரச புலனாய்வுப்...

உறுப்பினர்கள் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்த கருத்துக்களை சுட்டிக் காட்டியுள்ள சுசில் பிரேமஜயந்த இது மிகவும் பாரதூரமான அறிக்கை புலனாய்வு பிரிவினர், தம்மை போன்றவர்களை பின்தொடர வேண்டிய அவசியமில்லை என தெரிவித்துள்ளார்.

புலனாய்வு பிரிவினர் என்னை பின்தொடர்வதை விட்டுவிட்டு வீதிகளுக்கு சென்று சமையல் எரிவாயுவிற்காகவும், மண்ணெண்ணெய்க்காகவும் பொருட்களை வாங்கவும் வரிசையில் நிற்பவர்கள் என்ன தெரிவிக்கின்றார்கள் என்பதை செவிமடுத்தால் அது பயனுள்ளதாக காணப்படும். அவற்றுக்கு என்ன நடந்தது என்பதை கண்டுபிடியுங்கள் என முன்னாள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் ஏன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்பதைக் கண்டுபிடித்து அரசாங்கத்திற்கு அறிக்கை வழங்குங்கள் எனவும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எரிவாயு சிலின்டர்...

எனினும், தற்போது நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய இன்னும் சில வாரங்கள் தேவைப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவரான துஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் சந்தைக்கு வெளியிடப்படும் உள்நாட்டு எரிவாயு சிலின்டர்களின் எண்ணிக்கையை 90,000 ஆக அதிகரித்துள்ளதாகவும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் வழங்கப்படும் எரிவாயு சிலின்டர்களின் கையிருப்பு சுமார் 30,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் சிலின்டர்கள் திரும்பப் பெறப்படுவதாலும், புதிய தரப்படுத்தல் நடவடிக்கைகளாலும் சிலின்டர்களை சந்தைக்கு வெளியிடுவதில் சில தடைகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது போதுமான அளவு எரிவாயு கையிருப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

3,700 மெற்றிக் தொன் எரிவாயுவைக் கொண்டகப்பல் ஒன்று தற்போது கொரவலப்பிட்டிய கடலில் நங்கூரமிட்டுள்ளதாகவும், அதன் தரத்தை பரிசோதித்த பின்னர் எரிவாயு இருப்புக்களை விநியோகிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிபர். ஆசிரியர்...

மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கிணங்க இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்காக தேசிய கம்பள ஆணைக்குழு மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாட்டுடன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறையாகும் வகையில் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே, 2020 ஆம் ஆண்டில் பயிலுனர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் வழங்குவதற்கு பொதுநிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

51,682 பயிலுனர் பட்டதாரிகளுக்கு இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களில் ஒரு வருட பயிற்சியை நிறைவுசெய்த பட்டதாரிகளுக்கு ஜனவரி 03ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒரு வருட பயிற்சியை நிறைவுசெய்யாத பட்டதாரிகளுக்கு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

திருமலை...

தமது அறிவின்படி இந்த ஒப்பந்தம் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்றும், ஒப்பந்தத்தை இரத்து செய்ய நீதிமன்றத்தின் தலையீட்டை நாடுவதற்கு மட்டுமே தங்களுக்கு விருப்பம் உள்ளது என்றும் தேரர் கூறினார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகம் தொடர்பான உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதால், ஒரு வாரத்திற்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என நம்புவதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில இந்த வார தொடக்கத்தில் தெரிவித்தார்.

ஒப்பந்தத்தின் அடிப்படையில், வளாகத்தில் உள்ள பல எண்ணெய் தாங்கிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட புதிய நிறுவனம் நிறுவப்படும், அதே நேரத்தில் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் பல எண்ணெய் தாங்கிகளை நீண்டகால அடிப்படையில் இயக்க அனுமதிக்கப்படும் என சொல்லப்பட்டது.

புதியவகை...

கடுமையான அறிகுறிகளை ஏற்படுத்தும் டெங்கு 3 எனப்படும் இந்த நோய் குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் வேகமாக பரவி வருவதாக அவர் கூறினார்.

இதற்கு முன்னர் டெங்கு 2 என்ற பிறழ்வு நாட்டில் அதிகளவில் பரவி வந்ததாக தெரிவித்த தீபால் பெரேரா, ஒருவருக்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் தொடர்ந்து காய்ச்சல் இருந்தால், உடனடியாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

டெங்கு நுளம்புகள் வேகமாக பரவுவதால், டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அழித்து, டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என விசேட வைத்தியர் சுட்டிக்காட்டினார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட 50 சிறுவர்கள் தற்போது கொழும்பு டேடி ஹிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கற்பனையின்...

அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

19 ஆவது நூற்றாண்டில் 20வது நூற்றாண்டில் எரிபொருள் பெறுமதியாக இருந்தது. ஆனாலும் 21 ஆவது நூற்றாண்டில் தரவுகள் தகவல்கள் மிகவும் பெறுமதியானது. ஊடகவியலாளர்கள் தகவல்களையும், தரவுகளையும் மிகவும் சிறப்பான முறையில் கேரிக்கு தகவல்களை வெளியிட வேண்டும்.

உலகில் மிகப் பெரிய நிறுவனங்களை எடுத்துப் பாருங்கள். சரியான தரவுகளை கொண்டுள்ளதாக இருக்கும். அதேபோன்றுதான் ஊடகவியலாளர்கள் சரியான தகவல்களையும், தரவுகளையும் பெற்றுக்கொண்டு செய்திகளை வெளியிட வேண்டும்.

நானும் ஒரு ஊடகவியலாளன் என்ற வகையில் கடமையாற்றிய காலப்பகுதியில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். ஏனென்றால் அந்த சம்பவம் எனது மரண வேளையில் கூட நினைவில் இருக்கும் என்பது கலைக்குரிய ஒரு விடயம்.

இலங்கையின் முதலாவது எச்.ஐ.வி நோயாளி ஒருவர் இனம் காணப்பட்ட காலப்பகுதியில் நான் எழுதிய செய்தியில் அவ்வாறு இனங்காணப்பட்ட எச்.ஐ.வி நோயாளியின் பெயரினை கட்டிக்காட்டி இருந்தேன்.

எழுதப்பட்ட நாளிதழ் ஒன்றினால் பாதிக்கப்பட்ட நோயாளியின் குடும்பம் பல விளைவுகளை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது. இதனால் என்மீது நிறுவனத்தின் மூலம் விசாரண ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

எனவே செய்தி ஒன்றை பிரசுரிக்கும் முன்னர் அந்த செய்தி தனிப்பட்ட நபரை குறிக்கின்றதா எதிர்காலப் பிரச்சினைகள் ஏதும் ஏற்படுமா என தீர விசாரித்து அதன் பின்னர் அந்த செய்தியினை பிரசுரிப்பது என்பதே முக்கிய விடயமாகும் எனவும் ஊடக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரல, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கலாம்

அழையுங்கள்
0761393805

அரச பணியாளர்...

ஓய்வுபெறும் வயது 62 ஆக காணப்பட வேண்டும் என பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தினூடாக குறித்த சங்கம் இதனை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய ராசி பலன்

07.01.2022 வெள்ளிக்கிழமை மார்கழி 23

ஜோதிடர் நற்பவி

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

நட்சத்திரம்: பூரட்டாதி
காலை 6.21 - 08.01.2022
காலை 6.20 வரை

யோகம்: வியத்யாதம்
பிற்பகல் 1.12 வரை

வரியான்
பி.ப 1.12 - 08.01.2022

காலை 11.41 வரை

திதி: பூர்வ பட்ச பஞ்சமி
காலை 11.10 வரை

பூர்வ பட்ச ஷஷ்டி
காலை11.10
-08.01.2022

காலை 10.42 வரை

முற்கரணம்: பாலவம்
கா 11.10 வரை

பிற்கரணம்: கௌலவம்
காலை11.10- இரவு 10.49

சுப நேரங்கள்
காலை 6.25 - 7.52
மாலை 5.08 - 6.09

அசுப நேரங்கள்

ராகு காலம்
காலை 10.49 - பி.ப12.17

குளிகை காலம்
காலை 7.53 - 09.21

எமகண்ட காலம்
மாலை 3.13 - 4.41

துர் முகூர்த்தம்
காலை 8.46 - 9.32
பிற்பகல் 12.40 - 1.27

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

மேஷம்: பரம்பரை வணிகத்தில் இலாபங்கள் அதிகரிக்கலாம். மாணவர்களின் உயர்கல்விக்கு நல்ல நிலை உருவாகலாம். காதலில் இனிமை பெருகும். வீட்டில் ஒரு மங்கள நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்படலாம்.

ரிஷபம்: சட்டம் சம்பந்தப்பட்ட சிக்கல் நீங்கலாம். வணிகத்தில் பங்குதாரர்கள் உருவாகலாம். பணிகளில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கலாம். இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும்.

மிதுனம்: திருமண வாழ்வில் அன்புடன் இருந்து அதிருப்தியை நீக்கிக் கொள்ளலாம். புதிய தொழில்நுட்ப ஆர்வம் அதிகரிக்கலாம். ஆன்மீகவாதிகளின் உறவுகள் சிறப்புறும். உடல் நலம் சீராகும்.

கடகம்: மருத்துவ செலவு ஏற்படலாம். காதல் உறவில் கவனம் தேவைப்படலாம். செரிமான பிரச்சினைகள் ஏற்படலாம். அத்தியாவசியப் பொருட்களின் குறைவால் மன நிம்மதி குறையலாம். இறைவனக்கம் தேவை.
சந்திராஷ்டமம்: ஆயிலியம் நட்சத்திரத்திற்கு
அ.கா 12.29 - 08.01.2022
அதிகாலை 12.15 வரை

சிம்மம்: வாழ்க்கைத்துணை பிறந்த இல்லத்தில் இருந்து சுப செய்திகள் கிடைக்கக்கூடும். வணிகத்தில் அல்லது பணியில் சில இலக்குகள் உங்களால் தீர்மானிக்கப்படலாம். இல்லத்தில் உங்களுடன் அனைவரும் ஆதரவாக இருக்கலாம். வேலைத்தளத்தில் ஒரு பெரிய பதவி கிடைக்கப் பெறலாம்.
சந்திராஷ்டமம்: மகம் நட்சத்திரத்திற்கு 08.01.2022 அ.கா 12.15 - 09.01.2022 அ.கா 12.53 பூரம் நட்சத்திரத்திற்கு 09.01.2022 அ.கா 12.53 10.01.2022 அ.கா 02.20

கன்னி: வேலைத்தளத்தில் சக பணியாளர்களின் சில செயல்களால் சிரமங்கள் ஏற்படலாம். வணிகத்தில் பண இலாபம் மேம்படும். உங்கள் புதிய தொடக்கங்களுக்கு தேவையான படைப்பு சிந்தனைகள் மனதில் தோன்றலாம்.

துலாம்: பிரச்சினைகளுக்குரிய விடயங்களில் தீர்வு கிடைக்கலாம். ஊடகத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். காதலர்கள் திருமண சம்மதத்தை, குடும்பத்தில் பெறும் முயற்சியில் நன்மை கிடைக்கலாம். தன்னம்பிக்கை நிறைந்த நாளாக அமையலாம்.

விருச்சிகம்: அலுவலகத்தில் பணி குறைவாக இருந்தாலும் உழைப்பு அதிகம் தேவைப்படலாம். தொன்மை தொற்று பிரச்சினை சிறிய அளவில் உண்டாகலாம். பழைய பிரச்சினைகள் சிறிய கவலை தரலாம். இறைவனக்கம் நன்மை.

தனுசு: வேலைத்தளத்தில் இன்று சிறந்த நாளாக அமையலாம். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவு செய்யலாம். சமூக உறவுகள் வலுப்படும். விலை மதிப்புமிக்க பொருட்களை வாங்கும் முடிவுகள் எடுக்கப்படலாம்.

மகரம்: நிதி சம்பந்தப்பட்ட விடயங்களில் தாமதம் உண்டாகலாம். கடன் வாங்குவது தொடர்பான விடயங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். தேவையற்ற பிரச்சினைகள் உண்டாகலாம். இறைதியானம் நன்மை.

கும்பம்: வேலைத்தளத்தில் பணித்திறன் மேம்படும். வணிக செயல்பாடுகள் நல்ல நிலை பெறும். கலைத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல நிலை உருவாகலாம். தேவையற்ற செலவுகள் உங்களால் கட்டுப்படுத்தப்படும். தம்பதியிடையே இனிமை பெருகும்.

மீனம்: சில வேலைகள் அளவுக்கு மீறிய உற்சாகத்தால் கெடலாம். வெளிநாட்டில் இருந்து பண வருவாய் கிடைக்கலாம். பிரச்சினைகளில் அலட்சியம் தவிர்ப்பது நல்லது.

உணவு சமைக்க நாட்டு மக்களிடையே அச்சம்: 07 பேர் பலியானமைக்கு விசாரணைகள் எங்கே?

எரிவாயு நெருக்கடியை தீர்க்க முடியாமை குறித்து எதிர்க்கட்சி கேள்வி

நான்கு மாதங்களாகியும் எரிவாயு நெருக்கடியை இந்த அரசாங்க தீர்க்க முடியவில்லை. தற்போது இந்த நாட்டு மக்கள் உணவு சமைக்க அஞ்சுகின்றனர். இன்று 1000க்கும் மேற்பட்ட எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறி ஏழு பேர் பலியாகியுள்ளனர். இதற்கு யார் பொறுப்பு? கலவையில் ஏற்பட்ட மாற்றத்தால் வெடிப்பு ஏற்பட்டதாக நிபுணர்கள் கூறுகின்றனர். கப்பல்களில் தரமற்ற எரிவாயு விடப்படுவதால் வாயுவின் கலவை மாறியுள்ளதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். இதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று கேட்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

எமது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் சென்று சி.ஐ.டியிடம் முறைப்பாடு செய்தனர். பல முறை முன்னேற்றங்களை ஆராய சென்றனர். ஆனால், எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. ஏழு பேர் கொல்லப்பட்டாலும் கொலைக்கு காரணமானவர்கள் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது. லிட்றோ நிறுவனத் தலைவர் தவறு ஏற்படுள்ளதை ஏற்றுக் கொண்டுள்ளார். பணிப்பாளர் சபை உள்ளிட்ட அமைச்சர் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

இன்று மக்களுக்கு வீட்டில் கேஸ் இல்லை,

ஹோட்டல்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன, கொத்து, ஆப்பம் போடுபவர்கள் அச்சம் காரணமாக வேலைக்கு வருவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியில் நாம் இதற்காக நீதிமன்றத்தை நாட தீர்மானித்துள்ளோம். அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம்.

ஜனாதிபதியை விமர்சிக்கும் வகையில் எவரேனும் கருத்து வெளியிட்டால் அவர் கைது செய்யப்படுவார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். மீறமேரேயில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கிராமத்துடனான உரையாடல் நிகழ்வின்போது ஜனாதிபதி சென்று அங்குள்ள பாடசாலையும் வீதியும் அமைப்பதாக கிராம மக்களுக்கு உறுதியளித்தார். இது தொடர்பான விடயங்களே குறித்த நபர் வலையொளி ஊடகம் மூலம் கேள்வி எழுப்பினார். இன்று அவர்களை கைது செய்யும் நிலை உருவாகியுள்ளது. இதுதான் இன்று நாட்டின் நிலைமை. நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன ஊடகவியலாளர் சந்திப்பின்போது கூறிய ஓர் விடயம் தொடர்பாக பொலிஸ் வாக்கு மூலம் வழங்குமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் வாக்கு மூலம் எடுக்க வருமாறும் உத்தரவிட்டார். இன்று சுதந்திரம் பறி போயுள்ளது. இவர்கள் சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு தயாராகிறார்களா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. மக்களுக்காக பேச வேண்டிய நாடாளுமன்றம் ஒன்றரை மாதமாக மூடப்பட்டுள்ளது. இது பிரச்சினைக்குரிய விடயம். அத்தியாவசியப் பொருட்கள் இல்லை, உணவு இல்லை, பால் மா, எரிவாயு, சீனி என்றவாறு வரிசைகள் மறுபுறம். அரிசி விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. மரக்கறிகள் 500 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன.

நாடாளுமன்றத்தை துரிதமாக கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் சொத்துகளை விற்பனை செய்வதை கட்டுப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது. பணம் அச்சடிக்கப்படுகிறதா என்பதை நாடாளுமன்றம் அறிய வேண்டும். இன்று அரசாங்க ஊடகவியலாளர்களே குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். இந்த நாட்டில் ஜனநாயகம் நாளுக்கு நாள் அழிக்கப்பட்டு வருகின்றது.

பொலிஸ் பாதுகாப்பு இல்லாமல் நான்கைந்து நெல் வயல்களில் இறங்குங்கள் என்று விவசாய அமைச்சருக்கு சவால் விடுக்கிறேன். அதேபோல் ஜனாதிபதியிடமும் சொல்கிறேன், முடிந்தால் நல்ல நெல் வயலில் இறங்குங்கள், அவ்வாறு போனால் திரும்பி வர வேண்டிய நிலை ஏற்படாது.

மண்கும்பானில் அமைக்கப்பட்ட படகு கட்டும் தொழிற்சாலையை அமைச்சர் டக்ளஸ் திறந்து வைப்பு

(திகாமடுல்ல நிருபர்)

யாழ். மண்கும்பான் பிரதேசத்தில் அமைக்கப் பட்டுள்ள படகு கட்டும் தொழிற்சாலை மற்றும் பயிற்சி நிலையம் என்பன கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று (06) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வெளிநாட்டு மற்றும் இலங்கை தனியார் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ள குறித்த படகு கட்டும் தொழிற்சாலை மூலம் மண்கும்பான் பிரதேசத் தினை சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப் பட்டுள்ளதுடன் பிரதேசத்தின் வளர்ச்சிக்கான பொருளாதார நன்மைகளும் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2009 இற்கு பின்னரான சூழலில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்திகளை உருவாக்கி, அமிற்த வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப வேண்டும் என்ற வேலைத் திட்டத்தின் வெளிப்பாடாக இவ்வாறான தொழிற்பேட்டைகள் எமது பிரதேசங்களில் தற்போது உருவாகி வருவதாக இந்த படகு கட்டும் தொழிற்சாலையை அங்குரார்ப்பணம் செய்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், தீவகப் பகுதியில் வேலைவாய்ப்பின்றி காணப்படும் இளைஞர் யுவதிகளின் தொழில் முயற்சிகளான வாழ்வாதாரத்தினைப் பெற்றுக்கொடுக்க சுற்றுலாத்துறையின் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், "கடற்பரப்பினான துரித அபிவிருத்தி சேவையினான பங்களிப்பினை வழங்க தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்த நிலையில் இதற்கான நடவடிக்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு மிகுந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளுகின்றேன் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இவ் நிகழ்வில் இலங்கை கப்பற்றுறை கூட்டுத்தாபனத்தின் தலைவர் வீரமன்னன் ராஜவே, வடபிராந்திய கடற்றொழில் கட்டளைத்தளபதி அட்மிரல் பிரியந்த பெரேரா, யாழ். இந்திய உதவித்துணைத் தூதரகத்தின் பதவிநிலை அதிகாரி, வேலணை பிரதேச சபையின் தலைவர் சுருணாகரகுருமூர்த்தி உள்ளிட்ட அதிகாரிகள் சுற்றுலாத்துறை அதிகாரிகள், வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே படகு கட்டும் தொழிற்சாலை பணிகளுக்கான ஒரு வருடப் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

மண்கும்பானில் வெளிநாட்டு - உள்ளூர் தனியார் முதலீட்டாளர்களினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் தொழிற்சாலைக்கான பணியாளர்களாக பிரதேச இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சியளிப்பதற்கு முதலீட்டாளர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தடுப்புக்காவல் கைதி தற்கொலைக்கு முயற்சி

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

(யாழ். செய்தியாளர்)

பருத்தித்துறை பொலிஸ் நிலையை தடுப்புக் காவலில், தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில் பொலிஸாரினால் காப்பாற்றப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அல்வாய் பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே அவ்வாறு உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

குறித்த நபர் தனது மனைவியை தாக்கியதாக அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதன் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்து, பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் தடுத்து வைத்திருந்தனர்.

அந்நிலையில், குறித்த நபர் தடுப்புக்காவலில் உள்ளபோது தூக்கிட்டு தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

அதனை கண்ணுற்ற பொலிஸார் அவரைக் காப்பாற்றி மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எரிவாயு அடுப்பு வெடித்ததால் மன்னாரில் வீடு எரிந்து நாசம்

(மன்னார் நகர் செய்தியாளர்)

மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தரவான் கோட்டை பகுதியில் எரிவாயு வெடிப்புச் சம்பவம் ஒன்று நேற்று (06) நண்பகல் பதிவாகியுள்ளது.

நேற்றையதினம் இவ்வாறான வெடிப்பு சம்பவம் இடம்பெற்று பெண் வசித்த முழு வீடும் எரிந்து நாசமாகியுள்ள நிலையில் அருகில் இருந்த கிராம மக்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது.

தரவான் கோட்டை பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலில் ஈடுபடும் பெண் ஒருவரின் வீட்டிலேயே மேற்படி வெடிப்பு சம்பவம் காரணமாக வீடு முற்றாக எரிந்து நாசமாகிய நிலையில், குறித்த பெண் அதிர்ச்சியின் காரணமாக மயக்கமடைந்த நிலையில், மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசிப்பதுடன் மனம்பொருள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு வந்தநிலையிலேயே இந்த நிலையில், மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நகரசபை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைத் தந்ததுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்திற்கு என தனியான ஒரு தீயணைப்பு ஏற்பாடு இன்மையால் இவ்வாறான பல தீவிபத்துகள் பாரிய சேதங்கள் ஏற்பட்ட பின்னரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மூதாட்டியின் தங்க நகை திருட்டு

(யாழ். செய்தியாளர்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த வயோதிபப் பெண்மணியின் 3 பவுன் நகை திருடப்பட்டுள்ளதாக, பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் குறித்த வயோதிப் பெண் நேற்று (06), சிகிச்சையின் நிமித்தம், "எக்ஸ்ரே" எடுப்பதற்காக சென்றபோது, தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலி மற்றும் காப்பு ஆகியவற்றினை கழற்றி தனது கைப்பையினுள் வைத்துச் சென்றுள்ளார்.

திரும்பி வந்து கைப்பையினை பார்த்தபோது, அதனுள் இருந்த நகைகள் களவாடப்பட்டிருந்தமையை கண்ணுற்று, வைத்தியசாலை நிர்வாகத்திடம், முறையிட்டுள்ளார்.

நிர்வாகத்தின் அறிவுறுத்தலுக்கமைய வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருவோர் நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை கொண்டு வருவதனை தவிர்த்துக்கொள்ளுமாறு, வைத்தியசாலை நிர்வாகம் பல தடவைகள் எச்சரித்து வந்துள்ளது.

தினமும் வைத்தியசாலைக்கு பெருமளவானோர், பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருவதனால், சிகிச்சைக்கு வருவோர் தமது உடைமைகளை தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அதனால் பெறுமதியான உடைமைகளுடன் வருவதனை தவிர்த்துக்கொள்ளுமாறு, வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துறிமைக் காவலன்
இல. 91, வீஜோரா மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 07ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

கசகஸ்தான் சொல்லும் செய்தி!

எரிபொருள் விலை உயர்வை கண்டித்து கசகஸ்தானில் பெரும் போராட்டம் வெடித்த நிலையில் அதனைச் சமாளிக்க முடியாமல் பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு இராஜினாமா செய்துள்ளது.

போராட்டங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக அங்கு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளபோதும் தொடர்ந்தும், ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

இதையடுத்து அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இணைய வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

எண்ணெய் வளங்களை கொண்ட மத்திய ஆசிய நாடுகளுள் ஒன்றான கசகஸ்தானில் புத்தாண்டு முதல் திரவ பெற்றோலிய எரிவாயுக்கான விலை அதிகரித்தது. இதற்கு அந்நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதி நாடான கசகஸ்தானில் விலை உயர்வு நியாயமே இல்லை எனக் கூறி மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். விலை உயர்வை எதிர்த்து தலைநகர் அல்மாட்டி மற்றும் மேற்கு மாகாணமான மங்கிஸ்டா உள்ளிட்ட பல நகரங்களில் பல ஆயிரக்கணக்கானோர் வீதிகளில் இறங்கிப் போராடினர்.

போராட்டக்காரர்களால் தலைநகர் அல்மாட்டி மாநகராட்சி அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டது. மேலும் அரச கட்டடங்கள், வாகனங்கள் எரிக்கப்பட்டன. போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

போராட்டத்தை கட்டுப்படுத்த முயன்று பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே பெரும் மோதல் வெடித்தது. பொலிஸார் கூட்டத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

எனினும், எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் திரண்டதால் வேறு வழியின்றி பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு இராஜினாமா செய்துள்ளது. இந்த இராஜினாமாவை கசகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் ஏற்றுக் கொண்டார்.

இதையடுத்து, அந்த நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. மக்கள் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், எரிவாயு விலையை கட்டுப்படுத்துமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை, அரசுக்கு எதிரான போராட்டம் சில தரப்புகளின் தூண்டுதலாலேயே இடம்பெற்றதாக ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் விமர்சித்துள்ளார். இந்த எதிர்ப்புகள் நாட்டின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளி எனத் தெரிவித்த அவர், சதிகாரர்களுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

ஜனாதிபதி என்ற முறையில், எங்கள் குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் அமைதியைப் பாதுகாக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். கசகஸ்தானின் ஒருமைப்பாடு பற்றி கவலைப்படுகிறேன் என நேற்றுமுன்தினம் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோகாயேவ் தெரிவித்தார்.

இதேவேளை, அரச எதிர்ப்பு போராட்டக்காரர்களை தீவிரவாதிகள் என வர்ணித்த அல்மாட்டி நகரின் பொலிஸ் தலைமை அதிகாரி கனாட் டைமர்டெனோவ், அவர்கள் 500 பொதுமக்களைத் தாக்கி நூற்றுக்கணக்கான வணிக நிறுவனங்களை சூறையாடியதாக குற்றஞ்சாட்டினார்.

கசகஸ்தானின் நிலைமை இலங்கைக்கும் ஒரு செய்தியை செல்லியிருக்கிறது. மக்கள் சக்தி முன் ஆட்சியதிகாரம் என்பனவெல்லாம் கால் தூசுக்குச் சமன் என்பதுதான் அந்த செய்தி. அதேபோல மக்களின் சக்தியை குறைத்து மதிப்பிடக் கூடாதென்பதும் இதிலுள்ள மற்றுமொரு செய்தி.

கடந்த 1973-74 ஆண்டுகால எண்ணெய் பிரச்சினைகளும் உலக பொருளாதார மந்தநிலையும் இலங்கை மீது அப்போது கடும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்பு, குறிப்பாக எண்ணெய் மற்றும் உணவு இறக்குமதியில் விலையேற்றம், அந்நியச் செலாவணி நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது. உணவு இறக்குமதி மீது கடும் கட்டுப்பாடுகள், அரிசி போக்குவரத்தில் அரசின் ஏகபோக உரிமை மற்றும் சம்பளக் கட்டுப்பாடு போன்றவற்றை உள்ளடக்கிய தேசியப் பொருளாதார ஒழுங்குமுறையை அப்போதைய நிதி அமைச்சர் என்.எம். பெரேரா அறிவித்தார். இது பிற்காலத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் வேலையின்மை, தொழில் நிரந்தரமின்மை மற்றும் விலைவாசி அதிகரிப்புக் கடுமையான வறுமைக்கும் நூற்றுக்கணக்கானவர்களின் பட்டினிச் சாவுக்கும் வழிவகுத்தது.

பின்னர் 1976இல் வெடித்த பொது வேலை நிறுத்தத்தையும் கிராமப்புறத்தில் நிலவிய அமைதியின்மையை பயன்படுத்திக்கொண்ட வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சி, 1977இல் ஆட்சிக்கு வந்தது. இது இலங்கையின் தேசிய பொருளாதார ஒழுங்குமுறைகளை உடனே கலைந்து, திறந்தநந்தை கொள்கைகளை அமுல்படுத்தி, நாட்டை சர்வதேசத்துடன் ஒருங்கிணைத்து எல்லாப் பிரச்சினைகளையும் வலிய உள்வாங்கியது.

அப்போதைய ஐ.தே.க. ஆட்சி, எதேச்சதிகார நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்தி பொருளாதாரத்தையும் பதம்பார்த்தது.

அதன் பின்னர் இதுவரை கடனில் மூழ்கியுள்ள இலங்கை அரசாங்கம், 2024 வரை, வருடாந்தம் 4.5 பில்லியன் டொலர்களை வெளிநாட்டு கடன்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருக்கிறது. அதற்காக இந்த மாதம் அது, இந்தியாவிடமிருந்து கடனை வாங்கியுள்ளதுடன், வேறு நாடுகளிடம் இருந்தும் அதிக கடன் கேட்டு தொடர்ந்து மன்றாடி வருகிறது. வர்த்தக கடன்களைப் பெறுவது மேலும் மேலும் கடினமாகி வருவதால், கொழும்பு அரச பணத்தை அச்சடிக்கவும் செய்கின்றது.

அரசின் இந்த செயற்பாடுகளால், மோசமான பொருளாதார கொள்கைகளால் தொழிலாளர்களும் ஏழைகளும் எப்போதும் பாதிக்கப்படுகின்றனர். அன்றாடம் தொலைக்காட்சியில் செய்திகளை பார்க்கும்போதும் ஊடகங்களில் செய்திகளை கேட்கும்போதும் அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் நிற்கும் மக்கள் தெரிவிக்கும் கருத்துகள், இலங்கை இன்னுமொரு கசகஸ்தானாக மாறிவிடுமோ என்ற அச்சத்தையே தருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் திறந்த பொருளாதாரத்தினால் சீரழிந்த நாடு, இன்னமும் மோசமான அரச பொருளாதார கொள்கைகளால் திக்குமுக்காடிக்கொண்டிருக்கிறது. இலங்கை கசகஸ்தானாக மாறிவிடாமல் இருந்தால் தான் புதுமை.

பதுங்கித் தாக்கும் கடலடி ட்ரோன்!

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டால், எதிரி நாட்டினரிடம் விமானிகள் சிக்கிக்கொள்ளும் அபாயம் உண்டு. இதைத் தவிர்க்கவே ஆளில்லாமல் பறந்து தாக்கும் ட்ரோன்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதற்கென பல ஆயிரம் கோடி டொலர்களை அமெரிக்காவின் பாதுகாப்பு அமைப்பான தார்ப்பா செலவளித்திருக்கிறது. அதற்கு ஏற்ற நல்ல பலன்களையும் கடந்த இருபது ஆண்டுகளில் அது அறுவடை செய்துள்ளது.

தற்போது, நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு மாற்றாக, கடலடி ட்ரோன்களை உருவாக்க நினைக்கிறது தார்ப்பா. அதற்கான முதற்கட்ட விண்ணப்பங்களை சரிபார்த்து, இரண்டாம் கட்டமாக, இரண்டு தனியார் பாதுகாப்பு தொழில் நிறுவனங்களுக்கு ஆணை வழங்கியுள்ளது. கடலுக்கடியில் மனிதர்கள் இன்றி தானாகவே பயணிக்கும் திறன் கடலடி தாவரங்கள், பெரிய மீன்களிடம் சிக்காமல் செல்லுதல், பாறைகளின் இண்டு இடுக்குகளில் மாட்டிக்கொள்ளாமல் வேகமாக பயணித்தல், தேவைப்பட்டால் தூரெதொட்டு பதுங்கியிருத்தல், குண்டுகளை சுமந்து சென்று இலக்கை நெருங்கித் தாக்குதல், இப்படி பல போர்ச் செயல்களை, மனித உதவியின்றி செய்து முடிக்கும் திறன் அந்த ட்ரோன்களுக்கு இருக்கவேண்டும்.

மேலும், கடலடி நீரோட்டங்களை வைத்தே அவை மின்கலன்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். மின்சாரத்தில் இயங்கும் நீர்மூழ்கி ட்ரோன் என்பதால், அது தனது பராமரிப்பை தானே பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும், எதிரிகளின் ரேடார் போன்றவற்றில் சிக்காமல், பதுங்கி தாக்கும் திறமையும் அதற்கு இருக்க வேண்டும்.

இத்தனையையும் செய்து காட்டும் கடலடி ட்ரோனுக்கு பல பில்லியன் டொலர்கள் ஒப்பந்தம் கிடைக்கும் என தார்ப்பா அறிவித்திருக்கிறது.

ஆளை மயக்கும் காற்றாலை



சில சமயம், வடிவமைப்பாளர்களே விஞ்ஞானிகள் போலவும் செயல்படுவதுண்டு. நியூயோர்க்கை சேர்ந்த ஜோ டுசெட் என்பவர், ஏன் வீட்டில் பொருத்தும் காற்றாலைகள் அழகு பொருட்கள் போலவும் இருக்கக்கூடாது என்று சிந்தித்தார். அதன் விளைவாக உருவானது தான் சுழலும் சுவர் என்ற கைனெடிக் வால். பெயருக்கு ஏற்றபடி சுவர் போலவும், அதில் சுழலும் விசிறிகளும் பொருத்தப்பட்டுள்ளன. லேசான காற்றடித்தாலே இந்த சுழல் விசிறிகள் இயங்குகின்றன.

அப்படி இயங்குவதை வேடிக்கை பார்ப்பதே ஆளை வசீகரிப்பது போல் உள்ளது. காற்றாலையை வீட்டில் பொருத்த வேண்டாம் என்று நினைப்பவர்கூட, இந்த சுழல் சுவரின் அழகைப் பார்த்தாவ், மாற்று எரிசக்தி பிரியர் ஆகிவிடுவார். ஒரு சுவரில் 25 செங்குத்து டர்பன்கள் இருக்கும்.

ஒவ்வொன்றும் 400 வோட் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யும். மொத்தம் 10 கிலோவோட் மின்சாரம் இதன் மூலம் தயாரிக்க முடியும். வீட்டுச் சுவர்கள் மேலேயோ, மொட்டை மாடியிலோ இந்த சுழலும் சுவர் காற்றாலையை மாட்டிவைக்கலாம்.

உதவும் காந்தப்புலம்

கடலுக்கடியில் நிகழும் நிலநடுக்கமே சுனாமி எனப்படும் ஆழிப் பேரலைக்குக் காரணம். ஆழிப் பேரலை ஏற்படும் பகுதியில், அதற்கு முன்பாக, பூமியின் காந்தப்புலத்தில் மாறுதல்கள் ஏற்படும். இது விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆனால், காந்தப்புல மாறுதலுக்கும், கடல் அலைகள் மட்டம் உயர்வதற்கும் உள்ள தொடர்பை விஞ்ஞானிகளால் இதுவரை கண்டறிய முடியவில்லை.

அன்மையில், ஜப்பானிலுள்ள கியோட்டோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள், 2009இல் சமோவாவிலும், 2010இல் சிலியிலும் நிகழ்ந்த ஆழிப் பேரலைகளின் தரவுகளை வைத்து ஆராய்ந்தனர். அதன்படி, சுனாமிக்கு சில நிமிடங்கள் முன்பாக அந்தக் கடலடி நிலப்பரப்பில் புவிகாந்தப்புலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் நேர்ந்ததை அவர்கள் கண்டறிந்தனர்.

அந்த மாற்றத்தின் அளவை வைத்து, கடலலைகள் எந்த அளவுக்கு உயர்ந்து கரை நோக்கிச் செல்லும் என்பதையும் கணிக்க முடியும் என்று அவர்கள் நிறுவியுள்ளனர். இந்த ஆய்வு, ஜே.ஜி.ஆர். சொலிட் எர்த் இதழில் வெளியாகியுள்ளது.

ஸ்டியரிங் இல்லாத கூகுள் கார்

ஆட்கள் ஓட்டும் காருக்கு, தானோட்டி திறமையைக் கொடுத்து, ஒரு தனி வாடகைக் கார் சேவையை தொடங்கியது வேமோ கூகுளின் தாய் நிறுவனமான எல்பாபெட்டிற்கு சொந்தமான வேமோ, 2020 ஒக்டோபரில், அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரில் இந்த சேவையை தொடங்கியது.

அப்போது, கிரைஸ்லர் பசிப்பிகா என்ற பெரிய பெற்றோல் காரையே வேமோ தன் தானோட்டி சோதனைகளுக்குப் பயன்படுத்தியது. ஆனால், அன்மையில் அது புத்தம் புதிய மின்சார காரை, தானோட்டி சேவைக்கென்றே வடிவமைத்து அறிமுகப்படுத்தியது. அதில், வாகன ஓட்டிக்கான ஸ்டியரிங் இல்லை.

எக்சிலரேட்டர், பிரேக் போன்றவையும் இல்லை. ஆம், அந்த வண்டியில் அனைவருமே பயணியர்தான். பெரிய அளவிலான மினிவேன் மொடலில் இருக்கும் வேமோ தானோட்டி, பயணியர் வசதிக்காக, தாழ்வான தளத்தையும் அகலமான கதவுகளையும் கொன்டுள்ளது.

இந்த காரை ஸ்மீடனில் உள்ள ஒரு முகமை, வடிவமைப்பு செய்ய, அதை தயாரிக்கும் வேலையை, சீனாவிலுள்ள ஜீலி என்ற வாகன தயாரிப்பாளர்கள் உற்பத்தி செய்யவுள்ளனர். வேமோவின் தானோட்டியை வெளுத்துவது ஒரு செயற்கை நுண்ணறிவு மென்பொருள் தான், அது இதுவரை, தானோட்டியாகவே 3.2 கோடி கி.மீ. தூரம் அசல் சாலைகளில் ஓட்டியிருக்கிறது.

இத்தனை தூரம் பல நூறு வாகனங்கள் ஓட்டுனரில்லாமல், தானாகவே ஓட்டியும் உயிர் பலி கொண்ட விபத்துகள் ஏதும் நிகழவில்லை. ஐந்தாறு சிறு விபத்துகள் மட்டுமே நடந்துள்ளன. இந்த சிராய்ப்புகள் கூட, ஓட்டிவந்த மனித ஓட்டுநர்களின் தவறுதான் என்கிறது வேமோ.

மம்மிக்கு சி.ரி. ஸ்கேன்!



எகிப்திய பிரமிடுகளில் மம்மி எனப்படும், பாடம் செய்யப்பட்ட மனித உடல்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும். இன்று தொல்லியலாளர்கள் முள் அவை பெரும் சவால்களாக உள்ளன. அவற்றை பிரிக்காமல் முழுமையாக ஆராய்ச்சி செய்ய முடியாது.

பிரித்தால், வரலாற்றுச் சான்றுகள் நிரந்தரமாக சிதைக்கப்படும் ஆபத்து உண்டு. இந்த இடத்தில்தான் முப்பரிமாண சி.ரி. ஸ்கேன் தொழில்நுட்பம் உதவிக்கு வந்துள்ளது. எகிப்தோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இதை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளனர். சி.ரி .ஸ்கேன் கருவி, மனித உடலை அடுக்கடுக்காக படம் பிடித்துக் காட்டும் திறன் கொண்டது.

அந்தக் கருவி மூலம், பாடம் செய்த சடலத்துக்கும் பயன்படுத்துவது புத்திசாலித்தனமான ஒரு அணுகுமுறை தான். கி.மு., 1500களில் எகிப்தை ஆண்ட பாரோ அமென்ஹோடெப் - 1 என்ற மன்னரின் மம்மி, அகழ்வு செய்வோரால் 1881இல் கண்டெடுக்கப்பட்டது. அதை 2019இல் ஆராய்ச்சியாளர்கள் ஸ்கேன் செய்து ஆய்வு செய்துள்ளனர். அந்த ஆய்வின் முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

மன்னரின் உடலை, 12ஆம் நூற்றாண்டில் கொள்ளையர்கள் தோண்டி எடுத்து தங்க அணிகலன்களை பிரித்தெடுப்பதற்காக, சேதப்படுத்தியிருந்தனர். அதை சீர் செய்து அக்கால ஆட்சியாளர்கள் பாதுகாத்துள்ளதாக, சி.ரி.ஸ்கேன் செய்த ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அந்த மன்னரைப் பற்றி இன்னும் பல புதிய செய்திகள் வெளி வரக்கூடும்.

இன்றைய நாளில்...

* 1932 – ஜெர்மனியில் பிறந்த சுவிட்ஸர்லாந்து இயற்பியலாளர் எல்பர்ட் ஐன்ஸ்டைன் அமெரிக்காவுக்கு வருவதற்கு நுழைவாணை வழங்கப்பட்டது.
* 1936 – அவுஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரர் யாக் பிங்கிள்ட்டன் அடுத்தடுத்த நான்கு தேர்வுப் போட்டிகளில் சதம் எடுத்து சாதனை புரிந்தார்.
* 1972 – அப்போலோ திட்டத்தின் கடைசி விண்கலம் "அப்பல்லோ 17" சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இக்கலத்தின் விண்வெளி வீரர்கள் பூமியை விட்டு வெளியேறும்போது தி புளூ மார்பிள் புகைப்படத்தை எடுத்தனர்.
* 1982 – அமெரிக்காவின் டெக்சஸ் மாநிலத்தில் முதல் தடவையாக ஊசிமருந்து ஏற்றப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
* 1988 – ஆர்மீனியாவில் 6.8 அளவு நிலநடுக்கத்தில் ஏற்பட்டதில் 25,000 பேர் கொல்லப்பட்டு 400,000 பேர் வீடுகளை இழந்தனர்.
* 1988 – யசிர் அராபாத் இஸ்ரேலைத் தனிநாடாக அங்கீகரித்தார்.
* 1995 – கலிலியோ விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டு 6 ஆண்டுகளின் பின்னர் வியாழனை அடைந்தது.
* 2015 – ஜப்பானின் விண்கலம் அக்காத்சுக்கி வெள்ளிக் கோளின் சுற்றுவட்டத்தை அடைந்தது.
* 2017 – அவுஸ்திரேலியாவில் ஒருபால் திருமணம் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

நக்கல் நமசிவாயம்

வரிசையில நின்டு சாராயம் வாங்குறதா கொரோனா காலத்தில குடிகாரங்கள இந்த சனங்கள் ஏசினவயல்லோ.... அந்த குடிமக்கள் விட்ட சாபமோ என்னவோ இப்போ எல்லாத்துக்கும் வரிசையில நிக்க வேண்டியிருக்குது...

எந்தவொரு எதிர்க்கட்சியும் நாட்டின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொண்டதில்லை

சேருவிலவில் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

வரலாற்றில் எந்தவொரு எதிர்க்கட்சியும் நாட்டின் அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றதில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், முற்போக்கு பயணத்தில் ஈடுபட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்திக்கு, நாட்டின் அபிவிருத்திக்காக வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமிருந்தும் கூட உதவிகள் கிடைத்து வருவதாகவும் தெரிவித்தார்.

சேருவில தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தை நேற்று முன்தினம் (05) திறந்து வைத்து உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

சில சந்தர்ப்பவாதிகள் வாயை அடைப்பதற்காகவே நிதியுதவித் தொகை பெறப்பட்டதாக கூறுகின்றனர் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நமது நாட்டுக்கு எதிராக யாரேனும் செயற்படுவதாக இருந்தால், அவர்கள் எந்த வகையான நிதியுதவியையும் அல்லது வேறு எந்தவித வரப்பிரசாதங்களையும் வழங்கினாலுமோ தனது வாயை அடைக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் ஒரு மலக் கப்பலுக்கு முன் மண்டியிட்டமை என்பதை தான் தைரியமாக கூறுவதாகதெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இது அரசாங்கத்தின் அடிபணியும் தன்மையையும் பிரதிபலிக்கிறது எனவும் தெரிவித்தார்.

ஆட்சியைக் கைப்பற்றி அரசாங்கத்தை எவ்வாறு கொண்டு நடத்த முடியும் என சிலர் தன்னிடம் கேட்கின்றனர் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கம் இல்லாமல் எதிர்க்கட்சியில் இருக்கும் போதே தான் மேற்கொள்வதை வைத்து எவ்வாறு ஆட்சியை பிடித்த பின்னர் அரசாங்கத்தை கொண்டு நடத்துவது என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

பாரம்பரியமான எதிர்க்கட்சி எப்போதும் அதிகாரத்தைப் பெறுவதற்காக மட்டும் போராடுவதையே மேற்கொண்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தி அதிகாரத்தைப் பெறுவதற்காக போராடும் அதேவேளை, எதிர்க்கட்சியில் இருந்தபோதும் சமூக மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

06.01.2022 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	030 436	036 4346
கனேடியன் டொலர்	043 2045	05 0626
சீன யுவான் (ரென்மின்பி)	2 7774	21 0376
யூரோ	113 516	121 78 8
ஜப்பான் யென்	0 6 08	0 6555
சிங்கப்பூர் டொலர்	034 6881	04 4 1
ஸ்ரேலிங் பவுன்	156 5185	165 42
சுவிஸ் பிரான்ங்	104 0 2	111 5584
ஐ.அ.டொலர்	087 4 7	1 1 8881

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	422 1232
குவைட்	குவைட் தினார்	553 3566
ஓமான்	ஓமான் றியால்	411 0847
கட்டார்	கட்டார் றியால்	44 1067
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	42 4153
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	43 625

வலி. வடக்கு பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 151 பயனாளிகளுக்கு உணவுப் பொதிகள்

(மன்னார் நகர் செய்தியாளர்)

வட மாகாணத்தில் பாதிக்கப்பட்ட இரண்டாயிரம் மீனவ குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் வழங்கி வரும் நிலையில், நேற்று வியாழக்கிழமை (06) காலை வலி. வடக்கு பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், வட மாகாணத்தில் பாதிக்கப்பட்ட இரண்டாயிரம் மீனவ குடும்பங்களுக்கு நிவாரணப் பணியை முன்னெடுத்துவரும் நிலையில், வலி. வடக்கு பகுதியில் மீள்குடியேறிய மயிலிட்டி, தையிட்டி, ஊரணி பகுதிகளைச் சேர்ந்த 151 மீனவ குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரண பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் சமூக பொருளாதார நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிறாடோ தலைமையில், கிராம அலுவலர்கள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகளினால் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை மயிலிட்டி பொது மண்டபத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மீள்குடியேற்ற குழுத் தலைவர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு உலருணவுப் பொருட்களை மக்களுக்கு வழங்கி வைத்தனர்.

வறுமைக்கோட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தினால் கடந்த வருடம் குறித்த அத்தியாவசிய உலருணவுப் பொருட்கள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நிலையில், வடமாகாணத்தில் 2 ஆயிரம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு நபர் ஒருவருக்கு சுமார் 2ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதி வழங்கப்பட்டு வருகிறது.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக தொழில் வாய்ப்பை இழந்த, வறுமை கோட்டிற்குட்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குறித்த உலருணவுப் பொருட்கள் மன்னார் சமூக பொருளாதார நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிறாடோ தலைமையில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலர்வீதி பரடைஸ் ஆலய மகோற்சவம் நாளை ஆரம்பம்

கொழும்பு, ஆலர்வீதி, பரடைஸ் பிளேஸில் அமைந்துள்ள ஸ்ரீமகா காளியம்மன் ஆலய மகோற்வ முத்தேர் பவனி விழா நாளை 08ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மகோற்சவப் பெருவிழாவின் 09 ஆம் நாளான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 16ஆம் திகதி முத்தேர் பவனி இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இன்று காலை 5.30 மணிக்கு கணபதி ஹோமத்தைத் தொடர்ந்து முகூர்த்தக்கால் நடுதல், காப்புக் கட்டும் வைபவம் இடம்பெறவுள்ளதுடன் மாலை 5.30 மணிக்கு அனுக்ஞை, கிராம சாந்தி, வாஸ்து சாந்தி என்பன இடம்பெறவுள்ளன.

நாளையதினம் காலை 05 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் பூஜைகள் ஆரம்பமாகி காலை 10 மணிக்கு கொடியேற்ற விழா இடம்பெறவுள்ளது. அன்றைநாள் மாலை 5 மணிக்கு சாயரட்சை பூஜையுடன் ஆரம்பமாகி திருவிழா தொடர்ந்து நடைபெறவுள்ளது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் காலவரையறையற்ற வேலை நிறுத்தம்

சுகாதார தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான தீர்வுகளை சுகாதார அதிகாரிகள் தொடர்ச்சியாக வழங்கத் தவறியதையடுத்து, காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதாரத் துறையைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

வேலை நிறுத்தம் தொடர்பான திகதிகள் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவரான ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

சுகாதார வல்லுநர்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்காக இதுவரை பல அடையாள வேலை நிறுத்தங்களை முன்னெடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும், அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே சுகாதார நிபுணர்கள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை தீர்க்க முயற்சிக்க முடியாது எனவும், காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு செயற்குழு முடிவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வேலைநிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், அவர்களின் கோரிக்கைகள் மற்றும் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் விதம் தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்.

உலக நாடுகளில் ஒமிக்ரொன் பிறழ்வானது வேகமாக பரவி வரும் நிலையில், இது தொடர்பில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 37ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

(மன்னார் நகர் செய்தியாளர்)

மன்னார் வங்காலை பகுதியில் 1985 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் சேர்த்து படுகொலை செய்யப்பட்ட அப்பாவி சிறுவர்கள் மற்றும் பொது மக்களின் 37ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று (06) வியாழக்கிழமை நினைவு கூரப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணியளவில் வங்காலை புனித ஆனாள் தேவாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன்பாக நினைவேந்தல் இடம்பெற்றது.

1985ஆம் ஆண்டு தை மாதம் 6ஆம் திகதி வங்காலை தூய ஆனாள் ஆலய பங்கு பணி செயலாளராக கடமையாற்றிய அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் தங்கியிருந்த அப்பாவி சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் 10 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு 37 ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பொன்னாண்டோ ஆண்டகை தலைமையில் குழுக்கள் இணைந்து திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

இதன்போது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர், அயரின் செயலாளர் உள்ளடங்களாக அருட்தந்தையர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அருட்பணி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து வருகை தந்தவர்களும் அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

எட்டியாந்தோட்டை பொதுச் சந்தையில் மரக்கறி விலையின் நேற்றைய நிலைவரம்

கேகாலை, எட்டியாந்தோட்டை பொது சந்தையில் நேற்று (06) மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து காணப்பட்டன.

எட்டியாந்தோட்டை பிரதேசத்தில் அதிகளவான தோட்டங்கள் காணப்படுவதால் நேற்று எட்டியாந்தோட்டை பொதுச் சந்தையில் மரக்கறியின் விலை மிக அதிகமாக காணப்பட்டது.

விலை பட்டியல் பின்வருமாறு

போஞ்சி 250 கிராம் - 110 ரூபா
புடலங்காய் 250 கிராம் - 80 ரூபா
கறிமிளகாய் 250 கிராம் - 120 ரூபா
பீர்க்கங்காய் 250 கிராம் - 80 ரூபா
கெரட் 250 கிராம் - 100 ரூபா
கோவா 250 கிராம் - 90 ரூபா
வீக்ஸ் 250 கிராம் - 90 ரூபா
தக்காளி 250 கிராம் - 60 ரூபா
வட்டக்காய் 500 கிராம் - 70 ரூபா
உருளைக்கிழங்கு 500 கிராம் - 100ரூபா
வெங்காயம் 500 கிராம் - 80 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பினால் தோட்ட மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

"1976ஆம் ஆண்டு பஞ்ச காலத்தின் போது ஒரு குடும்பத்தில் ஏழு பிள்ளைகள் இருந்தபோதிலும், அப்போதிருந்த பெற்றோர் விவசாயம் செய்து தனது ஏழு பிள்ளைகளையும் வளர்த்தெடுத்தனர். தற்பொழுது விலைவாசி அதிகரிப்பினால் ஒரு குழந்தையைகூட வளர்ப்பதற்கு மிகச் சிரமப்படுகிறோம்" என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

தத்துவம் தங்கராசு

சுசில் பிரேமஜயந்த இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து விலகியதை அறிவிக்கும் வர்த்தமானியில் கையெழுத்திட்டுள்ள ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தர ஏற்கனவே பதவியை இராஜினாமா செய்தவர் ஆயிற்றே? பதவி விலகிய ஒருவர் இன்னொரு பதவி கீக்கத்தை எப்படி அறிவிக்க முடியும் என்று கேட்டிருக்கிறார் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க.

இது நல்ல கேள்வி. அதேபோல அரச புலனாய்வுத் தகவல் ஒன்றினையடுத்தே சுசில பதவிக்கம் செய்தோம் என்று கூறியுள்ளாரே தில்ல குட்டியாராச்சி எம்.பி. இதை தெரிந்து சொன்னாரா என்பது தெரியவில்லை.

இப்படி சொல்லியிருப்பதன்மூலம் சில விடயங்கள் தெரிகின்றன. ஆளுங்கட்சி அரசியல்வாதிகளை அரசு உளவு பார்க் கிறது. அத்துடன் ஆளுங்கட்சிக்குள் பலர் சதிவேலைகளை செய்ய ஆரம்பித்திருக் கிறார்கள்.

மைத்திரிபால சிறிசேன, முன்னைய மழிந்த அரசுக்குள் இருந்து வெளியேறியபோது நடந்த இரகசியப் பேச்சுகள் வைபர் ஊடாகவே இடம்பெற்றதாக அப்போது செய்திகள் வெளிவந்திருந்தன. இப்போதும் அப்படி செயல்களை பாவித்து பேச்சுகள் நடந்தாலும் யாருக்கு தெரியப்போகிறது? தில்ல குட்டியாராச்சி எல்லோரையும் அலெர்ட் செய்திருக்கிறார் போலும்.

பெருந்தோட்ட மக்களை மோசமாக சித்தரித்த முகப்புத்தக பதிவு

கடும் எதிர்ப்பால் பொதுவெளியில் மன்னிப்பு கோரிய வர்த்தகர்

டிக்கோயா நகரில் சம்பவம்

Sabaratnam Vaseeharan Sabaratnam
மலையகத்தாரை மனித சமுதாயத்துக்குள் இணைத்திட முடியாது.
இவர்கள் மிருக புத்தி உடையவர்கள்.
அன்பு பாச நேசம் மனித நேயம் கல்வி பொருளாதாரம் அனைத்தும் பூச்சிய நிலையில் உள்ள பீயர்கள். பட்டுத் திருந்துங்கள்.

(சிதார இராஷ்)

"பெருந்தோட்ட மக்களின் கல்வி நிலைமை, பொருளாதார நிலைமை, அறிவுத் திறன் ஆகியன மிகவும் தாழ் மட்டத்தில் இருப்பதாக" தெரிவித்து, ஹட்டன் டிக்கோயா நகரிலுள்ள வியாபாரியொருவர் அவரின் முகப்புத்தக கணக்கு பதிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 04ஆம் திகதி டிக்கோயா நகர வர்த்தக நிலையங்களை பூட்டி வியாபாரிகள் மற்றும் மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த வியாபாரியினால் கடந்த 03ஆம் திகதி அவரின் முகப்புத்தக கணக்கில் மேற்குறிப்பிட்டவாறு பதிவிடப்பட்டிருந்ததாகவும், சம்பந்தப்பட்ட வியாபாரி டிக்கோயா நகர மத்தியில் கல பெருந்தோட்ட மக்களிடமும் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது கோஷம் எழுப்பியதோடு, பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

பெருந்தோட்ட மக்களும் ஏனைய மாகாணங்களில் வாழும் மக்களை போன்று கல்வி நிலைமை, அறிவுத் திறன் மட்டம் மற்றும் பொருளாதார நிலைமையில் தற்போது உயர் நிலையை எந்தித்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்திருந்த பதாதைகளில் எழுதப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் மத்தியில் முன்னிலையான முகப்புத்தகத்தில் பதிவிட்ட குறித்த வியாபாரி, ஹட்டன் பொலிஸ் அதிகாரிகளின் கடுமையான பாதுகாப்புடன், தான் தெரியாமல் முகப்புத்தகத்தில் பதிவிட்டதாகவும், குறித்த பதிவு முகப்புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் சகல பெருந்தோட்ட மக்களிடமும் மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்து அவர் சகலரின் மத்தியிலும் கும்பிட்டு மன்னிப்புக் கோரினார்.

வீடியோவைக் காண...

அரசாங்கத்தை விமர்சிக்கும் தர்மக உரிமை சுதந்திரக் கட்சியின் தலைவருக்கு இல்லை

கண்டி ஊடக சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் திலும் பகிரங்கம்

(கண்டி நிருபர்)

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட நிலைதான் ஏற்பட்டிருக்கும். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசின் ஒரு முக்கிய கூறுமல்ல என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணியே பிரதான பங்கேற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பங்களிப்பு மிகக் குறைவாகும். கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது, பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டதால் 13 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. தனித்துப் போட்டியிட்டிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட அதே நிலைதான் ஏற்பட்டிருக்கும்.

ஏனெனில், தற்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் நாட்டின் தலைவராக இருந்தபோதுதான் குண்டு வெடிப்பில் நூற்றுக்கணக்கான பக்தர்களது உயிர்கள் பலியாகியுள்ளன. இதுபற்றி இந்திய உளவுத் துறை எச்சரித்திருந்தபோதும் அன்றைய பாதுகாப்பு அமைச்சரால் அதனைத் தடுக்க முடியவில்லை.

அப்படியான ஒருவருக்கு தற்போதைய அரசாங்கத்தை விமர்சிக்க எவ்வித தார்மீக உரிமையும் இல்லை. அப்படி யாரும் விமர்சிக்க விரும்பினால் அவரை விட்டு வெளியேறியபின் விமர்சிக்க முடியும் என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

சப்ரகமுவவில் உள்ளூர் கிழங்கு வகைகளை ஊக்குவிக்க விசேட வேலைத்திட்டம்

(இரத்தினபுரி நிருபர்)

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ளூர் கிழங்கு வகைகளை ஊக்குவிக்கும் விசேட வேலைத் திட்டமொன்று சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி மாகாணத்தில் உற்பத்தி செய்யப் பட்டுவரும் உள்ளூர் கிழங்கு வகைகளை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ அண்மையில் சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத் தொகுதியில் வைத்து பார்வையிட்டார்.

இதன்போது சப்ரகமுவ மாகாண விவசாயத் துறை அமைச்சின் செயலாளர் அநுர ஹேமகுமார,

மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுலா இதிகலவெல உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வால் குடிநீர் பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாமிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவலாக இடம்பெற்று வரும் சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்வு காரணமாக இரத்தினபுரி மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஆற்றங்கரைகள் அரிப்புக்குள்ளாகி உணவுப் பயிர்களும் குடி நீரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

விசேடமாக இரத்தினபுரி மாவட்டத்தை ஊடறுத்து ஓடும் வளவை கங்கை, களுகங்கை ஆகிய ஆறுகளின் இரு கரையோரங்களின் கிளையாறுகளிலும் இந்நிலை பாரதூரமாக காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் இந்த ஆறுகளின் கரைகளின் இரு மருங்கிலும் பாரிய குழிகள் ஏற்பட்டு ஆற்றின்கரைகள் அரிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் ஓடும் பெலிஹுல் ஓயா, ஹிரிகட்டு ஓயா, ஹுனுஓயா மற்றும் கிளை ஆறுகளின் நிலையும் இவ்வாறாகவே காணப்படுவதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகளும் சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமைகளுக்கு ஆறுகளின் வெள்ளப் பெருக்குகள் மாத்திரமன்றி, மழையற்ற காலப்பகுதிகளில் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு, மணல் அகழ்வு, காடழிப்பு போன்ற சட்டவிரோத மனிதச் செயற்பாடுகளும் இவ்வாறான சுற்றாடல் பாதிப்புகளுக்கு காரணமாக அமைவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்த உரிய கண்காணிப்பு நடவடிக்கைகளுடன் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்துகின்றனர்.

கென்யோன் நீர் மின் நிலையத்தில் திருத்தப் பணி

(மஸ்கெலியா நிருபர்)

கென்யோன் நீர் மின் நிலையை, நீர் மின் உற்பத்தி பழுதுபார்க்கும் பணி இடம்பெற்று வருவதால், மவுசாகலை நீர்த்தேக்கத்தில் இருந்து வரும் நீரை, மதகு வழியாக செல்லும் பிரதான சுரங்கப் பாதை மூடப்பட்டு, மவுசாகலை நீர்த் தேக்கத்தின் அடிப்பகுதியில் உள்ள குழாய் வழியாக வெளியேற்றி வருகின்றனர்.

இதன்மூலம் லக்சபான நீர் மின் நிலையத்திற்கும், பொல்பிட்டிய நீர் மின் நிலையங்களுக்கும் நீரை வழங்கி வருவதாக நீர் மின் நிலைய உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நீர் திறந்து விடப்பட்டு இப் பகுதியூடாக செல்லும் மவுசாகலை ஓயாவில் அதிகளவு நீர் செல்வதால் அந்த ஆற்றில் நீராட வேண்டாமென நீர் மின் நிலைய உயர் அதிகாரி பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அலிக் அலுவிஹாரவின் பாரியார் காலமானார்



(மாத்தளை நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான காலஞ்சென்ற மாத்தளை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அலிக் அலுவிஹாரையின் பாரியார் தினவதி கொப்பல்லாவ அலுவிஹார தனது 84ஆவது வயதில் நேற்று காலமானார்.

1938ஆம் ஆண்டு மே 19ஆம் திகதி பிறந்த இவர் 1957ஆம் ஆண்டு மே 09ஆம் திகதி அலிக் அலுவிஹாரவை திருமணம் செய்து கொண்டார்.

மாத்தளை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்ஜித் அலுவிஹார, வசந்த அலுவிஹார, முன்னாள் மாத்தளை மாநகர முதல்வர் டல்ஜித் அலுவிஹார மற்றும் செறான் அலுவிஹார, மனோ ரஞ்சனி அலுவிஹார ஆகியோரின் தாயாரான தினவதி கொப்பல்லாவவின் இறுதி சடங்கு நாளை சனிக்கிழமை மாலை மாத்தளை ஹிக்கொல்ல மெல்டொனல் பொது மயானத்தில் இடம்பெறும் என்று வசந்த அலுவிஹார தெரிவித்துள்ளார்.

கெலியா அஸ்ஸம்ஸ் வித்தியாலய அதிபராக பதினொரு வருடகாலம் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள தற்போதைய கம்பளை மரியாவத்த மஸ்ஜித் தலைவர் பவுஸுல் அமீனுக்கு பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு கெலியா அஸ்ஸம்ஸ் வித்தியாலயத்தில் இடம்பெற்றதுடன் இதன்போது இப்பாடசாலை அதிபர் முனாஸ் வலயக்கல்வி இணைப்பாளர் மஹ்ரூப், அபிவிருத்திக்குழு செயலாளர் நிலாம், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் என பலரும் கலந்துகொண்டனர்.

சிவனொளிபாதமலை பக்தர்களின் நலன்கருதி குருவிட்ட பிரதான பஸ் நிலையம் சுத்திகரிப்பு

(ஏ.ஏ.எம்.பாமிஸ்)

சிவனொளிபாதமலையை தரிசிப்பதற்காக இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட, எரந்த வீதி வழியாகச் செல்லும் பக்தர்களின் சுகாதார மற்றும் வசதிகள் கருதி குருவிட்ட பிரதான பஸ் நிலையம் நேற்று முன்தினம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

குருவிட்ட பொலிஸ் நிலையத்தின் முயற்சியில் பிரதேச பொதுஜன அமைப்புக்கள் இணைந்து இந்த சுத்திகரிப்பு பணிகளை முன்னெடுத்துள்ளதுடன், சுகாதார விதிமுறைகளை பாதுகாக்கும் விதத்தில் இந்த சுத்திகரிப்பு பணிகள் இடம்பெற்றன.

சிவனொளிபாதமலையை தரிசிக்க பக்தர்கள் செல்லும் பிரதான வீதிகளில் ஒன்றாக இவ்வீதி காணப்படுவதுடன், இவ்வீதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன.

அதற்கமையவே, குறித்த பஸ் தரிப்பிடத்தை சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் குருவிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்புதிகாரியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னுதாரணமாக இருக்கும் மஸ்கெலியா பிரவுன்லோ மக்கள்

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பிரவுன்லோவில் கடந்த இரண்டாம் திகதி தொழிலாளர்கள் சம்பிரதாய பூர்வமாக பூஜை வழிபாடுகளோடு தமது பணிகளை ஆரம்பித்தனர்.

இதன்போது, கோவப் போட்டி, விசேட பூஜை மற்றும் அன்னதான நிகழ்வு என்பனவும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில், மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ராஜ், அசோக் தோட்ட அதிகாரி களிஸ்க், அத்தோட்ட தலைமை வெளிக்கள உத்தியோகத்தர் சந்திரசேகர், தோட்டத் தலைவர் கள், ஆலய நிர்வாக சபையினர் மற்றும் தொழிளாளர் களும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விசேட அதிதி ராஜ் அசோக் கலந்துகொண்டார்.

இந்த பூஜையை இந்த B மழைக்கு பொறுப்பான பத்மநாதன் தலைமையில், மேற்பார்வையாளர் ராஜேந்திரன் மற்றும் B மழை தொழிலாளர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பெருந்தோட்ட நகரங்களில் தொடரும் எரிவாயு தட்டுப்பாடு

நாளாந்தம் வரிசையில் காத்திருக்கும் மக்கள்



(மஸ்கெலியா நிருபர்)

பெருந்தோட்ட பிரதேசங்களிலுள்ள சகல நகரங்களிலும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தாம் பெரும் பாதிப்புக்குள்ளாகுவதாக அந்த பகுதிகளிலுள்ள நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

எரிவாயு நிறுவனம் தங்களுக்கு சாதகமாக விலை அதிகரிப்பு செய்தபோதும் பாவனையாளர்களுக்கு முறையான வகையில் சேவை வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன், பெருந்தோட்டப் பிரதேசங்களிலும் கடந்த சில வாரங்களாக பல இடங்களில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இருந்தபோதிலும், தமது நாளாந்த செயற்பாடுகளுக்கு எரிவாயு மிக அவசியமாக காணப்படுவதால் இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் முன்வந்து எரிவாயு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் நுகர்வோர் வலியுறுத்துகின்றனர்.

தமிழன்
www.thamilan.lk
வணிக உலகம்
Business world

இளம் படைப்பாளிகளுக்காக வெளியாகிறது ASUS Vivo book Pro 15 மடிக்கணினிகள்

ASUS அதிகாரபூர்வமாக Vivobook Pro 15 OLED (M3500) ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது இன்றைய இளம் தலைமுறை படைப்பாளிகளின் தினசரி ஆக்கபூர்வமான மற்றும் பொழுதுபோக்குத் தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்ட, புதிய பானியிலான சக்தியாய்ந்த இரு மடிக்கணினிகள் ஆகும். தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் உள்ள சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இவ் இரண்டு மடிக்கணினிகளும் நுறற்குக்கணக்கான ஒன்லைன் பார்வையாளர்களின் பங்கேற்புடன் மெய்நிகர் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டமை விசேட அம்சமாகும்.

ASUS Vivobook Pro 15 OLED மடிக்கணினிகள் இளம் படைப்பாளிகளின் படைப்பாற்றல் மற்றும் தேடல்கள் நிறைந்த பயணத்திற்கோர் பக்கபலமாகவும் முன்னேற்றம் காணவும் உறுதுணையாக அமைந்திடும். உலாவலோ, உருவாக்கவோ அல்லது விளையாடலோ, இம்மடிக்கணினிகள் சமீபத்திய AMD Ryzen 9 5900HX CPU, pro-grade NVIDIA GeForce RTX 3050 கிராபிக்ஸ், 16GB DDR4 memory மற்றும் 1TB PCIe® SSD வளர்ந்து வரும் காட்சி படைப்பாற்றலை உணர தேவையான அனைத்து திறனையும் வழங்குகின்றன. ASUS IceCool Plus தொழில்நுட்பத்துடன் மிகவும் திறமையான dual-fan cooling முறையைப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, இது பயனருக்கு MyASUS பயன்பாட்டின் மூலம் தேர்வு செய்ய மூன்று குளிரூட்டும் முறைகளையும் வழங்குகிறது. இந்த மேம்பட்ட குளிரூட்டும் வடிவமைப்பு, மெல்லிய மற்றும் இலகுவான இம்மடிக்கணினிகள் அதிகபட்ச செயல்திறனுக்காக எப்போதும், எங்கும் குளிர்ச்சியாக இருப்பதை உறுதி செய்வதோடு, சக்தியாய்ந்த 63 Wh பட்டரியுடன் இடைவிடாத படைப்பாற்றலை வழங்க இம் மடிக்கணினிகள் தயாராக உள்ளன.

ASUS OLED displays சிறந்த துல்லியத்துடன்,

தொழில்முறை தரக் காட்சிகளுக்கு சரியான வண்ணங்களுடன் ஒப்பற்ற real-life அனுபவத்தையும் வழங்குவதோடு ஆக்கபூர்வத்தையும் தருகிறது. Vivobook Pro 15 OLED ஆனது 2.8K OLED NanoEdge display அற்புதமான 16:10 aspect ratio வை கொண்டுள்ளது. இது பாரம்பரிய 16:9 displayபுடன் ஒப்பிடும்போது விரிவான காட்சி பணியிடத்தை வழங்குகிறது. super-bright – up to 600 nits – மற்றும் 84% screen-to-body ratio கொண்டுள்ளதோடு, தெளிவான வண்ணங்களுக்கான cinema-grade 100% DCI-P3 color gamut for ultra-vivid colors கொண்டுள்ளது. இது தொழில்முறை-தர வண்ணத் துல்லியத்திற்காக PANTONE® grade color accuracy மற்றும் TÜV Rheinland - low blue-light emissions சான்றளிக்கப்பட்டது.

இம்மடிக்கணினிகள், நேர்மறை மற்றும் மாறுபட்ட கண்ணோட்டத்தை பிரதிபலிக்கும் வண்ணங்களுடன், படைப்பாளிகளிடையே மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு Quiet Blue or youthful Cool Silverயைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பயனர்கள் தங்கள் உண்மையான உணர்வை வெளிப்படுத்தும் வண்ணத்தைத் தேர்வுசெய்யலாம். ஒரு warning-striped Enter விசை மைய நிலை எடுக்கும் இடத்தில் வெளிப்படையான வடிவமைப்பையும் கொண்டுள்ளது.

இரண்டு மடிக்கணினிகளும் இடைவிடாத உற்பத்தித்திறனுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, பயணத்தின்போது வாழ்க்கையை எளிதாக்கும் எளிமையான அம்சங்களுடன் 6 WiFi பயனர்களை ஒன்லைனில் விரைவாக ஏற்றவும் அனுமதிக்கிறது. மேலும் இது ASUS WiFi Master Premium (M3500only)தொழில்நுட்பத்தால் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, ASUS WiFi Smart Connect கொண்டுள்ளது. WiFi Smart Connect தானாகவே சிறந்த WiFi source தேர்ந்தெடுக்கும். எனவே இம்மடிக்கணினி சிறந்த WiFi சிக்னல் மற்றும் மோபைல் ஹாட்ஸ்பாட்களுடன் தடையின்றி இணைகிறது.

தனியுரிமையுடன் ஒருங்கிணைந்த webcam privacy shield slides செய்கிறது. பாதுகாப்பான கடவுச்சொல் இல்லாத உள்நுழைவுக்கு, பவர் பட்டனில் உள்ளமைக்கப்பட்ட built-in fingerprint sensor வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, இது Windows Hello உடன் தடையின்றி செயல்படுகிறது. எளிதான தரவு உள்ளீட்டுக்கு, 14-இன்ச் மாதிரிகள் விருப்பமான நம்பர்பேட் 2.0 உடன் கிடைக்கின்றன. இது நிலையான பெரிதாக்கப்பட்ட டச்பேடை மாற்றியமைக்கும் LED-illuminated dual-function னையும் கொண்டுள்ளது. ASUS Vivobook Pro 15 OLED (M3500) மாதிரிகளை ASUS partner network மூலம் நாடு முழுவதும் பெற்றிடலாம். மேலும் தகவல் அறிந்திட மற்றும் கொள்வனவு செய்திட: https://www.asus.com/lk/content/Buy/ பார்வையிடவும்.

Auto Loan நிதி வசதிகளை அறிமுகம் செய்யும் HNB Finance

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC, புத்தாக்கமான வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிதிச் சேவைகளில் முன்னணியில் உள்ளது. வாடிக்கையாளர்களின் வாகனக் கனவை நனவாக்குவதற்கு இலகுவாகக் கடனைப் பெறுவதற்கு வசதியாக "Auto Loan" நிதிச் சேவையை அன்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இங்கு வாடிக்கையாளர் வாங்க விரும்பும் கார் கடனுக்கான பத்திரமாக செயல்படுவதால், வாடிக்கையாளர் நிலையான தவணைகளில் கடனை செலுத்த முடியும். வாடிக்கையாளர்களின் விருப்பம் மற்றும் பணம் செலுத்தும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சேவையை வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நெகிழ்வான நிதித் திட்டமாக வழங்க, HNB FINANCEஇன் விற்பனை நிர்வாகிகள் தனிப்பட்ட முறையில் வாடிக்கையாளர்களை அணுகி அவர்களின் கார் கனவை விரைவாக நனவாக்க உதவுவார்கள்.

"HNB FINANCE PLC, தகுதிவாய்ந்த வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, வாகனக் கடன் வசதியை எமது வாடிக்கையாளர்களுக்கு விரைவில் அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறது. எமது தற்போதைய நிதிச் சேவை வலையமைப்பில் இத்தகைய சேவையை அறிமுகப்படுத்துவது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் உகந்த நிதிச் சேவை வசதிகளைத் தொடர்ந்து அணுகவிக்கவும், அதன் மூலம் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் உதவும் என்று நான் நம்புகிறேன்" என HNB FINANCE PLCஇன் பிரதான முகாமையாளரும் வீசிங் பிரிவின் பிரதானியுமான ரங்கன ஷமீல் கூறினார்.

இந்த கடன் வசதி அதன் நெகிழ்வுத்தன்மையின் காரணமாக மற்ற சேவைகளில் தனித்துவமானது. அதாவது, பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் முதல் அதிகபட்சம் 84 மாதங்கள் வரையிலும், பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் முதல் அதிகபட்சம் 60 மாதங்கள் வரையிலும் கொடுக்கிறது.

கார்கள், வேன்கள், SUV, பிக்கப்கள் மற்றும் சிறிய டிரக்குகள் உள்ளிட்ட இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களுக்கும் இந்த கடன் வசதி பொருந்தும்.

HNB Finance தொடர்பில் 2000ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட HNB FINANCE LIMITED இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற நிதி நிறுவனமாகும். Fitch Rating நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய நீண்டகால 'A(lka)' தரப்படுத்தலைப் நிறுவனம் பெற்றுள்ளது. 70 கிளைகளை நாடு முழுவதிலும் அமைக்கப்பட்ட HNB FINANCE PLCஇனால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிதிச் சேவைகளுக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார (SME), வீசிங் சேவைகள், தங்கக் கடன், மேற்படிப்புக்கான கடன், வீட்டுக் கடன், தனிப்பட்டக் கடன், நீண்டகால வைப்பு வசதிகள் உள்ளிட்ட பல சேவைகளை வழங்குகின்றது.

FMCG ஆசிய விருதுகளில் இந்த ஆண்டின் பிரெய்லி ESG இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பிரகாசித்து நிற்கும் பைராஹா ஃபார்ம்ஸ் பி.எல்.சி.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் முன்னோடி சேமிழ் உற்பத்தியாளரான பைராஹா ஃபார்ம்ஸ் பி.எல்.சி. ஆசியா FMCG விருதுகளில், 2021ஆம் ஆண்டுக்கான ஆண்டின் சுற்றுச்சூழல் சமூக ஆளுமை முன்முயற்சியின் வெற்றியாளராக கௌரவிக்கப்பட்டு பிரகாசிக்கிறது.

இலங்கையில் முதன்முறையாக பிரெய்லியில் எழுதப்பட்ட சிக்கன் (கோழி) ரெசிபிகளின் செய்முறைப் புத்தகம் வெளியிடப்பட்டது. இது நாட்டில் உள்ள கண் பார்வையற்றவர்களுக்கு அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வடிவத்தில் வாசிப்பதற்கும் சமைத்து மகிழ்வதற்கும் உதவும்.

புத்தகத்தை விளம்பரப்படுத்துவதன் மூலமும் அது பார்வையற்றவர்களைச் சென்றடைவதோடு, இந்த பிரகாரத்தின்போது நிறுவனம் சிறந்த அடைவுகளையும் பெற்றுள்ளது. சமூக ஊடகப் பக்கங்களினூடாக உள்ளூர் சந்தையிலும் கணிசமான வளத்தைப் பெற்றுள்ளது.

இது இந்நாட்டிலே அறிமுகப்படுத்தப்பட்ட முதல் பிரெய்லி செய்முறை புத்தகம் என்பதைத்தான்டி, சமூகப்பிலும் உள்ள மகிழ்ச்சியை மேலும் பன்முகப்படுத்தக்கூடிய வகையில் விளம்பரப்படுத்த முடியும் என்ற பெருமையைக் கொண்டுள்ளது. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட இம்முயற்சி வெற்றியடைந்துள்ளது.

பைராஹா ஃபார்ம்ஸ் பி.எல்.சி. நாடு முழுவதும் உள்ள பார்வையற்றோருக்கான 18 பள்ளிகளுக்குப் பிரெய்லி புத்தகங்களை நன்கொடையாக வழங்கி தமது பங்களிப்பை விரிவுபடுத்தியுள்ளது.

தொற்றுநோய் காரணமாக, தனிப்பட்ட முறையில் புத்தகங்களை வழங்க முடியவில்லை. அதற்குப் பதிலாக, பிரெய்லியில் எழுதப்பட்ட குறிப்புகளைக் கொண்ட புத்தகங்கள், பரிசுப் பெட்டிகளில், கொரியர் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

முழு நாட்டின் மக்களும் அதன் தயாரிப்புகளுடன் சுவையான உணவுகளின் பலனை எவ்வாறு அனுபவித்து மகிழ்வார்கள் என்பதை உறுதிப்படுத்துவதில் இத்திட்டம் வலமாக செலுத்துகிறது. இதில் கண் பார்வையற்றவர்களும் அடங்குகின்றனர்.

"எங்கள் நுகர்வோர்களின் உள்ளங்களுக்கு தயாரிப்பை எவ்வாறு சரியாக எடுத்துச் செல்வது?" என்ற கேள்வியை நிறுவனம் எதிர்கொண்டது. சந்தையில் சகல நுகர்வோர் பிரிவினரும் திருப்தியடைய வேண்டும் மற்றும் அவர்கள் அனைவரும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த குறிப்பிடத்தக்க முயற்சிக்காக, பைராஹா ஃபார்ம்ஸ் பி.எல்.சி., சமீபத்தில் நடந்து முடிந்த FMCG ஆசியா விருதுகளில் இவ்ஆண்டின் ESG முன்முயற்சி - இலங்கை விருதைப் பெற்றது.

இந்த விருதுகள் நிகழ்ச்சியில் ஆசிய பசுபிக் பிராந்தியத்திலுள்ள FMCG துறையில் தங்கள் புதுமையான தயாரிப்புகள் மற்றும் முன்முயற்சிகளுடன் முன்மாதிரியான செயல்திறனைக் காட்டிய மிகச் சிறந்த நிறுவனங்கள் பங்குகொண்டன.

இதன் சமூக ஊடகப் பிரசாரத்தின் மூலம், நிறுவனம் நம்பிக்கைக்குரிய அடைவுகளைப் பெற முடிந்ததுடன் உள்ளூர் சந்தையிலும் அன்புடன் வரவேற்கப்படுகிறது.

சமூக ஊடகப் பிரசாரத்தின் மூலம் இத்திட்டம் மொத்தம் 96ஆயிரம் பேரைச் சென்றடைந்தது என்பதுதான் நடுவர் குழுவால் குறிப்பிடப்பட்ட முதல் சிறப்பம்சமான சாதனை. அத்தோடு பிரசாரத்தின்போது வீடியோ, மொத்தம் 97ஆயிரம் முறை பார்வையிடப்பட்டதுடன் சமூக ஊடக தளங்களில் இருந்து 53ஆயிரத்து 842 (இடுகை) கிளிக்குகளைப் பெற்றுள்ளது.

அதன் பிரதான சமூக ஊடகப் பக்கத்தைப் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கையில் 6ஆயிரம் பேர் புதிதாக பின்தொடர்பவர்களாக பதிவு செய்துள்ளனர். இது நிறுவனத்தின் இரண்டாவது மிக உயர்ந்த சாதனையாகக் கணிக்கப்படுகின்றது. குறிப்பிடத்தக்க வகையில், செப்டெம்பர் மாதத்தில் ஒரே நாளில் பைராஹா வீடியோ அதிகம் பார்க்கப்பட்டுள்ளது.

கடைசியாக, இலங்கையின் மொத்த வனத்தொகையில் 0.5வீதத்தை அடைய முடிந்ததன் மூலம் நிறுவனம் இந்த விருதை வென்றது.

பேண்தகைமையான உற்பத்தி தீர்வுகளுக்காக கிரீன் லேபிளிங் சான்றிதழ் விருதினை வென்ற Alumex PLC

பேண்தகைமையான உற்பத்தியை அங்கீகரிப்பதற்காக, இலங்கையின் Green Building Council (GBCSL) இனால் அதன் முழு அலுமினியம் வெளியேற்றும் கோப்புறைக்கு (Portfolio) Eco-Label கீழ் Alumex PLCக்கு GREEN Labelling System சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஆரோக்கியமான மற்றும் நிலையான எதிர்காலத்தை ஒன்றாகக் கட்டியெழுப்புவதற்கான பொதுவான இலக்கை அடைவதில் ஒரு முக்கிய பங்களிப்பாக பேண்தகைமையான உற்பத்திக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக, ஹைய்லீஸ் குழும நிறுவனமான Alumex PLCயை GBCSL அடையாளம் கண்டுள்ளது.

"நிலையான வணிக நடைமுறைகளை ஏற்றுக்கொண்ட ஒரு நிறுவனம் என்ற வகையில், இலங்கையின் Green Building Councilன் சுற்றுச்சூழல் லேபிள் சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என Alumex PLC முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமுக தெதிவெல தெரிவித்தார். "பேண்தகைமையான உற்பத்தி செயல்முறைகள் மற்றும் எமது விவேகமான வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கும் மதிப்பு ஆகியவற்றில் நிலையான கவனம் செலுத்துவதற்கு இந்த சான்றிதழ் ஒரு சிறந்த சான்றாகும்."

காடுகள் பூமியின் பரப்பளவில் 31% ஆக்கிரமித்துள்ளன. அதேநேரத்தில் பூமியில் நிலம் சார்ந்த பல்லுயிரியலில் 80% வீடாக உள்ளது. காலநிலை மாற்றத்தைத் தனிப்பதில் காடுகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இருப்பினும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் "State of the World's Forests 2020" அறிக்கையின்படி, காடழிப்பு மற்றும் காடுகளை சீரழித்தல் ஆகியவை ஆபத்தான விகிதத்தில் தொடர்ந்து காணப்படுகின்றன. இது பல்லுயிர் இழப்புக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கிறது.

அலுமினியம், பச்சை உலோகம் (green metal) என்று குறிப்பிடப்படுகிறது. கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் மரப் பொருட்களுக்கு பயனுள்ள மற்றும் திறமையான மாற்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இது Alumex PLC இன் நிலையான உற்பத்தி தீர்வுகளின் முக்கியமான இடத்தில் உள்ளது.

பல ஆண்டுகளாக, Alumex பல பங்குதாரர்களுடன் ஒத்துழைத்து நிலையான உற்பத்தி நடைமுறைகளை வளர்த்து வருகிறது. அதே நேரத்தில் அதன் பங்குதாரர்களுடன் அதிக ஆதன் சுற்றுச்சூழல் பொறுப்புகளை நோக்கி ஒத்துழைக்கிறது.

1986ஆம் ஆண்டு நிறுவப்பட்ட Alumex PLC, இலங்கையின் பன்னாட்டு மற்றும் வல்லகைப்பட்ட கூட்டு நிறுவனமான Hayleys குழுமத்தின் துணை நிறுவனமாகும். Alumex இலங்கையில் அலுமினிய கயவிவரங்களை முழுமையாக ஒருங்கிணைத்த உற்பத்தியாளர். 35 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் நிபுணத்துவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம், கதவுகள், ஜன்னல்கள், கடைகளின் முன்பக்கங்கள், திரைச் சுவர்கள் மற்றும் உலகப் புகழ்பெற்ற அலுமினியம் தனியுரிமைக் கதவு, ஜன்னல் உள்ளிட்ட நிறு சிறப்பு வனிகப் பயன்பாடுகள் போன்ற பயன்பாடுகள் மற்றும் அமைப்புகளின் விரிவான தொகுப்பிற்காக அலுமினிய வெளியேற்றங்களை முகப்பு அமைப்புகள் உரிமத்தின் கீழ் உருவாக்கி உற்பத்தி செய்கிறது. பரந்த அளவிலான கட்டடக்கலை, குடியிருப்பு மற்றும் தொழில்துறை தயாரிப்புகள் அதன் தேசிய மற்றும் சில்லறை விநியோக முறை மூலம் கிடைக்கின்றன. Alumex வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சர்வதேச தரத்திற்கு இணையான தயாரிப்புகளை வழங்குகிறது. தற்போது Alumex அதன் தயாரிப்புகளை அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

இலங்கைப் பொருளாதாரத்தின் முக்கிய பகுதியான Hayleys குழுமம், மொத்தம் 16 பல்வேறு துறைகளில் வனிக நலன்களைக் கொண்டு ஐந்து பிராந்தியங்களில் உலகளாவிய பிரசன்னத்துடன் பேணுகிறது. நாட்டின் வெளிநாட்டு வருவாயில், 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 4.2% ஆகியவற்றைக் கணக்கிட்டு, Hayleys நிலையான கன்டுபிடிப்புகளின் முன்னோடியாக உள்ளது. மேலும் அது இலங்கையின் மிக முக்கியமான வெற்றிக் கதைகளில் ஒன்றாகும்.

திகதி 05.01.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4638
இச்சீட்டிழுப்பில் கொள்வட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,809,050.00
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 8 3 2 0 5 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 18,538,400.00
கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் : 2933
இச்சீட்டிழுப்பில் கொள்வட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,453,860.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 50 54 70 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,196,758.00
மெகா பவர் 10
சீட்டிழுப்பு இலக்கம் : 986
இச்சீட்டிழுப்பில் கொள்வட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,795,200.00
அடுத்த கொக் சுப்பர் பரிசு ரூ. 165,496,408.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த விரைவட்டம் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 20 03 41 76 80
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 668
இச்சீட்டிழுப்பில் கொள்வட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,157,280.00
W 24 46 47 70
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,396,522.00
ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1194
இச்சீட்டிழுப்பில் கொள்வட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,082,620.00
வெற்றி இலக்கங்கள்
மகரம் 0 7 8 5 4 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,570,226.40
சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் : 1658
இச்சீட்டிழுப்பில் கொள்வட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 911,980.00
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 18 31 38 39
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,384,364.80
தேசிய லொத்தரி நிலையம் தேசிய லொத்தரி சபை National Lotteries Board
இலக்கம் 32, தேசுமல்ல ரோட், கொழும்பு 02.
தொலைபேசி: 0114 607 000, 0112 334 334 மின்னஞ்சல்: 0114 669 416

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

ஆரியகுளத்தின் உரிமையை உறுதிப்படுத்துங்கள்; மாநகர ஆணையாளருக்கு வடக்கு ஆளுநர் கடிதம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், ஆரியகுளத்தில் பொதுமக்களின் சமய உரிமையை மீறும் வகையில் செயற்படும் அதிகாரம் மாநகர சபைக்குக் கிடையாது என்று சாரப்பட மாநகர சபையை அச்சுறுத்தும் பாணியில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

யாழ். மாநகர முதல்வரின் ஏற்பாட்டில் தனியார் நிதிப் பங்களிப்புடன் ஆரியகுளம் அழகுபடுத்தப்பட்டு, பொழுதுபோக்குத் திடலாகப் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டிருந்தது. ஆரியகுளப் புனரமைப்புப் பணிகளின்போது, மதச் சின்னங்களை நிறுவுவதில் இழுபறி நிலை தோன்றியிருந்த நிலையில், எந்தவொரு மத அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான கட்டமைப்பெதனையும் அமைப்பதில்லை என்றும் மாநகர சபையில் தீர்மானம் இயற்றப்பட்டிருந்தது.

எனினும், அரசியலமைப்பின்படி மத அனுஷ்டானங்களைத் தடுக்கும் அதிகாரம் சபைக்கு இல்லை என்றும் கட்டிக் காட்டியிருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஆரியகுளம் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்டது தான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் உரித்து ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்மாறும் மாநகர ஆணையாளரைப் பணித்திருக்கிறார்.

மேலும், சமயத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் தன்னைச் சந்திப்பதற்கு ஆலோசனை வழங்குமாறும் அந்தக் கடிதத்தில் ஆளுநர் குறிப்பிட்டிருக்கிறார்.

கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவரின் மரணத்தில் சந்தேகம்; நீதிமன்றில் மனுத்தாக்கல்

(யாழ். நிருபர்)

மர்மமான முறையில் கிணற்றிலிருந்து கடந்த செப்டெம்பர் மாதம் சடலமாக மீட்கப்பட்ட முன்னாள் போராளியான மானிக்கம் ஜெயகுமாரின் (ஆதவன்) மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கடந்த செவ்வாய்க்கிழமை (04) மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் – சண்டிலிப்பாயை சேர்ந்த, இரு பிள்ளைகளின் தந்தையான இவர், கடந்த செப்டெம்பர் 28ஆம் திகதி காலை 6 மணியளவில், வழமைபோல நடைப்பயிற்சிக்கு செல்வதாகக்கூறி வெளியே சென்றுள்ளார். அதன் பின்னர் வீடு திரும்பவில்லை.

பின்னர், செப்டெம்பர் 30ஆம் திகதி மாலை குறித்த நபர் நவாலிப்பகுதியில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து சடமாக மீட்கப்பட்டார். இவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அப்போதே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவருடைய நண்பர்கள் தெரிவித்தபோதிலும், குடும்பத்தினர் தமது பாதுகாப்பு கருதி இது தொடர்பாக எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

இருப்பினும், இவருடைய வீட்டுக்கும் இவர் சடமாக மீட்கப்பட்ட பகுதிக்கும் இடையில் நெடுந்தூரம் காணப்பட்டதையடுத்து, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் இவருடைய உடல் நீதிமன்ற கட்டளையின்படி உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் தகனம் செய்யப்படாமல் புதைக்கப்பட்டது.

விசாரணைகள் இடம்பெற்று குறித்த வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட திகதியிடப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததாலும், அதனால் இவர் தனது உயிரை மாய்த்திருக்கலாம் எனவும் பல செய்திகள் பரப்பப்பட்டிருந்ததை தற்போது அறிந்த குடும்பத்தினர் அதை முற்றிலும் மறுத்துள்ளனர்.

அவர் நல்ல சுகதேகியாக இருந்தார் என்றும், தவறான முடிவு எடுக்கும் நிலையில் அவர் இருக்கவில்லை என்றும், அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அதனடிப்படையில், குறித்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் நேற்று மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு 10ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளதால், அன்றைய தினம் இவ்விண்ணப்பம் தொடர்பான நடவடிக்கைக்காக இன்று தவணையிடப்பட்டுள்ளது. உறவினர்கள் சார்பாக சட்டத்தரணி எம். திருக்குமரன் மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார்.

இவர் 1994 முதல் 2009 வரை விடுதலைப்புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்ததுடன், அரசியல் துறையின் நிதி தொடர்பான விடயங்களில் பொறுப்பாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 22ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு

(யாழ். நிருபர்)

சட்டத்தரணியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ்த் தேசிய அரசியலின் தனித்துவம் மிக்க தலைவர்களுள் ஒருவருமான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 22ஆவது நினைவு நாள் நேற்று முன்தினம் (05) யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் சுடர் ஏற்றப்பட்டு குமார் பொன்னம்பலத்தின் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்லி செலுத்தப்பட்டு நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கலேஜந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கலேஜந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பத்மினி சிதம்பரநாதன், சட்டத்தரணிகளான க.கனகஸ் மற்றும் ந.காண்டீபன் உட்பட கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆயுதப் போராட்டத்தின் பிறப்புப்பற்றியும், அதன் தவிர்க்க முடியாத தேவை பற்றியும் உலகப் பிரமுகர்களுக்கும் விளக்கி, தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தி, அவற்றை சர்வதேச மனித உரிமைக் கழகங்களிடம் எடுத்துச்சென்றதுடன், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தேசவிடுதலைக்கு ஆற்றவேண்டிய பங்களிப்புகள் பற்றி விளக்கி, எமது இனத்தின் அறிவுஜீவிகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம். சிங்களப் பேரினவாதிகளுடன் மட்டுமன்றி பேரினவாதத்திற்கு ஏவல் செய்யும் தமிழ்க்குழுக்களுக்கு எதிராகவும் அவர் காட்டமான வகையில் தனது எதிர்ப்புணர்வைக் காட்டினார்.

இவ்வாறு களத்திலும் புலத்திலுமாக தமிழ் தேச விடுதலையை தன் நெஞ்சிலே சுமந்து பணியாற்றிய ஒரு தமிழ்த் தேசிய அரசியல் தலைவரை "விடுதலைக்காக எரிந்து வந்த ஒரு இலட்சியச் சுடர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்" என தேசியத் தலைவரால் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

திருமறைக் கலாமன்றத்தின் நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ். நிருபர்)

திருமறைக் கலாமன்றத்தினால், நடத்தப்படும் நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நாடகக் கலையின் மேம்பாடு கருதி, செயல்முறை சார்ந்த தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு, திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகம் கடந்த 30 வருடங்களாக நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியை நடத்தி வருகின்றது.

இக் கற்கைநெறியின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் இணைந்து பயில்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தை தரம் 11,12,13 இல் பயிலும் மாணவர்களும் இக்கற்கை நெறியில் இணைந்துகொள்ள முடியும்.

ஆறுமாதங்களைக் கொண்ட இக் கற்கைநெறிக்கான வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை நடைபெறும்.

அத்துடன் போயா தினங்களில் முழுநாள் நாடகப் பட்டறையும் இடம்பெறும்.

இக்கற்கை நெறியில் இணைந்துகொள்ள விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பகிடிவதையில் ஈடுபட்ட மாணவன் யாழ். பல்கலைக்குள் நுழையத் தடை!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் ஒருவர், புதுமுக மாணவர்கள் மீது பகிடிவதையில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் மறு அறிவித்தல் வரை விசாரணைகள் முடியும் வரை பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதிக்கும் உள் நுழைய முடியாதபடி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த மாணவனை உடனடியாக விடுதியில் இருந்தும் வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவன் ஒருவருக்கே விஞ்ஞான பீடாதிபதியினால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புதுமுக மாணவர்களை நேற்று முன்தினம் (05) அதிகாலை 2 மணியளவில் பகிடிவதைக்கு உள்ளாக்கியதுடன், மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் குறித்த சிரேஷ்ட மாணவன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், மாணவர் நலச்சேவை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் முடியும் வரை குறித்த மாணவன் உள்நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் விஞ்ஞான பீட பீடாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருத்தமற்ற இடத்தில் பஸ் தரிப்பிடம்

கொடிகாமம் மக்கள் அசௌகரியம்

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் நகர்ப் பகுதியில் பொருத்தமற்ற இடத்தில் விபத்துகள் ஏற்பட ஏதுவான வகையில் வெளிமாவட்ட பஸ் தரிப்பிடம் அமைந்து காணப்படுவதாக சாவகச்சேரி பிரதேசபை உறுப்பினர் வை.ஜெதரஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொடிகாமம் நகர் பகுதியில் அண்மையில் ஏ9 வீதி, கச்சாய் வீதி மற்றும் பருத்தித்துறை வீதி ஆகியவற்றை மையப்படுத்தி வீதிச் சமிக்ஞை விளக்கு பொருத்தப்பட்டுள்ளது. குறித்த வீதிச் சமிக்ஞை விளக்கிற்கு அருகாமையில் ஏ9 வீதியோடு இணைந்த நிலையில் வெளி மாவட்ட பஸ்களுக்கான பஸ் தரிப்பிடம் காணப்படுவதால் விபத்துகள் ஏற்படும் அபாய நிலை காணப்படுகிறது.

எனவே குறித்த பஸ் தரிப்பிடத்தை வேறு இடத்திற்கு மாற்றியமைத்து விபத்துகளை தவிர்க்கவென பொருத்திய வீதிச் சமிக்ஞை விளக்கினால் முழுப் பயனடைய வழிவகுக்க வேண்டும்.

சமிக்ஞை விளக்குப் பகுதியில் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருக்கும் அதேவேளையில் வீதியின் மறுபக்கம் பஸ் தரிப்பு நிலையம் காணப்படுவது, வாகன நெரிசலை ஏற்படுத்தி விபத்துகள் ஏற்பட ஏதுவாகக் காணப்படுவதாக அவர் தெரிவித்திருந்தார்.

வவுனியா வாகன விபத்தில் பெண்ணொருவர் படுகாயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (05) மாலை இடம்பெற்ற இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு - திருநாவற்குளம் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் ஓன்றில் பெண் ஒருவர் சென்று கொண்டிருந்தபோது, புகையிரத பாதை ஊடாக புகையிரதம் சென்றுள்ளது. இதன்போது புகையிரதப் பாதைப் பகுதியை அண்மித்து மேய்ச்சலில் ஈடுபட்டிருந்த மாடுகள் புகையிரத சத்தம் காரணமாக சிதறி ஓடியபோது வீதியால் சென்ற குறித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிலில் பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் வவுனியா வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு திடீர் இடமாற்றம்

வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரவோடு இரவாக திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அவரது விடுதி பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையை பொறுப் பதிகாரியாக கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி முதல் செயற்பட்டு வந்த பீ.பீ.மானவடுவுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேவை கருதிய அவசர இடமாற்ற மாக குறித்த இடமாற்றம் இரவோடு இரவாக வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கொல்வத்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக அவர் இடமாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரது விடுதி முன்பாக நேற்று இரவு இனந்தெரியாத நபர்களால் பட்டாசுகள் கொளுத்தப்பட்டுள்ளன. இதனையடுத்து அவரது விடுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் (05) பிற்பகல் தென்மராட்சி - கெற்பேலிப் பகுதியில் ஒரு கிலோகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதுடன், கைதான நபர் மற்றும் மீட்கப்பட்ட கஞ்சா ஆகியவற்றை சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் கடமைகளை பொறுப்பேற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன்

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று (06) தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அவருக்கு வவுனியா நீதிமன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகள் அமோக வரவேற்பளித்தனர். நீதிச்சேவையை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்த மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சேவையில் 25 வருடங்களை எட்டியுள்ள நிலையில் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதியாக மீள வந்துள்ளமை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. வவுனியா மேல்நீதிமன்ற பதிவாளர் மீரா வடிவேற்காசன் தலைமையில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

(படங்கள்:- யாழ். நிருபர்)

வீடமைப்பு, நகர அபிவிருத்தித்துறைக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம்

2022ஆம் ஆண்டுக்கான அமைச்சின் வேலைத்திட்டத்தை சமர்ப்பிக்கும் நிகழ்வில் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொவிட்-19 தொற்று நிலைமைக்கு மத்தியிலும் 2021ஆம் ஆண்டில் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தித்துறையின் இலக்கினை வெற்றி கொள்வதற்கு எமக்கு முடிந்தது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டிற்கான அமைச்சின் வேலைத்திட்டத்தை சமர்ப்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (05) பத்தரமுல்ல சுஹீருபாயவில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டில் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தித்துறைக்கு ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கு தயாராக இருப்பதாகவும் பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் நான்கு இராஜாங்க அமைச்சுக்கள் செயற்படுவதுடன், நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமூதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மானத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள், தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியன அதில் அடங்கும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேராவினால் இதன்போது 2021ஆம் ஆண்டின் அமைச்சின் முன்னேற்றம் மற்றும் 2022ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டம் ஆகியன முன்வைக்கப்பட்டன.

அதனை தொடர்ந்து ஒவ்வொரு இராஜாங்க அமைச்சுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர்கள் 2022ஆம் ஆண்டிற்கான உத்தேச வேலைத்திட்டத்தை பிரதமர் முன்னிலையில் முன்வைத்தனர்.

பிரதமரின் ஆலோசனைக்கமைய கிராமிய வீடமைப்பு திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்ட 20 ஆயிரம் வீடுகளில் 15 ஆயிரம் வீடுகளில் இதுவரை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை குடியேற்றியுள்ளதாக வீடமைப்பு மற்றும் நிர்மானத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் கீர்த்தி அபேவர்தன குறிப்பிட்டார்.

அத்துடன் நிர்மானத்துறைக்கு அவசியமான மூலப்பொருட்களை நாடளாவிய ரீதியில் இயங்கும் 18 கிளைகளின் ஊடாக நியாயமான விலைக்கு நுகர்வோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

நூறு நகர அபிவிருத்தித் திட்டத்தின் பணிகள் இதுவரை 70 சதவீதம் நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், புதிய வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் மேலும் 118 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் செயற்படுத்தப்படுவதாகவும் நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா தெரிவித்தார்.

அத்துடன் ஒருபோதும் அபிவிருத்தி செய்யப்படாத நகரங்கள் மற்றும் கிராமப்புற அபிவிருத்திக்காக விசேட அபிவிருத்தி வேலைத்திட்டமொன்று எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் மற்றும் இந்திய-இலங்கை நட்புறவு வேலைத்திட்டம் ஆகியவற்றின் கீழ் 900 புதிய வீடுகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளதாக தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் டீ.பீ.ஜீ.குமாரசிறி குறிப்பிட்டார்.

தோட்டப் பகுதிகளில் தொழில் பயிற்சி நிலையங்களை அமைத்தல் மற்றும் தோட்ட வீடுகளில் வசிக்கும் ஆனால் இதுவரை அவற்றின் சட்டபூர்வமான உரிமை இல்லாத குடும்பங்களுக்கு அந்த உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு இராஜாங்க அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடற்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கு கரையோரப் பாதுகாப்பு நிலையமொன்றை புதிதாக ஸ்தாபிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர் எல்.எல்.ஏ.விஜேசிறி குறிப்பிட்டார்.

இலக்கினை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அமைச்சின் சகல அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் பிரதமர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி நாலக கொடஹேவா, இந்திக அனுருத்த, ஜீவன் தொண்டமான், மொஹான் பீ த சில்வா, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, மேலதிக செயலாளர் எம்.எம்.எஸ்.எஸ்.பீ.யாகேமை, இராஜாங்க அமைச்சின் செயலாளர்களான பொறியியலாளர் கீர்த்தி அபேவர்தன, டீ.பீ.ஜீ.குமாரசிறி, எல்.எல்.ஏ.விஜேசிறி மற்றும் நிறுவனத் தலைவர்கள், பணிப்பாளர்கள் நாயகம் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

பசுமை விவசாய செயற்பாட்டு மையத்தின் முதல் அமர்வு இராணுவத் தளபதி தலைமையில்

ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் நாடளாவிய ரீதியில் சேதனப் பசளை உற்பத்தியை முன்னெடுத்து, ஒருங்கிணைக்கும் முகமாக ராஜகிரியவில் ஸ்தாபிக்கப்பட்ட பசுமை விவசாய செயற்பாட்டு மையத்தின் முதலாவது அமர்வு பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் பசுமை விவசாய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தலைமையில் நேற்றுமுன்தினம் (05) இடம்பெற்றது.

இந்த அமர்வில் பங்குதாரர்களின் உயர்மட்ட குழு மற்றும் இது தொடர்பான நிபுணர்களும் கலந்து கொண்டனர். பசுமை விவசாய செயற்பாட்டு மையத்தின் தலைவர் ஜெனரல் சவேந்திர சில்வா, விவசாய அமைச்சின் செயலாளர் டி.எம்.எல்.டி. பண்டாரநாயக்க மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க மற்றும் பங்குபற்றியோர் இந்த பசுமை விவசாய செயற்பாட்டு மையத்தின் நோக்கம் மற்றும் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

பாரியளவில் போதைப்பொருள் கடத்தல்: தங்காலையில் இருவர் பொலிஸாரால் கைது

பணம், நகைகள், துப்பாக்கிகளும் மீட்பு

தங்காலை பகுதியில் பல நாள் இழுவை படகுகளை பயன்படுத்தி நாட்டுக்கு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது 14 மில்லியனுக்கும் அதிகமான பணம், நகைகள் மற்றும் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள், சீனிமோதர பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரும், இந்த கடத்தலின் பிரதான சந்தேகநபரின் தந்தையான கோனாபீனுவல பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேக நபர் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். கைதானவர்களில் ஒருவர், பலநாள் மீன்பிடி படகின் மாலுமியாவார்.

இந்த நடவடிக்கையின்போது 5 மில்லியன் ரூபா பணம், 377 கிராம் தங்க நகைகள் மற்றும் 10 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பிரதான சந்தேகநபரின் இல்லமும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், விசேட அதிரடிப்படையினரால் ரூ. 9 மில்லியன் ரொக்கம், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, இரண்டு மகசீன்கள், ஒரு செயற்கைக் கோள் தொலைபேசி மற்றும் ஒரு கைபேசியை மீட்டுள்ளனர். ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எஸ்.ஜு.எம்.பதிப்பகமும் பூவரசி பதிப்பகமும் இணைந்த பதிப்பான தமிழினி ஜெயக்குமாரின் "மழைக்கால இரவு" சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு நிகழ்வு கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை மாலை புரவலரின் இல்லத்தில் நடைபெற்றபோது நூலின் முதல் பிரதியை புரவலர் ஹாசிம் உமர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா விடமிருந்து பெறுவதையும் அருகில் தமிழறிஞர் அல்-ஆசூமத் ஊடகவியலாளர் முஸ்டீன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

கொட்டதெனியாவவில் காணாமல்போன சிறுவர்கள் மீரிகம பொலிஸில் சரண்

43 நாட்களில் செயற்பட்டவிதம் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

கொட்டதெனியாவவில் காணாமல் போயிருந்த சிறுவர்கள் இருவர் 43 நாட்களின் பின்னர் பெண்ணொருவரின் உதவியுடன் மீரிகம பொலிஸ் நிலையத்தில் நேற்று (06) சரணடைந்துள்ளனர்.

வத்தேகுமல்ல, பாதுராகொடவைச் சேர்ந்த 10 மற்றும் 12 வயதுடைய சிறுவர்கள் கடந்த நவம்பர் 23ஆம் திகதி முதல் காணாமல்போனதாக பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. அவர்களைத் தேடும்பணியில் விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப் பட்டிருந்தன.

இந்நிலையில், பெண்ணொருவர் சகிதம் மீரிகம பொலிஸ் நிலையத்தில் அவர்கள் சரணடைந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அந்தச் சிறுவர்களை மீரிகம பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாகவும் அவர்கள் சென்ற இடங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவிசாவளை, புவக்பிட்டிய ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆலயத்தில் ஐயப்பன் சுவாமிக்கு மகர ஜோதி மண்டல பூஜை.குரு சுவாமி சுரேஷ்குமார் பரபுஜீ தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. இதன் போது கணபதி ஹோமம், பஜனை, படிபூஜைகள் இடம் பெறுவதை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: அவிசாவளை செய்தியாளர்)

இலங்கையிலிருந்து கென்யாவுக்கு தும்பு ஏற்றுமதி: அமைச்சர் நாமலின் முயற்சியில் உடன்படிக்கை

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் கென்ய விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான இலங்கை மற்றும் கென்யாவின் முயற்சிகள் மேலும் வேகம் பெற்றன. 2021 ஒக்டோபரில், இருதரப்பு உறவுகள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நட்பு மற்றும் ஒத்துழைப்பை எட்டியிருந்தாலும், வர்த்தக உறவுகள் அதன் உண்மையான திறனை உணரவில்லை. அதனைக் கருத்தில் கொண்டு, கென்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான எதிர்கால புதிய தயாரிப்புக் கூடையை உருவாக்குவது குறித்து அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கவனம் செலுத்தினார்.

இது இலங்கையிலிருந்து கென்யாவிற்கு முதன்முதலில் தும்பு ஏற்றுமதி ஒப்பந்தத்தை இலங்கை பெற்றுக்கொள்வதில் உச்சத்தை எட்டியுள்ளது. கென்யாவிற்கு அனுப்பப்பட்ட முதலாவது தும்பு, கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் வைத்து அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் அடையாளமாக கொடியசைத்து அனுப்பி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு கென்யாவை இலங்கைக்கான புதிய வர்த்தக இடமாக முன்னிறுத்தியது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் விஜயத்தின் தொடர்ச்சியாக, உயர்ஸ்தானிகர் கென்யாவில் உள்ள பல தும்பு இறக்குமதியாளர்களை அணுகி, இலங்கையிலிருந்து முதலாவது தும்பு ஏற்றுமதியை செய்வதற்கு மயிலீனின் கென்யா லிமிட்டெட் நிறுவனத்துடன் ஏற்பாடு செய்வதில் வெற்றிப் பெற்றார்.

கிழக்கு ஆபிரிக்காவின் பொருளாதார, நிதி மற்றும் போக்குவரத்து மையமாக இருக்கும் கென்யா, வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் பல பொருளாதார நடவடிக்கைகளுக்கான இலாபகரமான நிலைமைகளை உலகிற்கு வழங்குகின்றது. இருந்தபோதிலும், கென்யாவுக்கான இலங்கையின் ஏற்றுமதியின் பெறுமதி பல ஆண்டுகளாக சீரற்ற போக்கைக் காட்டியது. 2019ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதிப் பெறுமதி 24 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன், அவை பின்னப்பட்ட ஆடைகள், அட்டைப்பெட்டிகள், பெட்டிகள், பொதியிடல் பொருட்கள், பிரதான இழைகள் போன்ற சில பொருட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் கென்யாவுக்கும் இடையில் வர்த்தக விரிவாக்கத்துக்கான பாரிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவதானித்துள்ளார். கென்யாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கனநாதன் கலந்து கொண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றை உருவாக்குவதற்குப் பங்களித்தார்.

கென்யாவில் நன்கு அபிவிருத்தியடைந்துள்ள விவசாயத்துறையில் மண்ணைத் தயாரிப்பதற்காக தும்பு பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை தும்பு உற்பத்தியாளர்கள் கென்யப் பயனாளர்களின் வேண்டுகோளின்படி ஒரு தனித்துவமான தயாரிப்பு முறைமையைப் பயன்படுத்தியுள்ளதுடன், இதனை அவர்கள் தற்போது பயன்படுத்துவதுடன் ஒப்பிடுகையில் இலங்கைத் தயாரிப்பு உயர்தரம் வாய்ந்தது என அவர்களை நம்பவைத்தது. கென்யாவின் மொத்த வருடாந்த தும்பு இறக்குமதித் திறன் 10ஆயிரம் மெட்ரிக் தொன் ஆவதுடன், இது இலங்கையிலிருந்து கென்யாவிற்கான இந்த உற்பத்தியின் நிலையான ஏற்றுமதிப் போக்குக்கு உத்தரவாதம் அளிக்கின்றது.

உயர்ஸ்தானிகர் கனநாதனும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் கொழும்புத் துறைமுகத்தில் கென்யாவிற்கான தும்பு ஏற்றுமதிச் சரக்குகளின் முதல் கப்பலை கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். இலங்கையில் இருந்தபோது, கென்யாவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சாத்தியமான புதிய பொருட்களின் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக உயர்ஸ்தானிகர் கனநாதன் பல ஏற்றுமதியாளர்களைச் சந்தித்தார்.

பள்ளிவாசலின் உண்டியலை உடைத்தவர் மீது கடும் தாக்குதல்!

1990 அம்பியூலன்ஸ் வரவழைக்கப்பட்டு அனுப்பப்பட்டார்

(மனோஜ் எதிரிசிங்க)

தொழுகைக்கு வருபவர் போல நடித்து பள்ளிவாசலில் உள்ள உண்டியலை உடைத்து பணம் திருட முற்பட்ட நபர் கடும் தாக்குதலுக்குள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் கல்லடியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கல்லடிய, ஹம்சகிரி சந்தியில் உள்ள பள்ளிவாசலுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நபர் ஒருவர் சென்றுள்ளார். அவர், மாலை வேளையில் தொழுகை நேரத்தில் கைகால்களைக் கழுவாமல் உள்ளே சென்றுள்ளார். இது குறித்து பள்ளிவாசலுக்கு வழமையாக வருபவர்கள் அவதானத்துடன் இருந்துள்ளனர்.

அந்த நபர் தொழுகை நிறைவடைந்ததும் உண்டியலுக்குள் ஐந்து ரூபா நாயனக் குற்றியொன்றை இட்டுள்ளார். அதன்மூலம் உண்டியலில் இருக்கக் கூடிய பணத்தை அனுமானித்துக்கொண்டதுடன் அங்குமிங்கும் நடமாடியுள்ளார்.

பள்ளிவாசலில் யாரும் இல்லாத சமயத்தில் ஆயுதம் ஒன்றைக்கொண்டு உண்டியலை உடைத்துள்ளார். அதன்போது அங்கு தொழுகைக்காக வந்திருந்தோர் அவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அங்கு வருகை தந்ததுடன் 1990 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அம்பியூலன்ஸை வரவழைத்துள்ளனர்.

அதன் பின்னர் சந்தேக நபர் வத்துபிட்டி வல மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு புத்தளத்தில் உலருணவு வழங்கும் நிகழ்வு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (05) முந்தல் சமூர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஹெல்ப் ஏஜ் இன்டர்நெஷனல் அமைப்பு இதற்கான அனுசரணையை வழங்கியதுடன், முந்தல் பிரதேச செயலகத்தின் சமூக சேவைப் பிரிவு ஊடாக குறித்த பயனாளிகளுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முந்தல் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் ஐ.பி.தேஷனி ஹன்திகா பத்திரனவின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் Help age international அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பிரதேச செயலக அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அண்மையில் ஏற்பட்ட கடும் வெள்ளம்

காரணமாக, முந்தல் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்கள் அந்தந்தக் கிராம சேவகர் ஊடாக தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதற்கட்டமாக 100 பேருக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தேவாலயத்தில் உண்டியல் திருடிய சிவில் பாதுகாப்புப் படை வீரர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

தேவாலயமொன்றின் உண்டியலில் இருந்த பணத்தினை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சிவில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவரை ஹபரன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹபரன கல்லய பகுதியிலுள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பிலேயே சிவில் பாதுகாப்பு படைவீரர் ஒருவரை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் (05) இரவு கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 44 வயதுடைய கல்லய பகுதியை வசிப்பிடமாக கொண்ட சிவில் பாதுகாப்புப் படை வீரர் என்பது தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் தேவாலய நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டினை அடுத்து, விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரன பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் கெகிராவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

மட்டக்குளி கல்யாணிகங்காராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீகல்யாணி கணபதி ஆலய ராமர் பஜனை குழுவின் ஏற்பாட்டில் அலகர்சாமி கணபதி கணேஷ் குருசாமி தலைமையில் ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போது கொழும்பு நகர சபை உறுப்பினர் ராஜு பால்கரன் இல்லத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாட்டில் ஜெயமுருகன் வீரமூர்த்தி குருசாமி மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

கொரிய குடியரசின் பிரதிப் பிரதமருடன் வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல். சந்திப்பு

தொழிற்கல்விக்கான உதவி குறித்து கல்வி அமைச்சருடன் விசேட கலந்துரையாடல்

கொரிய குடியரசின் பிரதிப் பிரதமரும் கல்வி அமைச்சருமான யூ யூன் ஹையுடன் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சிபோலில் வைத்து கலந்துரையாடினார்.

குறிப்பாக கொய்க்கா மற்றும் கொரிய குடியரசின் எக்சிம் வங்கி ஆகியவற்றின் தலைமையிலான வெளிநாட்டு அபிவிருத்தி உதவிகள் போன்ற இரு நாடுகளுக்கிடையிலான விரிவான பொருளாதார ஒத்துழைப்புகள் குறித்து அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார். இந்த வேலைத்திட்டங்களினால் இலங்கைக்குக் கிடைத்த நன்மைகள் குறித்து அமைச்சர் பீரிஸ் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

கொரிய குடியரசில் பணிபுரியும் 22ஆயிரம் இலங்கையர்கள் குறித்து கருத்துத் தெரிவித்த வெளிநாட்டு அமைச்சர், இலங்கையில் கொரிய மொழியின் புலமையை நோக்கமாகக் கொண்ட கற்பித்தல் நிகழ்ச்சிகளின் பிரபலயம் குறித்து சுட்டிக்காட்டினார். 2023ஆம்

ஆண்டு இலங்கையில் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கொரிய மொழி ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு அமைச்சர் பீரிஸுக்குப் பதிலளித்த பிரதிப் பிரதமர் யூ யூன் ஹை, இலங்கையில் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் முன்முயற்சிகளுக்கு விரிவான உதவிகளை வழங்குவது குறித்து கொரியக் குடியரசு பரிசீலிக்கும் எனக் குறிப்பிட்டார்.

முன்னாள் நகரபிதா பாயிஸின் ஞாபகார்த்த ஒன்றுகூடல் புத்தளத்தில்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் நகர சபையின் முன்னாள் நகர பிதா மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் ஞாபகார்த்த ஒன்றுகூடல் நேற்று முன்தினம் (05) புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ வெங்கட ஸந்தரராமக் குருக்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் மாவட்ட தலைவர் அஷ்ஷெய்க் அப்துல்வாஹிட் மஹ்மூத் ஆலிம் உட்பட உலமாக்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது சமயத் தலைவர்கள், அரசியல் விமர்சகர்கள், சமூக ஆர்வலர்கள், புத்தளம் முன்னாள் நகர பிதா மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் புத்தளம் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் பற்றி ஞாபகார்த்த உரைகளை நிகழ்த்தினார்கள்.

அத்துடன் மர்ஹூம் கே.ஏ.பாயிஸை கௌரவிக்கும் வகையில், அவரது புதல்வரான அஷ்ரப் பராஹ் பாயிஸுக்கு சினைவுச் சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் கௌரவித்தார்.

அத்தோடு, புத்தளம் நகர சபையின் முன்னாள் நகர பிதாவுக்காக விசேட துஆப் பிரார்த்தனை இடம்பெற்றதுடன், அவர் ஆற்றிய சேவைகள் பற்றிய காணொளி தொகுப்பும் மல்டி மீடியா மூலம் காண்பிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு புத்தளம் நகர சபையின் தலைவராக தெரிவான மர்ஹூம் கே.ஏ.பாயிஸ், கடந்த வருடம் மே மாதம் 23 ஆம் திகதி புத்தளம் வன்னாத்தவில்லு பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நினைவு முத்திரை ஊடக அமைச்சர் டலஸ் அலகப்பெருமவினால் வெளியீடு

(நூருல் ஹுதா உமர், சர்ஜுன் லாபீர், ஏ.எல்.எம்.ஷினாஸ், எம்.என்.எம்.அப்றாஸ்)

நாளிலும் பேற்றும் நாகூர் நாயகம், கருணைக் கடல், குத்புல் மதீத் ஹழ்றத் செய்யிதுனா மஹான் சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் நினைவாக அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர மக்களால் நடத்திவரும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூரிர் ஆண்டகை தர்ஹாவின் 200ஆவது கொடியேற்று விழா, கடந்த செவ்வாய்க்கிழமை (04) ஆரம்பமானது. 200ஆவது கொடியேற்று விழாவை சிறப்பிக்கும் முகமாக 25 ரூபா பெறுமதியான முத்திரை ஒன்று கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூரிர் ஆண்டகை தர்ஹா ஷரீப் முன்றலில் நேற்று (06) மாலை வெளியிடப்பட்டது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூரிர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் அழைப்பின்பேரில் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அலகப்பெரும பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸ் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா, கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப், கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், தபாலம் அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன, கிழக்கு மாகாண பிரதி தபாலம் அதிபர் ஜெயநந்திர திருச்செல்வம், தபாலதேவ பணியக பணிப்பாளர் சாந்தகுமார மீகம, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், கல்முனை பிரதேச செயலாளர் ஜே. வில்வரட்ணி அலி, கல்முனை பிரதேச முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எம். நஸீர், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், அக்கரைப்பற்று எஸ்.எம்.சபீஸ், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை.சொனவிரத்ன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் பிரத்தியேக செயலாளர் எஸ்.ஏ.டபிள்யூ ராஜலக்ஷ, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மிர், கல்முனை தலைமைய பொலிஸ் உயரதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், அடங்களாக நாகூர் ஆண்டகை தர்ஹா சரிப் நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்த முத்திரை வெளியீட்டுக்கான முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை கல்முனை தொகுதி சார்பிலான திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போடியார் புலம்பல்!

மழை பேய்தா தண்ணீ
வருந்தான் அதப்போய் படம்காட்டி
வெள்ளம் என்று ஆதாயம்
தேடாதங்கடாப்பா..எண்டுதான் நம்மட
மட்டக்களப்பு அரச அதிபர் ஐயா
சொல்லியிருக்காரு
அவரு அப்படி சொன்னதிலயும்
உண்மை இல்லாமல் இல்ல.. நம்மட
ஆக்கள் சனத்தோட தண்ணிக்க நின்று
படம் எடுத்து மம்மாத்து காட்டினதும்
மெய்தானே!

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

அக்கரைப்பற்று மாநகர சபையில் 37 உள்ளூர் வீதிகள் அபிவிருத்தி

(அக்கரைப்பற்று நிருபர்)

கிராமிய வீதி அபிவிருத்தி திட்டத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை குறுகிய காலத்திற்குள் 37 உள்ளூர் வீதிகளை அபிவிருத்தி செய்துள்ளதாக அக்கரைப்பற்று மாநகரசபையின் முதல்வர் அதாஉல்லா அகமட் லஸி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான முதலாவது மாநகர பொதுச்சபை அமர்வு நேற்று (06) இடம்பெற்றது. இதன்போதே முதல்வர் மேற்படி தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரை நிகழ்த்துகையில், அக்கரைப்பற்றின் வரலாற்றில் இதுவொரு மைல் கல் சாதனை என்றே சொல்ல வேண்டும். 2021ஆம் ஆண்டில் எமக்கு வழங்கப்பட்டிருந்த 50 வீதிகளில் இதுவரை 37 வீதிகளை பூரணமாக அபிவிருத்தி செய்திருக்கின்றோம். உண்மையில், இவ்விடயமானது மிகுந்த மகிழ்ச்சிக்கும் பெருமைக்குரியதுமாகும். ஏனைய வீதிகளின் நிர்மாணப் பணிகளையும் வெகு துரிதமாக அபிவிருத்திசெய்து மக்களிடம் கையளிப்பதற்கு நாம் ஒருமித்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இவ்விடயத்தில் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், உரிய அதிகாரிகள் அனைவருக்கும் இவ்வேளையில் மானசீகமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், கொரோனா பெரும் தொற்று வேளையிலும் அக்கரைப்பற்று மண் வெகுவாக நிலை குலைந்து போனது. அதிலிருந்தும் நாம் இப்போது மீண்டு வந்திருக்கின்றோம். எஞ்சியிருக்கும் காலத்திலும் எமது மக்களின் சுபிட்சமான எதிர்காலத்திற்காகவும், வாழ்வியல் முன்னேற்றத்திற்காகவும் நாம் அனைவரும் ஒத்தகருத்தில் பயணிக்க வேண்டும் என்று இவ் உயரிய சபையினை வேண்டுகின்றேன் என்றார்.

விளக்கமறியலில் இருப்பவரை விடுவிப்பதாகக் கூறி 02 இலட்சம் ரூபா கப்பம் கோரிய உறவினர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டு. காத்தான்குடியில் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருக்கும் ஒருவரை விடுதலைசெய்து தருவதாகக் கூறி குறித்த நபரின் தாயாரிடம் 2 இலட்சம் ரூபா கப்பமாக கோரிய தாயாரின் சகோதரன் உட்பட இருவரை நேற்று (06) மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு முன்னால் வைத்து வான் ஒன்றுடன் கைதுசெய்ததுடன், பிரதான சூத்திரதாரி தப்பியோடியுள்ளதாக மட்டக்களப்பு தலைமைய பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவர் கடந்த முதலாம் திகதி ஐஸ் போதைப் பொருளுடன் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரை விடுவித்துத் தர கப்பமாக 2 இலட்சம் ரூபா கோரியுள்ளதாக காத்தான்குடி முதலாம் பிரிவு மோதினார் லேன் சாவியா வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாகிங்காவின் ஆலோசனைக்கமைய மட்டு. தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி கே.ஹெட்டியாராச்சியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி முமட் ஜெஸ்லி தலைமையிலான பொலிஸார் நேற்று (06) பகல் மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு முன்னால் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது வான் ஒன்றில் வந்திருந்தவர்களை பொலிஸார் சுற்றிவளைத்தபோது அங்கிருந்து கப்பம் கோரிய பிரதான நபர் தப்பியோடியுள்ள நிலையில், வானில் வந்திருந்த முறைப்பாடு செய்தவரின் சகோதரன் மற்றும் வான் சாரதியை கைதுசெய்துள்ளதுடன், வான் மற்றும் 4 கையடக்க தொலைபேசிகள், ஆவணங்களையும் மீட்டுள்ளனர்.

கடந்த 3 தினங்களாக குருநாகல் கல்கமுக பிரதேசத்தைச் சேர்ந்த முகமட் காரிம் முகமட் றிபான் என்பவர், விளக்கமறியலில் இருக்கும் நபரின் மனைவியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உனது கணவருக்கு பல்வேறு வழக்குகள் இருப்பதாக தெரிவித்து, அவரை நீதிமன்றில் எந்தவிதமான ஆவணங்களும் இல்லாமல் வெளியில் எடுத்துத் தரமுடியும் எனக் கூறி 2 இலட்சம் ரூபா கப்பமாக கோரியுள்ளார்.

இதனையடுத்து இதனை அவர் மாமியாரிடம் தெரிவித்ததையடுத்து, அவர் மருமகளிடம் குறித்த நபர் கதைப்பதை ஒலிப்பதிவு செய்து தனக்கு அனுப்புமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். இந்நிலையில் நேற்று (06) மட்டக்களப்பு நீதிமன்றுக்கு முன்னால் வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் கப்பம் கோரிய குறித்த நபர் கல்கமுவ பிரதேசத்தில் வான் ஒன்றை வாடகைக்கு சாரதியுடன் எடுத்துக்கொண்டு நேற்று அதிகாலை 4 மணிக்கு தன்னுடன் கல்கமுவ பிரதேசத்தில் திருமணம் முடித்துள்ள முறைப்பாடு செய்திருந்த பெண்ணின் 46 வயதுடைய சகோதரனை அழைத்துக்கொண்டு மட்டக்களப்பு நீதிமன்றுக்கு முன்னால் பகல் வந்தடைந்து காத்திருந்தனர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

திருமலையில் குடும்பத்தகராறு காரணமாக எண்மருக்கு 10ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை பகுதியில் ஒரே குடும்பத்தில் கைகலப்பு ஏற்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் எட்டுப்பேரை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் (05) உத்தரவிட்டார்.

திருகோணமலை, பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 21, 43, 17, 20, 27, 24, 16 மற்றும் 57வயதுடைய எண்மரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் மகன் ஆகியோர் மருமகன் ஒருவரை குடும்பப் பிரச்சினை காரணமாக தாக்கியுள்ளதாகவும் அதை அறிந்த அயல் வீட்டு உறவுக்காரர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தந்தையையும் மகனையும் தாக்கி காயப்படுத்தியுள்ளார்கள்.

இதில் காயங்களுக்குள்ளான தந்தையும் மகனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பாக திருகோணமலை தலைமைக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தந்தை மற்றும் மகனை தாக்கிய எட்டுப் பேரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

செங்கலடியில் குடும்பஸ்தர் தூக்கிட்டுத் தற்கொலை!

(கல்லடி நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கணபதிப்பிள்ளை தயக்குமார் (வயது- 47) தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ள நிலையில் நேற்று முன்தினம் (05) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மகிழூரிலுள்ள தனது வீட்டில் மனைவியுடன் ஏற்பட்ட தகராறினால், வீட்டை விட்டு வெளியேறி, செங்கலடியிலுள்ள தனது தாயின் வீட்டில் யாருமில்லாத நிலையில் தனக்குத் தானே தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஏறாவூர் கற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எச்.எம்.றஹக்கீம் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட புதிய அரசாங்க அதிபர் பதவியேற்பு!

(பைஸல் இஸ்மாயில்)

அம்பாறை மாவட்ட புதிய அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தை சேர்ந்த எம்.ஏ.டக்ளஸ் நேற்று வியாழக்கிழமை தனது கடமையை அம்பாறை கச்சேரியில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திலக் ராஜபக்ஷ, மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், உயரதிகாரிகள், மதத் தலைவர்கள் என மேலும் பலர் கலந்துகொண்டனர்.

காரில் கஜமுத்துகளை கடத்திய இருவர் அம்பாறையில் கைது

(கனகராசா சரவணன்)

பதுளையிலிருந்து அம்பாறைக்கு கார் ஒன்றில் 3 கஜமுத்துகளை கடத்திச் சென்ற இருவரை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் (05) அம்பாறை நகர்ப்புகுதியில் வைத்து கைதுசெய்துள்ளதாக அம்பாறை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய நேற்று முன்தினம் (05) இரவு அம்பாறை - கண்டி வீதியிலுள்ள அம்பாறை நகர்ப்பகுதியை அண்டிய புத்தங்கல பகுதியில் விசேட அதிரடிப்படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அம்பாறையை நோக்கி பிரயாணித்த காரை விசேட அதிரடிப்படையினர் நிறுத்தி மடக்கிப்பிடித்தனர்.

இதில் 3 கஜமுத்துகளை கடத்திவந்த இருவரை கைதுசெய்ததுடன், கஜமுத்து மற்றும் கார் ஒன்றை மீட்டு அம்பாறை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அரசாங்க வெளியீட்டு பணியகம் திறந்துவைப்பு

(பதுர்தீன் சியானா- ரஸ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க வெளியீட்டுப் பணியகம் திறந்து வைக்கும் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று (06) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும பிரதம அதிதியாக கலந்துகொண்டு இவ் அரசாங்க வெளியீட்டு பணியகத்தை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுபில் நுவான் அத்துகோரல, மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிக்கோரள, முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் ஆரிஃபி கலப்பதி, சர்வமத தலைவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது.

இனி 20 வருடங்களுக்கு முஸ்லிம் மக்கள் மீதே குறிவைக்க நோக்கம்

சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

பிரதேச சபைத் தேர்தல் கேட்க வேண்டிய என்னை விமர்சித்து நாடாளுமன்ற உறுப்பினராக மாற்றி விட்டார்கள். தற்போது இன்று என்னை விமர்சித்து என்ன பதவி கிடைக்கப் போகின்றது என்று எனக்கு தெரியாமல் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பாடசாலையில் தரம் 5 இல் கல்விப் பயிலும் மாணவர்களின் நலன் கருதி இராசமாணிக்கம் அமைப்பினால் மாதிரிப் பரீட்சை விளாத்தனர் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்முனை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அங்கு தனது கருத்தில் தெரிவித்ததாவது,

மாணன சபை முறைமையினை பலவீனமாக்க வேண்டும் என்ற விடயத்தில் மிகவும் அக்கறையாக கிழக்கு மாகாண ஆளுநர் தொடக்கம் அதிகாரிகள் சிலரும் இருப்பது நிதர்சனமான உண்மையாகும். இவ்வருடம் கிழக்கு மாகாணத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி நிலைமையினை நோக்குவோமாயின் கவலையாகவே உள்ளது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதிகளில் நிர்வாகத்திற்கே நிதிகள் வழங்கப்பட்டுள்ளதே தவிர மேலதிகமாக வேலைத்திட்டங்களை செய்வதற்கான நிதிகள் வந்து சேரவில்லை. இவ்வாறுள்ள நிலையில் மாகாண பாடசாலை விடயத்தில் எவ்வாறான அபிவிருத்திகளை மேற்கொள்வது என்பது சவாலான விடயமாகும். அத்துடன் எமக்கான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்காமல் விட்டால் முழுமையாக எமது வேலைத்திட்டங்களை செய்ய முடியாது. கடந்த 74 ஆண்டுகளாகவே தீர்வு நிலைமை தொடர்ந்து வருகின்றது. எமக்கென அதிகாரங்கள் எமது கைகளில் இருக்க வேண்டும். இன்று கல்முனை என்றாலே கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மட்டும் தான் பேசப்படும் விடயமாகும். கல்முனை என்று இன்று நான் சொன்னால் கூட எனக்கு எதிராக விமர்சனங்கள் வரும். மாணவர்களின் கல்வி தொடர்பில் அக்கறையை நாம் செலுத்த வேண்டுமாயின், நிரந்தர அரசியல் தீர்வினை அடைய வேண்டும்.

இதனை விட தமிழ் மக்கள் என நான் கூறுவது தமிழ், இஸ்லாம், கிறிஸ்தவ மக்களையே கூறுகின்றேன். இதனை 3 ஆக்க பிரித்து சொல்ல வேண்டிய அவசியமில்லை. எமக்கு மாகாண சபையின் ஊடாக நிதி அதிகாரமிருந்தால் நாங்கள் ஆளுநரிடம் பிச்சை கேட்பது அவசியமில்லை. சில விடயங்களை நாம் காலில் விழுந்து கேட்டால் கூட கிடைக்கப்பெறாத நிலைமையிலே உள்ளது. தற்போதும் கூட வந்த வளங்கள் அனைத்தும் உகன, தமன, தெஹியத்த கண்டிய, பதியத்தலாவ போன்ற பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை நாங்கள் வெளிப்படையாகச் சொன்னால் இவர் துவேசமாக கதைப்பதாக கூறுவார்கள். எனவே தான் இவ்வாறான வளங்களை பெறுவதற்கு தமிழ் மக்களாகிய நாங்கள் ஒன்றாக வாழ்வதற்கு இணங்க வேண்டும்.

அப்பாவி இல்லாமல் நாம் கண்டபடிக்கு கொண்டிருப்போமாயின், எமது வளங்கள் வேறு இடங்களுக்கு போய்விடும். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலாக இருக்கட்டும் அல்லது அரசியல் தீர்வாக இருக்கட்டும். இரு சமூகமும் ஒன்றாக இருக்காவிடின், தமிழ்ப் பேசாத ஒரு முதலமைச்சர் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அது ஒரு கதித்திட்டமாகும். இந்த இடத்தில் இவ்விடயத்தை கூறுவதற்கு காரணம், கல்வியாளர்களாகிய நீங்கள் சமூகத்தில் பலவேறு கருத்துகளை கொண்டு செல்லக்கூடியவர்கள். ராஜபக்ஷ குடும்பத்தினுள் அடிபிடி பிரச்சினைகள் உள்ளன. அந்த வகையில் இரு சமூகங்களுக்கு இடையில் பிரச்சினை எழுவது தவிர்க்க முடியாத விடயமாகும்.

ஆகவே, இவற்றை எப்படி பேசித் தீர்க்கலாம் என்பதை ஆராய வேண்டும். இதற்கு உங்களை போன்ற புத்திஜீவிகளின் ஆதரவு எமக்கு தேவையாகும். எமக்கு நிதி அதிகாரம் கிடைக்கப்பெற்றால் வெளிநாடுகளில் இருந்து நேரடியாக நிதிகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இலங்கையில் சாப்பிட கூட வழி இல்லாமல் மக்கள் இருக்கின்றார்கள்.

அரசியல் தீர்வில் தான் எமது மக்களின் பொருளாதார அபிவிருத்தியும் தங்கியிருக்கின்றது. எனவே எதிர்காலத்திலாவது நாம் சிந்தித்து செயற்பட வேண்டும். தமிழ் மக்களை கடந்த காலங்களில் அடித்தமையினால் களைத்துவிட்டார்கள் என்பது தான் அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு. 40 வருடங்களாக தமிழர்களுக்கு அடித்து விட்டோம். இனி அவர்களுக்கு அடித்தால் சிங்கள மக்களிடம் எடுபடாது என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது. அடுத்த 20 வருடங்களுக்கு இல்லாமிய மக்களை தான் குறி வைக்கப் போகின்றார்கள். இதனை அம்பக்கள் உணர்ந்து விட்டார்கள். இதனால் மொட்டுக்கு அவர்கள் தேர்தலில் வாக்களிக்கவில்லை. எனவே, கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களை மறந்து எதிர்காலத்தில் பயனிப்பதற்கு நாங்கள் தயார். ஒரு சிலர் இருக்கலாம், ஏனைய மக்களுடன் வாழலாம் என நினைக்கலாம். இன்று தமிழ் சமூகம் உணர்ந்துள்ளது இரு சமூகமும் ஒன்றாக சேர்ந்துவாழ வேண்டும் என வந்திருக்கின்றார்கள். இதற்கும் எனக்கு விமர்சனங்கள் வரலாம். எனக்கு விமர்சனம் தான் எனது வளர்ச்சியில் கூட பாதை அமைத்து தந்திருக்கின்றது.

பிரதேச சபைத் தேர்தல் கேட்க வேண்டிய என்னை விமர்சித்து நாடாளுமன்ற உறுப்பினராக மாற்றி விட்டார்கள். தற்போது இன்று என்னை விமர்சித்து விமர்சித்து என்ன பதவி கிடைக்க போகின்றது என்று தெரியாது. எனவே, இனியாவது காலங்களில் இரு சமூகமும் ஒன்றாக சேர்ந்து வாழ வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் குடியேற்ற திட்டங்கள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. ஒரு நாளுக்குள் 10ஆயிரம் ஏக்கர்கள் ஒரு இரவுக்குள் பறிக்கப்படுகின்றன.

இனியாவது இவ்வாறான விடயங்களுக்கு இடங்கொடுக்காது இரு சமூகமும் பார்க்க வேண்டும். 2022ஆம் ஆண்டு நாட்டில் பொருளாதார சிக்கல்கள் வரலாறு காணாத வகையில் வரும். 4 மற்றும் 5 ஆம் மாதங்களில் உணவு பஞ்சம் வரும். தெற்கில் மக்கள் வீதியில் இறங்கிப் போராட ஆரம்பித்துள்ளார்கள். எனவே, அவர்களில் சிலரை இணைத்து நாம் புதிய அரசியல் பாதையில் செல்ல வேண்டும் என்பதே எனது அவாவாகும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சாணக்கியன் எம்.பி., மாகிரி வினாத்தாள்கள் அடங்கிய பொதிகளை வழங்கி வைத்ததுடன் நிகழ்வில் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலய ஆசிரியர்களும் இலங்கை தமிழரசு வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் நிதான்னும் கலந்து கொண்டனர்.

மீண்டும் அதிக மழை வீழ்ச்சி ஆரம்பம் காத்தான்குடி மக்கள் பெரிதும் பாதிப்பு

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் மழையுடனான காலநிலை எதிர்வரும் சில நாட்களுக்கு தொடரும் சாத்தியம் உள்ளதாக எதிர்வு கூறப்படுகின்றது.

டிசம்பர் மாத காலப்பகுதியில் தொடர்ந்த மழை வீழ்ச்சி ஓரளவு குறைவடைந்து காணப்பட்டதுடன் திங்கட்கிழமை அதிகாலை முதல் மீண்டும் காலநிலை மாற்றமடைந்து அதிக மழை பொழிய ஆரம்பித்துள்ளதால் கடற்றொழில் மற்றும் நாளாந்த வியாபாரிகளின் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச தாழ்நிலப் பகுதிகளில் உள்ள வீடுகளில் வெள்ளநீர் புகும் ஆபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் சில நாட்களுக்கு மழை கொண்ட காலநிலை தொடருமாயின், வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் எனவும் மக்கள் அச்சப்படுகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

மஜ்மா நகரில் அடக்கமானோருக்காக ஒட்டமாவடியில் விசேட துஆப் பிரார்த்தனை

(கல்குடா நிருபர்)

கொரோனா வினால் மரணமடைந்து ஒட்டமாவடி மஜ்மா நகரில் அடக்கம் செய்யப்பட்டவர்களுக்கான விசேட துஆப் பிரார்த்தனையும் அவர்கள் நினைவாக உதவிகள் வழங்கும் நிகழ்வும் நேற்று ஒட்டமாவடியில் இடம்பெற்றது.

கொரோனா வினால் மரணமடைந்த எஹுவியகொட பாத்திமா இல்ராத்தின் நினைவாக அவரது தந்தையின் நிதியளிப்பில் மஜ்மாநகர் வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் மக்களின் மின்சார தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில் மின்சாரம் பெற்றுக் கொடுப்பதற்காக தலா ஒரு குடும்பத்திற்கு 23ஆயிரத்து 150 ரூபா வீதம் ஏழு குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதுடன் ஒரு குடும்பத்திற்கு நீர்த் தாங்கியும் வழங்கப்பட்டது.

அல் - மஜ்மாஹ் மஸ்ஜித் ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் தலைவர் ஐ.எல்.எம்.முஸ்தபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மௌலவி எஸ்.எம்.அபுல் ஹஸன் விசேட துஆப் பிரார்த்தனையை நடத்தினார்.

மட்டக்களப்பில் 3 தினங்களில் பெய்த அடைமழையினால் 842 பேர் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 தினங்களில் பெய்த அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 227 குடும்பங்களைச் சேர்ந்த 842 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி பெய்த மழையினால் 183 குடும்பங்களைச் சேர்ந்த 692 பேரும், 4 ஆம் திகதி பெய்த மழையினால் 25 குடும்பங்களைச் சேர்ந்த 84 பேரும், 5ஆம் திகதி பெய்த மழையினால் 19 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேருமாக மொத்தம் 842 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றில் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் 9 கிராம சேவகர் பிரிவுகளும், மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் 5 கிராம சேவகர் பிரிவுகளும், போரதீவுப்பற்று வெள்ளாவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராமசேவகர் பிரிவுகளும், மண்முனைப் பற்று ஆரையம்பதி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த தலா 1 கிராம சேவகர் பிரிவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் வீடொன்று பகுதியளவில் சேதமாகியுள்ளதுடன் அடிப்படைக் கட்டமைப்பு பாதிப்பும் பதிவாகியுள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்துள்ளது.

ஆட்டோவில் ஆடுகளை திருடிய நால்வர் கைது



(மீராவோடை நிருபர்)

ஆட்டோ ஒன்றில் இரண்டு ஆடுகளை திருடிய நால்வர் பொது மக்களின் உதவியுடன் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைநகர் பகுதியில் கடந்த புதன்கிழமை (5) ஆட்டோ ஒன்றில் வந்த நால்வர் அங்கு மேய்ந்து திரிந்த இரண்டு ஆடுகளை திருடிச் சென்றுள்ளனர்.

ஆடுகளை திருடிய நபர்களை சி.சி.ரி.வி. கெமராவின் உதவியுடன் கண்டு கொண்ட பிரதேச மக்கள், அவர்களை பிடித்து வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக ஆடுகள் திருடப்பட்டு வருவதாக ஆடுகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிலந்தியில் மனித முகம்!

(மீராவோடை நிருபர்)

மனித முகம் போன்று காட்சியளிக்கும் சிலந்தி ஒன்றை வீட்டு உரிமையாளர்கள் கண்டுள்ளனர்.

கோறளைப்பற்று மேற்கு ஒட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்முனை ஹிஸ்புல்லாஹ் வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலே இந்த சிலந்தியை வீட்டு உரிமையாளர்கள் நேற்றுமுன்தினமிரவு கண்டுள்ளனர்.

வித்தியாசமாக முறையில் வீட்டின் சுவரில் திரிந்த சிலந்தியை வீட்டு உரிமையாளர்கள் பார்த்த போது அதில் மனித முகம் போன்று காட்சியளித்துள்ளது.

இவ்வாறு தமது வீட்டுக்குள் வந்த அபூர்வ சிலந்தி, சிறிது நேரத்தின் பின்னர் அவ்விடத்தை விட்டு சென்றுள்ளதாகவும் வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

கல்முனை வலயத்தில் இஸ்லாம் பாட அடைவை மேம்படுத்த கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஏற்பாட்டில், வலயக் கேட்போர் கூடத்தில் வினா தயாரிக்கும் பணிகள் இடம்பெறுவதை படத்தில் காணலாம். (படம் நற்பிட்டிமுனை நிருபர்)

மின்சாரம் தாக்கி மாடுகள் உயிரிழப்பு

(மீராவோடை நிருபர் - எச்.எம்.எம்.பர்ஸான்)

மின்சாரம் தாக்கி இரண்டு மாடுகள் உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் மேய்ந்து திரிந்த இரண்டு மாடுகளே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன.

கடும் மழை பெய்து கொண்டிருந்த போது சம்பவம் நடந்த இடத்தில் அமைந்திருந்த மின்கம்பத்தில் இருந்து வந்த மின்சாரம் தாக்கியதில் இரண்டு மாடுகளும் உயிரிழந்துள்ளன.

சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாக வருகை தந்த இலங்கை மின்சார சபை வாழைச்சேனை பிராந்திய ஊழியர்கள், மின் இணைப்பை சீர் செய்து மாடுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

உரம் கோரி வீதிக்கு இறங்கிய திருமலை மக்கள்

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை கப்பல்துறை விளாங்குளம் விவசாயிகள் உரம் கோரி வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.

திருகோணமலை - கண்டி பிரதான வீதி விளாங்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவும் இணைந்துக் கொண்டார்.

குறித்த ஆர்ப்பாட்டத்தின்போது, "தமக்கான உரத்தினை உரிய நேரத்தில் வழங்கு, கேகம் இல்லை: உரமும் இல்லை, முடியுமென்றால் ஆட்சி செய்யுங்கள் இல்லாவிட்டால் விலகுங்கள்" என்ற கோஷங்களை எழுப்பியவாறு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இணைந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் விவசாயிகளின் விளைச்சல் நிலங்களை பார்வையிட்டதுடன், அரசாங்கத்தினால் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட திரவ உரம் தொடர்பிலும் கேள்வி எழுப்பினார். அதற்கு விவசாயி ஒருவர், அந்த உரம் இடும் நாளில் தனது மனைவியுடன் அணுகுவது கூட இல்லை என கேளிக்கையாக பதிலளித்தார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

ஆண்டாண்டு காலமாக இரசாயன உரத்தினை பயன்படுத்தி பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு தற்போதைய அரசாங்கம் திடீரென ஒரே தடவையில் இரசாயன உரத்தினை தடைசெய்திருந்தது.

இரசாயன உரத்துக்கு பதிலாக சேதனப் பசளை பயன்படுத்துமாறும் அவ்வாறு பயன்படுத்தும்போது நீங்கள் பெற்ற அறுவடைக்கு மேலாக கூடுதல் இலாபத்தைப் பெறமுடியுமென தற்போதைய அரசாங்கமும் விவசாய அமைச்சும் தெரிவித்திருந்தது.

ஆனால் தற்போது நடந்தது என்ன? இங்கு காணப்படுகின்ற வயல் வெளியைப் பார்த்தாலே புரிகிறது என்ன நடந்திருக்கின்றது என்பது. இந்த அரசாங்கத்தின் முட்டாள்தனமான செயற்பாடுகள், முட்டாள் தனமாக எடுக்கப்பட்ட முடிவுகள், தனிப்பட்டவர்களின் யோசனைகளினால் எடுக்கப்பட்ட முடிவுகள் காரணமாக நாட்டில் உள்ள அனைத்து விவசாய நிலங்களும் நாசமடைந்துள்ளன.

சாதாரண மக்கள் போன்று நிவாரணத்திற்கு மேல் நிவாரணம் கேட்கும் கூட்டம் அல்ல, இந்த விவசாயிகள் அவர்களின் குறைந்தபட்ச வேண்டுகோளாக இருந்தது நியாயமான விலையில் நிவாரண விலையில் உரத்தினை பெற்றுக்கொள்வது இவ்வாறு தமது வாழ்வாதாரத்தினை மிகவும் கஷ்டத்துடன் கொண்டு சென்ற விவசாயிகளுக்கு இருந்ததும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயிகளை இந்த நிலைமைக்கு கொண்டு வந்தது யார்? தற்போதைய அரசாங்கம். இந்த அரசாங்கம் விவசாயிகளை இல்லாமலாக்கி புதிது புதிதாக உரங்களை இறக்குமதி செய்து, இரசாயனங்களை இறக்குமதி செய்து, பாவனைக்கு உதவாத உரங்களை இறக்குமதி செய்து அவ்வாறு இறக்குமதி செய்ய முற்பட்ட ஒரு உர நிறுவனத்தின் கேள்விகளுக்கு பயந்துகொண்டு அவ்வாறான நிறுவனத்துக்கு முந்திக்கொண்டு நஷ்ட ஈடும் வழங்கியது வழங்கிய நஷ்ட ஈடு இலங்கை ரூபாவில் அல்ல, டொலர் மில்லியன் கணக்கில் நஷ்ட ஈடும் வழங்கியுள்ளது.

ஆனால், எமது விவசாயிகள் உரம் கேட்கும்போது ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விலை: ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விலை. உரம் 20ஆயிரம் முதல் 25 ஆயிரத்திற்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது. சில பிரதேசங்களில் 30 ஆயிரத்திற்கும் விற்பனை செய்யப்படுகின்றது. இது மாபெரும் பாவமான செயல் இது அரசியல் அல்ல. இது ஒரு சாபம். உண்மையில் சொல்லப்போனால் எமது நாட்டு விவசாயிகள் பாரிய துன்பத்தில் உள்ளார்கள். எனவே, அரசாங்கம் இதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுத்து நமது நாட்டின் விவசாயத்தினை பாதுகாக்குமாறும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் விளங்குளம் பிரதேச விவசாயிகள், பிரதேச வாசிகள் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குச்சவெளி பிரதேச சபையினால் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் பணி ஆரம்பம்

உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவீடு



(கிண்ணியா நிருபர்)

நீதிமன்றம், பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் அரச திணைக்களங்கள் அமையப்பெற்றுள்ள குச்சவெளி பிரதான வீதியில் நீதிமன்றத்திற்கு முன்னால் நின்ற கட்டாக்காலி மாடுகளை நேற்று முன்தினம் (05) பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், பொலிஸாரின் உதவியுடன் ஊழியர்களால் கட்டாக்காலி மாடுகள் பிடித்து அடைக்கப்பட்டன.

அதன் பின்னர், கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்கள் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக்கை சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது தவிசாளரினால், கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களிடம் இதுவிடயமாக பலதடவை நேரடியாகவும் முகநூல் வழியாகவும் ஒலி பெருக்கி மூலமும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன். தங்களின் அசமந்தப் போக்கினால் இன்றைய தினம் (05) தங்களின் கட்டாக்காலி மாடுகள் பொலிஸாரின் உதவியுடன் அடைக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் எவ்வித சலுகைகளும் தங்களுக்கு வழங்கப்பட மாட்டாது. தங்களின் மாடுகளுக்கு தண்டப் பணம் செலுத்தி மாடுகளைப் பெற்றுச்செல்லுமாறு உரிமையாளர்களுக்கு தெரிவித்தார்.

குறித்த விடயத்தில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தாவிடின், இனிவரும் காலங்களில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்படும் எனவும் தெரிவித்தார். இச் செயற்பாடு ஏனைய பகுதிகளிலும் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் 12, 13 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான கருப்பைக் கழுத்து புற்றுநோய் வராமல் தடுப்பதற்கான தடுப்பூசி ஏற்றும் பணி கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (படங்கள்: பாண்டிருப்பு நிருபர்)

இறக்காமம் பிரதேச செயலகத்தில் காணிக்கச்சேரி

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட, இறக்காமம் - 03, 05, 08 மற்றும் வரிப்பத்தான்சேனை - 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு ஏற்கனவே காணிக்கச்சேரி நடத்தப்பட்டிருந்தது. எனினும், குறித்த காணிக் கச்சேரிகளுக்கு தகுந்த காரணங்களினால் வருகை தராதவர்களுக்கான காணிக் கச்சேரி நேற்று (05) பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நசீல் தலைமையில் இடம்பெற்றது.

இக்காணிக் கச்சேரிக்கு பிரதேச செயலகக் காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதோடு, குறித்த பொது மக்களும் பங்குபற்றியதோடு, தங்கள் காணிப் பிரச்சினை தொடர்பாக நேரடியாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்து தீர்வைப் பெற்றுக்கொண்டனர்.

திருகோணமலை நகரை அண்டிய தாழ்நிலப் பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கின

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை நகரை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் (05) இரவு தொடர்ச்சியாக பெய்த கனமழையின் காரணமாக திருகோணமலை நகரை அண்டிய பெரும்பாலான தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை நகரை அண்டிய மட்கோ, பாலையூற்று, ஜமாலியா, லவ் லேன், செல்வநாயகபுரம் மற்றும் பல்லத்தோட்டம் ஆகிய பிரதேசங்களில் வெள்ள நீரினால் அப்பிரதேச மக்களின் அன்றாட செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தாழ்நிலப் பிரதேசத்தை அண்டிய வீதிகள் சில புனரமைக்கப்படாமலும் மேலும் சில வீதிகள் புனரமைக்கப்பட்டபோதிலும் சரியான முறையில் வடிகான்கள் இல்லாமையினால் இவ்வாறு மழைநீர் குடியிருப்புக்குள் புகுந்ததாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் நேற்று முன்தினம் (05) இரவு தொடர்ச்சியாக பல மணி நேரம் பெய்த கன மழையின் காரணமாக மழைநீர் வீடுகளுக்குள் உள்புகுந்ததில் சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணி தாய்மார்கள் இருக்கும் வீடுகளில் மக்கள் பெரிதும் அவஸ்தைப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

மேலும், இவ்வாறு வீதிகள் புனரமைக்கப்படும் போது உரிய முறையில் வடிகான்கள் அமைத்து மழைநீர் வடிந்தோடக்கூடிய ஏற்பாடுகளை செய்து தருமாறும் சில வடிகான்கள் துப்புரவு செய்து பராமரிக்காமையினாலும் இவ்வாறு மழைநீர் வீடுகளுக்குள் போவதை தடுக்குமாறும் உரிய அதிகாரிகளிடம் பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் தரம் 05 மாணவர்களுக்கு மாதிரிப் பரீட்சை வினாத்தாள் வழங்கிவைப்பு

(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு இராசமாணிக்கம் அமைப்பினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பாடசாலையில் தரம் 5இல் கல்விப் பயிலும் மாணவர்களின் நலன் கருதி தரம் 5 மாதிரிப் பரீட்சை வினாத்தாள் நேற்று முன்தினம் (05) வழங்கிவைக்கப்பட்டது.

கல்குடா கல்வி வலயத்தில் உள்ள 76 ஆரம்ப பாடசாலைகளுக்கும் இவ் பரீட்சை வழிகாட்டி முன்மாதிரி வினாத்தாள்கள் வழங்கிவைக்கப்பட்டன. இம்மாதம் நடுப்பகுதியில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்துகொண்டு இவற்றினை வழங்கி வைத்தார். இதன்போது பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி சிவசங்கரி சங்கேஸ்வரன், றிஸ்மியா பானு, உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.யோகராசா மற்றும் வலய ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

தமது பதவிக்காலத்தில் தாம் சார்ந்த தமிழ் சமூகத்திற்கு ஏதாவது முன்னேற்றகரமான விடயங்கள் நடக்கவேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தனது உரையின்போது தெரிவித்தார்.

இந்திய செய்திகள்

இந்தியாவில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா: ஒரேநாளில் 90,928 பேருக்கு தொற்று உறுதி

ராஜஸ்தானில் முதல் ஒமிக்ரான் உயிரிழப்பு பதிவு

இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு மீண்டும் உச்சத்தை எட்டியுள்ளது. ஒரு இலட்சத்தை நெருங்கி வருகிறது.

நேற்று ஒரே நாளில் புதிதாக 90,928 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன் 325 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் கொரோனா பெருந்தொற்று பாதிப்பு விகிதம் 6.43%ஆக அதிகரித்துள்ள நிலையில், புதிய உருமாறிய ஒமிக்ரொன் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2,630ஆக அதிகரித்துள்ளது.

முதல் ஒமிக்ரொன் இறப்பு பதிவு

இந்தியாவில் முதல் ஒமிக்ரொன் உயிரிழப்பு பதிவாகியுள்ளது.

ஒமிக்ரொன் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்த

ராஜஸ்தானைச் சேர்ந்த முதியவர் கடந்த டிசம்பர் 31ஆம் திகதி உயிரிழந்துள்ளார். அவர் முழுமையாக தடுப்பூசி செலுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தினசரி கொவிட் தொற்று எண்ணிக்கை இந்தியாவில் பல மடங்கு உயர்ந்துள்ளது. அதில் ஒமிக்ரொன் வகை தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை மட்டும் 2 ஆயிரத்தை கடந்துள்ளது. மஹாராஷ்டிரா, டில்லி ஆகிய மாநிலங்களில் ஒமிக்ரொன் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை அதிகம் பதிவாகி வருகிறது.

இந்நிலையில் ராஜஸ்தானில் சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், தைரொய்ட் உள்ளிட்ட இணைநோய் உள்ள முதியவருக்கு டிசம்பர் 15ஆம் திகதி கொவிட் தொற்று ஏற்பட்டது. 25ஆம் திகதி அது ஒமிக்ரொன் தொற்று பாதிப்பு என மரபணு ஆய்வு மூலம் தெரியவந்தது. 6 நாட்கள் கழித்து டிசம்பர் 31ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார். இந்தியாவில் இது ஒமிக்ரொன் தொடர்புடைய முதல் மரணமாகும். அவர் ஏற்கனவே முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர். இதனை மத்திய சுகாதார அமைச்சகம் உறுதிசெய்துள்ளது.

பொங்கலுக்கு பின் தமிழகத்தில் முழு ஊரடங்கு?

கொரோனா பரவல் அதிகரித்துள்ளதால், பொங்கல் பண்டிகைக்குப் பின்னர் முழு ஊரடங்கு அறிவிக்கப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா மூன்றாவது அலை ஆரம் பித்துள்ளதாக அறிவித்துள்ள தமிழக அரசு, இரவு நேர ஊரடங்கு மற்றும் ஞாயிறு முழு ஊரடங்கையும் அறிவித்துள்ளது. இரண்டாவது அலையின்போது, தமிழகத்திலேயே கோவை மாவட்டம்தான், சென்னையை விட அதிகமான பாதிப்புக்குள்ளாகி வந்தது.

இன்னும் ஓரிரு வாரங்களில், கொரோனா பரவல் மேலும் பல மடங்கு அதிகரிக்குமென்று சுகாதாரத்துறை கணித்துள்ளது. இதனால், முழு ஊரடங்கு அறிவிக்கப்படுமா என்ற அச்சம், தொழில் மற்றும் வர்த்தக வட்டாரங்களில் பரவிக்கொண்டிருக்கின்றன.

முதல் கட்டமாக ஞாயிறு மற்றும் இரவு நேர ஊரடங்கு மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளதால், அனைத்துத் தரப்பினும் சற்று நிம்மதி ஏற்பட்டுள்ளது. ஆனால், பொங்கலையொட்டிய நாட்களில், கடை வீதிகளிலும், நிகழ்ச்சிகளிலும் கூடும் கூட்டங்களால் கொரோனா பரவல் மேலும் வேகமெடுக்கும் அபாயம் அதிகரித்துள்ளது.

மாநிலம் முழுவதுமே இந்த நாட்களில் கடை வீதிகளில் கூட்டம் பெருமளவில் கூடும். காணும் பொங்கலுக்கு சென்னை உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகளில் மக்கள் பெருமளவில் திரள்வர். மாட்டுப் பொங்கலையொட்டி, ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு போன்ற நிகழ்ச்சிகள் தென் மாவட்டங்களில் அதிகளவில் நடக்கும்.

இவற்றை அனுமதித்தால், கொரோனா பரவல் மிகவும் அதிகமாகும். உயர் நீதிமன்ற உத்தரவின்படி, விரைவில் நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் இருப்பதால், மக்களிடம் ஏற்படும் அதிருப்தி, தேர்தல் வெற்றியைப் பாதிக்குமென்று ஆளும்கட்சி தரப்பில் ஆலோசனை நடத்தப்படுகிறது.

பொங்கல் வரை முழு ஊரடங்கை அமுல் படுத்தாமல், ஞாயிறு மற்றும் இரவு நேர ஊரடங்கை அமுல்படுத்தி விட்டு, பொங்கலுக்குப் பின் முழு ஊரடங்கை அமுல்படுத்த அரசு முடிவு செய்துள்ளதாக ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் தரப்பில் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த சில நாட்களில், கொரோனா பரவல் மேலும் வேகமெடுக்கும் பட்சத்தில், இன்னும் கூடுதல் கட்டுப்பாடுகளை அரசு அறிவிக்கும் வாய்ப்புப் அதிகமுள்ளது.

இத்தாலியிலிருந்து இந்தியாவுக்கு வந்த 125 பயணிகளுக்கு கொரோனா தொற்று

இத்தாலியிலிருந்து இந்தியா வந்த 125 பயணிகளுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏயார் இந்தியா விமானம் மூலம் இத்தாலியிலிருந்து பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் விமான நிலையம் வந்த பயணிகளில் 125 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் மிக வேகமாகப் பரவி வரும் கொரோனா தொற்றால் அனைத்து விமான நிலையங்களில் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் ஒரே விமானத்தில் 125 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவாவிலிருந்து மும்பை வந்த மற்றொரு கப்பலில் 139 பேருக்கு கொரோனா

மும்பையில் சொகுசுக் கப்பலொன்றிலிருந்த 66 பேர் கொரோனா பாதிப்பில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கோவாவிலிருந்து மும்பைக்குத் திரும்பிய மற்றொரு சொகுசு கப்பலில் 139 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 1,827 பயணிகளுடன் வந்த இந்தக் கப்பலில் பயணிகள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதில் 139 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக மும்பை மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் அறிகுறி இல்லாத பயணிகள் வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளவும், இதர அறிகுறிகளுடன் காணப்படும் பயணிகள் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலையான மண்டபம் மீனவர்கள் தாயகம் திரும்ப இந்திய தூதரகம் ஏற்பாடு

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 12 பேர் புதன்கிழமை விடுதலை செய்யப்பட்ட நிலையில் ஓரிரு நாட்களில் தமிழகம் திரும்புவார்கள் என இந்திய துதரக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலிருந்து கடந்த டிசம்பர் 18ஆம் திகதி மீனவர்கள் விசைப்படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். அப்போது தனுஷ்கோடி - தலைமன்னார் பகுதிக்கிடையே மண்டபம் பகுதியைச் சேர்ந்த சுபிராஜ், அருளானந்தம் என்பவருக்கு சொந்தமான இரண்டு விசைப்படகுகளில் அதே பகுதியைச் சேர்ந்த மரிய எமர்சன், இன்னாசி, ராமநாதன், கீரின்ஸ், அந்தோனிராஜ், சாலமன் உள்ளிட்ட 12 பேர் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் 12 பேரையும் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்துச் சென்றனர். மேலும் அவர்களது 2 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்து எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மீனவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு தலைமன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையிலடைத்தனர்.

இந்நிலையில் புதன்கிழமை மீண்டும் தலைமன்னார் நீதிமன்றத்தில் 12 மீனவர்களும் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களை நீதிபதி எச்சரித்து விடுதலை செய்தார்.

ஆனால் இரண்டு விசைப்படகுகளை விடுவிக்க மறுத்துவிட்டார். விடுதலை செய்யப்பட்ட 12 மீனவர்களும் இந்திய துதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் ஓரிரு நாட்களில் தமிழகம் திரும்ப ஏற்பாடுகள் செய்யப்படும் என இந்திய துதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இசைப்புயலுக்கு வயது 55

தீலீப்குமார் டு ஏ.ஆர்.ரஹ்மான் வரை...

இசைப்புயல், ஒஸ்கார் நாயகன் என அழைக்கப்படும் ஏ.ஆர்.ரஹ்மான் நேற்று தனது 55ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். சென்னையில் 1966ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி பிறந்த இவர் ஒஸ்கார் விருது மூலம் இந்தியாவின் பெருமையை உலகளவில் அறியச் செய்தவர்.

ஒஸ்கார் நாயகன் என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் ஏ.ஆர்.ரஹ்மான், தனது 9ஆவது வயதிலேயே தந்தையை இழந்தார். இவரது தந்தை பிரபல மலையாளத் திரைப்பட இசையமைப்பாளர் ஆர்.கே.சேகர். தனது 11ஆவது வயதில் கீ போர்ட் வாசிப்பதற்காக இளையராஜாவின் இசைக்குழுவில் இணைந்தார் ஏ.ஆர். ரஹ்மான். மேலும் ரமேஷ் நாயுடு, எம்.எஸ். விஸ்வநாதன் போன்ற இசை அமைப்பாளர்களிடமும் கீ போர்ட் வாசிக்கும் வாய்ப்பை பெற்றிருந்தார் ஏ.ஆர். ரஹ்மான்.

ரூட்ஸ், நெமிசிஸ், மேஜிக் என ரொக் குழுக்களிலும் பணியாற்றியுள்ளார். சின்னத்திரை வேகமாக வளர்ந்து வந்த 80களில் வெவ்வேறு பொருட்களுக்கான 30 நொடி விளம்பரங்கள் வரத் தொடங்கிய காலங்களில் இவர் விளம்பர இசையமைப்பில் வெகு பிஸியாகவே இருந்தார் என்றால் அது மிகையில்லை. ஆல்வின் கடிகாரம், லியோ கொபி, பூஸ்ட, ஏசியன் பெயிண்ட்ஸ், பிரீமியர் குக்கர் என இவர் இசையமைப்பில் வராத விளம்பரங்களே இல்லை எனும் அளவுக்கு சொல்லலாம்.

ட்ரினிடி கொலேஜ் ஒவ் மியூசிக் கல்லூரியில் கிளாஸிகல் இசைத்துறையில் இசை பயின்று பட்டம் பெற்றவர் ஏ.ஆர். ரஹ்மான். ஒருமுறை இவருடைய சகோதரி நோயினாலும் அவதியுற்றபோது இஸ்லாமிய நண்பரொருவரின் அறிவுரையின்படி மஃதிக்கு சென்று பிரார்த்தனை செய்ததன் விளைவாக இவருடைய சகோதரி குணமாக அன்றிலிருந்து இவரது நடுப்பெயர் இஸ்லாம் மதத்திற்கு மாறியது.

ஏ.எஸ்.திலீப் குமார் என்ற இயற்பெயரைக்கொண்டவர் அன்றிலிருந்து ஏ.ஆர்.ரஹ்மான் என அழைக்கப்பட்டார். 'பகல் நிலவு', 'இதயகோயில்', 'நாயகன்', 'அக்னி நட்சத்திரம்', 'அஞ்சலி', 'தளபதி' என்று தொடர்ந்து இளையராஜாவின் இசையமைப்பில் வெற்றிப் படங்களை தந்த இயக்குநர் மணிரத்னம், 1992ஆம் ஆண்டு இயக்குநர் கே. பாலசந்தரின் கவிதாலயா தயாரிப்பில் இயக்கிய 'ரோஜா' என்ற திரைப்படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மானை இசையமைப்பாளராக அறிமுகம் செய்தார்.

படத்தின் பாடல்களான 'சின்ன சின்ன ஆசை..', 'காதல் ரோஜாவே..', 'புது வெள்ளை மழை..' என்று அனைத்து பாடல்களும் பட்டித் தொட்டி எங்கும் ரஹ்மானை கொண்டு சேர்த்ததோடு மட்டுமல்லாமல் முதல் படத்திலேயே அவருக்கு தேசிய விருதையும் பெற்றுத் தந்தது. அதன்பின் அவர் இசையமைத்த பல பாடல்கள் ஹிட்டாகி இந்தியா மட்டுமன்றி உலகளவிலும் பிரபலமானார். ஹொலிவுட் படமான 'ஸ்லம்டொக் மில்லினியர்' படத்திற்காக இரண்டு ஒஸ்கார் விருதுகளையும் வென்று உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தார்.

ஏ.ஆர்.ரஹ்மான் திரைப்பட பாடல்கள் மட்டுமின்றி ஆல்பங்களும் வெளியிட்டுள்ளார். 1997ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட 'வந்தே மாதரம்' ஆல்பம் இவரை புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றது. 'ஜன கன மன', 'மா துஜே சலாம்' போன்ற ஆல்பங்களும் இவருடைய இசைப்பணிக்கு பெருமை சேர்த்தன.

விருதுகள்

1992ஆம் ஆண்டு - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது 'ரோஜா' திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது 'மின்சாரக்கனவு' திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது 'லகான்' ஹிந்தி திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

2002ஆம் ஆண்டு - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது 'காற்று வெளியிடை' திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது 'மாம்' ஹிந்தி திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு - இந்திய அரசின் உயரிய விருதான 'பத்மஸ்ரீ' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2010ஆம் ஆண்டு - இந்திய அரசின் உயரிய விருதான 'பத்ம பூஷன்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2009ஆம் ஆண்டு - 'ஸ்லம்டாக் மில்லியனர்' என்ற படத்திற்கு இசையமைத்ததற்காக உலகின் உயரிய விருதான 'ஒஸ்கார் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

'கோல்டன் குளோப் விருது', 'பாப்டா விருது', 'அகாடமி விருது' என இன்னும் ஏராளமான விருதுகளுக்கு சொந்தக்காரராகவும் திகழ்கிறார்.

சமந்தாவுக்கு போட்டியாக களமிறங்கிய ரெஜினா

புஷ்பா படத்திற்காக சமந்தா ஆடிய குத்துப் பாடல் பட்டித் தொட்டி எங்கும் பட்டையை கிளப்பிக் கொண்டிருக்கிறது. "ஓ சொல்றியா மாமா ஓஓ சொல்றியா மாமா..." பூடியூப்பில் பல சாதனைகளை படைத்து வருகிறது. பாடல் மட்டுமல்லாமல், சமந்தாவின் ஆட்டமும் எல்லோரையும் ஆட வைத்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், தற்போது அதே பாணியில் சிரஞ்சீவியின் 'ஆச்சார்யா' படத்தில் இடம்பெறும் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட்டுள்ளார் ரெஜினா. சிரஞ்சீவியும் போட்டி போட்டு ரெஜினாவுடன் ஆடியுள்ளார். இந்த பாடல் சமந்தா பாடல் போல பட்டையை கிளப்பும்மா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த படத்தில் சிரஞ்சீவி, ராம்ச ரண் நாயகர்களாக நடித்துள்ளனர். சிரஞ்சீவி ஜோடியாக காஜல் அகர் வால் நடிக்க, ராம்சரண் ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார். 'ஆச்சார்யா' பெப்ரவரி 4ஆம் திகதி வெளிவரவிருக்கின்றது.

தமிழக மீனவர்கள் மீது கற்களை வீசி இலங்கை கடற்படையினர் தாக்குதல்

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கற்களை வீசி தாக்குதல் நடத்தும் வீடியோ வெளியாகியுள்ளது.

400இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் கச்சத்தீவு அருகே தமிழக மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்கள் மீது கற்களை கொண்டு தாக்கினர்.

இதில் தமிழக மீனவர்களின் விசைப்படகுகள் சில சேதமடைந்தன. இதனையடுத்து மீன் பிடிப்பதை நிறுத்திய மீனவர்கள், உடனே கரைக்கு திரும்பியுள்ளனர்.

உலக செய்திகள்

எரிபொருள் விலை அதிகரிப்பை கண்டித்து

வெடித்தது மக்கள் போராட்டம் போர்க்களமானது கசகஸ்தான்

- இராஜினாமா செய்தது அரசு
- நாடு தழுவிய அவசர நிலை அமுல்
- இணைய சேவைகள் துண்டிப்பு
- விமானங்கள் இரத்து

கசகஸ்தானில் எரிபொருள் விலை உயர்வை கண்டித்து இடம்பெறும் தொடர் போராட்டங்களால் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், நாடுமுழுவதும் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் விலை உயர்வுக்கு பொறுப்பேற்று அரசு இராஜினாமா செய்வதாக அறிவித்தபோதும் பொது மக்கள் தொடர் கவர அூர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் நடத்திய தாக்குதலில் 2 அதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும், ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த ரஷ்யாவிடம், அரச உதவி கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்மாட்டி, தலைநகர் நூர் சுல்தான் மற்றும் மெங்கஸ்டாவ் (Mangistau) உள்ளிட்ட நகரங்களில் இணை சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியவாறு ஆயிரக்கணக்கானோர் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆல்மட்டி நகரிலுள்ள ஆளுநர் அலுவலகத்தை சூறையாடிய போராட்டக்காரர்கள், அந்த அலுவலகத்துக்குத் தீ வைத்தனர். மேலும் பொலிஸாரையும் அவர்கள் தாக்கினர். இதில் பலர் உயிரிழந்தனர்.

போராட்டக்காரர்களைக் கலைந்து போகச் செய்வதற்கு பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். இந்தப் போராட்டங்கள் தொடர்பாக நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளன். போராட்டத்தைக் கட்டுப்படுத்த அந்நாடு முழுவதும் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. தலைநகர் நூர்-சுல்தானில் அவசரநிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் போராட்டம் தொடங்கியதிலிருந்து இதுவரை 1000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் சுமார் 400பேர் வரை வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூஸ்டர் டோஸ் செலுத்தியும் 2ஆவது முறையாகவும் கொரோனா தொற்றுக்குள்ளான போலந்து ஜனாதிபதி

'பூஸ்டர் டோஸ்' தடுப்பூசி செலுத்திய போலந்து ஜனாதிபதி ஆண்டிரே டியுடா இரண்டாவது முறையாகவும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் பணியாற்றும் பலர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதை தொடர்ந்து ஜனாதிபதி டியுடாவும் கொரோனா பரிசோதனை மேற்கொண்டார். அப்போது அவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.

இரண்டு டோஸ் தடுப்பூசியுடன், பூஸ்டர் டோஸும் செலுத்திக் கொண்ட டியுடாவிற்கு எவ்வித தீவிர அறிகுறிகளும் தென்படாததால் வீட்டிலேயே தனிமைபடுத்திக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் அடுக்குமாடி குடியிருப்பில் திடீர் தீ

7 குழந்தைகள் உட்பட 13 பேர் உடல் கருகி உயிரிழப்பு

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் அடுக்குமாடி குடியிருப்பொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 குழந்தைகள் உட்பட 13 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

பிலடெல்பியா நகர 3 மாடி குடியிருப்பில் அதிகாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாலாபுறமும் பரவி கொளுந்துவிட்டு எரிந்த தீயை கட்டுக்குள் கொண்டு வரும் போராட்டத்தில் வீரர்கள் ஈடுபட்டனர்.

அதிகாலையில் விபத்து ஏற்பட்டதால் தூங்கிக் கொண்டிருந்த 7 குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்ததாகவும், படுகாயங்களுடன் மீட்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹைபர்சோனிக் வகை ஏவுகணை சோதனை: அதிகாரபூர்வமாக அறிவித்தது வடகொரியா

ஹைபர்சோனிக் வகை ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்து பார்த்ததாக வடகொரியா அரசு தெரிவித்துள்ளது.

ஏவுகணை சோதனை குறித்த அதிகாரபூர்வ தகவலை வட கொரிய அரசின் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஏவுகணை சோதனை வெற்றிகரமாக முடிந்ததாகவும், இலக்கை துல்லியமாக தாக்கி அழித்ததாகவும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலியை விட ஐந்து மடங்கு வேகத்தில் சென்று தாக்கும் சக்தி கொண்டதாகவும், 720 கிலோமீற்றர் தொலைவிலிருந்த இலக்கை ஏவுகணை தாக்கி அழித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஆசிய நாடான வட கொரியா, பல்வேறு நவீன ஏவுகணை சோதனைகளை நடத்தியது. இதன் வாயிலாக, அண்டை நாடான தென் கொரியாவை அச்சுறுத்தி, அதன் நட்பு நாடான அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகளை நீக்க வட கொரியா முயற்சித்து வருகிறது.

இதையடுத்து, அமெரிக்காவும் சற்று இறங்கி வந்தது. நிபந்தனையின்றி பேச்சு நடத்த விரும்பும் வட கொரியா, அமெரிக்காவின் அழைப்பை நிராகரிக்கும் வகையில் மீண்டும் ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது.

புத்தாண்டில் முதன்முறையாக ஏவுகணையை வடகொரியா வெற்றிகரமாக சோதித்துள்ளதாக கூறப்படுகிறது. வடகொரியா ஏவுகணை சோதனைகளை செய்து வருவது வருத்தம் அளிப்பதாக ஜப்பான் அரசு அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

30 கோடியை நெருங்கும் உலக கொரோனா பாதிப்பு

அமெரிக்காவில் ஒரேநாளில் 7 இலட்சம் பேருக்கு தொற்று

உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 30 கோடியை அண்மித்துள்ளது.

இதேவேளை உலகிலேயே அமெரிக்காவில் நேற்று தினசரி கொரோனா பாதிப்பு 7 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

இதுகுறித்த வோர்ல்டோமீட்டர் வலைதள புள்ளிவிவரங்களின்படி,

புதிய வகை கொரோனாவால் அமெரிக்கர்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சூழலில், கடந்த 24 மணி நேரத்தில் (வியாழக்கிழமை காலை வரையில்) தினசரி தொற்று எண்ணிக்கை 7,04,661 ஆக உயர்ந்துள்ளதுடன், 1,802 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் ஒட்டுமொத்த 58,805,186 பேர் இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 853,612பேர் உயிரிழந்துள்ளனர்.

அர்ஜென்டினாவில் ஒரு இலட்சத்தை நெருங்கிய தினசரி பாதிப்பு

இதேவேளை அர்ஜென்டினாவில் தினசரி கொரோனா பாதிப்பு ஒரு இலட்சத்தை நெருங்கியுள்ளது. நேற்று காலை 8மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் மாதிரிகளை பரிசோதனை செய்ததில் 95 ஆயிரத்து 159 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது அந்நாட்டில் கொரோனா ஆரம்ப காலகட்டம் முதல் தற்போது வரை பதிவான தினசரி பாதிப்புகளிலேயே மிக உச்சபட்ச அளவாகும். ஒரே நாளில் 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பிரிவிலுள்ள படுக்கைகளில் 37 சதவீதம் வரை நோயாளிகளால் நிரம்பியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உலகம் முழுவதும் இதுவரை 298,397,565பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5,484,247பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளானோரில் இதுவரை 256,924,905பேர் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 35,988,413பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருவதுடன் அவர்களில் 91,893பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடுக்கடலில் மூழ்கி சிக்கித் தவித்த இந்திய மாலுமிகள் 11பேரை மீட்ட ஈரான் கடற்படை

புயல், மோசமான வானிலை மற்றும் தொழில்நுட்ப கோளாறால் நடுக்கடலில் மூழ்கிய படகில் சிக்கித் தவித்த 11 இந்திய மாலுமிகளை மீட்டதாக ஈரான் கடற்படை தெரிவித்துள்ளது.

ஓமானின் சோகர் துறைமுகத்திற்கு சர்க்கரை ஏற்றிச் சென்ற படகு, சூறாவளிக் காற்று மற்றும் கடல் சீற்றத்தில் சிக்கி ஈரான் கடற்பகுதியில் நுழைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவல் அறிந்து வந்த ஈரான் கடற்படையினர் படகில் தவித்த 11 இந்திய மாலுமிகளை மீட்டதாக தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா உட்பட 8 நாடுகளின் விமானங்களுக்கு ஹொங்கொங் தடை

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக அமெரிக்கா உட்பட 8 நாடுகளின் விமானங்கள் ஜனவரி 8 முதல் உள்ளே வருவதற்கு ஹொங்கொங் அரசு தடை விதித்துள்ளது.

ஓமிக்ரொன் வகை கொரோனா தொற்றுப் பரவல் அதிகமுள்ள அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட எட்டு நாடுகளிலிருந்து விமானங்கள் வருவதை ஹொங்கொங் அரசு தடை செய்துள்ளது.

இந்த நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் ஹொங்கொங்குக்கு வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தடை விதிப்பது கொரோனா பரவலைத் தடுப்பதற்குத் தேவையாகி விட்டதாக ஹொங்கொங் தலைவர் கேரி லேம் தெரிவித்துள்ளார்.

கொரோனா உயிரிழப்பை 90வீதம் குறைக்கிறது பூஸ்டர் டோஸ்

''இரண்டு டோஸ் தடுப்பூசியுடன் ஒப்பிடுகையில், பூஸ்டர் டோஸ் கொரோனா இறப்பு விகிதத்தை 90 சதவீதம் வரை குறைப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது'' - என அமெரிக்க நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்புப் பிரிவு ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டெல்டா பரவலின்போது நடத்தப்பட்ட ஆய்வில் பூஸ்டர் டோஸ் இறப்பு விகிதத்தை குறைத்ததாக இஸ்ரேல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்தனர். 2 டோஸ் செலுத்திக் கொண்டவர்களை காட்டிலும் பரவல் விகிதம் 10 சதவீதமும், உயிரிழப்பு விகிதம் 90 சதவீதமும் பூஸ்டர் டோஸ் கட்டுப்படுத்தியதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஓமிக்ரொன் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பூஸ்டர் டோஸ் பயனளிக்கும் வகையில் இருக்கும் என நம்புவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

விபத்தில் சிக்கிய உரிமையாளர்

சம்பவ இடத்துக்கு பொலிஸாரை அழைத்துச் சென்று உயிர் மீட்ட நாய்

அமெரிக்காவில் தன் உரிமையாளர் விபத்துக்குள்ளான இடத்திற்கு பொலிஸாரை அழைத்துச் சென்ற நாயின் செயல், நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்திலுள்ள பெனான் நகரில், கடந்த 3ஆம் திகதி இரவு, காரில் இரண்டு பேர் பயணித்தனர். அப்போது கட்டுப்பாட்டை இழந்த குறித்த கார், வீதியை விட்டு விலகி தடுப்பையும் தகர்த்து சென்று மோதி விபத்துக்குள்ளானது.

பின் தகவலறிந்து பொலிஸார் வந்தபோது, அங்கு ஜெர்மன் ஷெப்பர்ட் வகையை சேர்ந்த நாயொன்று பொலிஸாரை வழிமறித்து, பொலிஸாரை ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்ல முயற்சித்தது.

அதை அறிந்து கொண்ட பொலிஸாரும், அந்த நாயை பின் தொடர்ந்து சென்றனர். கார் விபத்துக்குள்ளான இடத்திற்கு, பொலிஸாரை அந்த நாய் சாயாக அழைத்துச் சென்றது. பின், காரிலிருந்த இரண்டு பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அந்த நாயின் செயல் பொலிஸாரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. குறித்த நாய், விபத்துக்குள்ளான காரிலிருந்தவருக்கு சொந்தமான நாய் என்பதும், அதன் பெயர், டின்ஸ்லே என்பதும் தெரியவந்துள்ளது.

ஜோகோவிச்சின் ஆஸி. விசா நிராகரிப்பு!

டென்னிஸ் உலகின் உயரிய போட்டிகளில் ஒன்றான "கிராண்ட்ஸ்லாம்" அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த தொடரில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகள் அனைவரும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்று போட்டி அமைப்பு குழுவினரும் அந்த நாட்டு அரசாங்க அதிகாரிகளும் முன்னதாகவே உத்தரவிட்டுள்ளனர்.

இது ஒரு பக்கம் இருக்கும் நிலையில், 9 முறை ஆஸி. ஓபன் சம்பியனான டென்னிஸ் உலகின் முதல்நிலை வீரர் நோவக் ஜோகோவிச், கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டாரா, இல்லையா? என்பதை தெரிவிக்க தொடர்ந்து மறுத்துவருற நிலையில், அவருக்கு பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டது. அவர் போட்டியில் இருந்து விலகக்கூடும் என்றும் தகவல் வெளியாகின. இதற்கிடையே கொரோனா தடுப்பூசி விவகாரத்தில் தனக்கு மருத்துவ விதிவிலக்கு கிடைத்திருப்பதாகவும் இதனால் அவுஸ்திரேலியாவுக்கு கிளம்பி விட்டதாகவும் அவர் ட்விட்டரில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில், அவுஸ்திரேலிய ஓபனில் ஜோஜோவிச் கலந்து கொள்வதில் மீண்டும் சிக்கல் நிலை உருவாகியிருக்கிறது. இந்த விவகாரம் குறித்து அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவிக்கையில், "அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய விரும்பும் யாராக இருந்தாலும் தேவையான கொரோனா தடுப்பு நடைமுறைகளை நிச்சயம் கடைப்பிடித்தாக வேண்டும். ஜோகோவிச் கொரோனா தடுப்பூசி போடாமல் இருந்தால், அதற்கான தகுதி வாய்ந்த மருத்துவ சான்றிதழை கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்"

சட்டம் சகலருக்கும் சமமானது என்கிறார் ஆஸி.பிரதமர்

"அவர் ஏன் தடுப்பூசி போடவில்லை என்பதற்கு மருத்துவ ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தகுந்த சான்றிதழை வழங்கினால் தான் அவுஸ்திரேலியாவுக்குள் மற்றவர்களுடன் இணைந்து பயணிக்க அனுமதிக்கப்படுவார். இந்த விடயத்தில் ஜோகோவிச்சுக்கு என சிறப்பு சலுகை எதுவும் கிடையாது. மற்ற எல்லோரையும் போல் தான் அவரும் நடத்தப்படுவார். அவர் அளிக்கும் மருத்துவ சான்றிதழ் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாதபட்சத்தில் அவர் அடுத்த விமானத்திலேயே சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவார்" என்றார். இந்நிலையில், அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்காக சென்ற ஜோகோவிச்சை விமானம் மூலம் மெல்போர்னின் துல்லாமரைன் விமான நிலையத்தை நேற்று முன்தினம் இரவு சென்றடைந்தார். மருத்துவ விலக்குகளை அனுமதிக்காத விசாவிற்கு அவரது குழு விண்ணப்பித்திருப்பது தெரியவந்த பிறகு, அவுஸ்திரேலிய நாட்டிற்குள் நுழைய அனுமதிக்காக அவர் காத்திருந்தார்.

ஆனால், அவரை அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய விமான நிலையை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளை சுட்டிக்காட்டி அவருக்கான அனுமதி மறுக்கப்பட்டது. அவுஸ்திரேலியா விற்குள் நுழைய தேவையான பூர்த்தி செய்த ஆதாரங்களை வழங்க தவறியதால் ஜோகோவிச் விசா இரத்துச் செய்யப்பட்டதாக அந்நாட்டு சுகாதார அமைச்சர் கிரெக் ஹன்ட் தெரிவித்துள்ளார். இதனையடுத்து இரவு முழுவதும் மெல்போர்ன் விமான நிலையத்தில் நோவாக் ஜோகோவிச் சிக்கித் தவித்தார்.

"அணிக்கு நல்ல பெயரை தேர்வு செய்து கொடுங்கள்"

ரசிகர்களிடம் கோரிக்கை வைத்த லக்னோ அணி

ஐ.பி.எல். 2022 தொடருக்காக இரண்டு அணிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஒன்று அஹமதாபாத், மற்றொன்று லக்னோ. இதில் லக்னோ அணி தன் சமூக ஊடகக் கணக்கைத் தொடங்கி முதலில் அணிக்கு ஒரு நல்ல பெயராக தேர்வு செய்து கொடுங்கள் என்று ரசிகர்களிடமே கோரிக்கை வைத்துள்ளது.

சிம்பாப்வே முன்னாள் கெப்டனும் இங்கிலாந்தின் முன்னாள் துடுப்பாட்ட ஆலோசகருமான அண்டி பிளவர் லக்னோ அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கௌதம் கம்பீர் அணியின் அறிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த மாதம் மெகா ஏலத்துக்கு முன்பாக மூன்று வீரர்களை முதலிலேயே ஏலம் எடுப்பது குறித்து பேச்சுவார்த்தையில் உள்ளது.

ஆர்.பி - சஞ்சீவ் கோயெங்கா குழுமமான ரூ.7,909 கோடிக்கு லக்னோ அணிக்காக பி.சி.சி.ஐக்கு கொடுத்துள்ளது. அடிப்படை விலையை ரூ.2000 கோடியாக நிர்ணயித்தது பி.சி.சி.ஐ. இவர்கள்தான் 2016-17இல் புனே அணியை வாங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட்ஸ் என்று பெயர் இருந்தது.

இந்நிலையில், லக்னோ அணிக்கு அணி உரிமையாளர்கள் இன்னமும் பொருத்தமான பெயரை தேர்வு செய்யவில்லை. தன் வருகையை சமூக ஊடகத்தில் அறிவித்த லக்னோ அணி இப்போது அணிக்கு பொருத்தமான பெயரை ரசிகர்களே தேர்வு செய்து தருமாறு கோரியுள்ளது. நல்ல பெயரைத் தேர்வு செய்து அதையே அணிக்கு வைக்கவிருப்பதாகவும் ரசிகர்களுக்கு உறுதி அளித்துள்ளது லக்னோ.

லக்னோ ஸ்டார்வார்ட்ஸ், லக்னோ கார்டியன்ஸ், லக்னோ லயன்ஸ் உள்ளிட்ட சில பெயர்கள் இதுவரை ரசிகர்களிடமிருந்து வந்துள்ளன. மேலும் சில வந்துகொண்டும் இருக்கின்றன.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் ஒத்திவைப்பு

ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் குவைத்தில் நடைபெறவிருந்த நிலையில், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக குறித்த தொடரை காலவரையறையின்றி ஒத்திவைப்பதற்கு போட்டி ஏற்பாட்டுக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனையடுத்து, குறித்த போட்டித் தொடரை இலக்காகக் கொண்டு எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஆசிய இளையோர் மெய்வல்லுனர் தகுதிகாண் போட்டிகளை இரத்துச் செய்ய இலங்கை மெய்வல்லுனர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனடிப்படையில், குறித்த தகுதிகாண் போட்டிகளில் பங்குபெறுவதற்காக விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள பணம் செலுத்திய அனைத்து போட்டியாளர்களுக்கும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை மெய்வல்லுனர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரை இலக்காகக் கொண்டு முதலாவது தகுதிகாண் போட்டிகள் கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து பங்களாதேஷ் புறப்பட்டது மகாராணியின் கோல்

2022ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான 2ஆம் எலிசபெத் மகாராணியின் செய்தியை தாங்கிய கோல் மாலைதீவுகளில் இருந்து கடந்த திங்கட்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. இலங்கையின் பல இடங்களுக்கும் சென்ற குறித்த கோல் நேற்று இலங்கையில் இருந்து விமானம் மூலம் பங்களாதேஷுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதுவரை 24 நாடுகளில் கொண்டுசெல்லப்பட்ட குறித்த கோல் 25ஆவது நாடாக இலங்கையை வந்தடைந்தது. பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 72 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் 294 நாட்கள் பவனியாக கொண்டு செல்லப்படும் மகாராணியின் செய்த்தாங்கிய கோல், மொத்தம் 140,000 கிலோ மீற்றர்கள் பயணிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய வீரர்கள் நெஞ்சடைப்பை ஏற்படுத்துகிறார்களாம்

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியின்போது ஒவ்வொரு ஓவரிலும் இந்திய வீரர்கள் தனக்கு நெஞ்சடைப்பை ஏற்படுத்துவதாக போட்டியின் கள நடுவர் நகைச்சுவையாக கூறியுள்ளார்.

விக்கெட்டை வீழ்த்த வேண்டும் என உத்வேகத்தோடு விளையாடிய இந்திய வீரர்கள் ஒவ்வொரு ஓவரின்போதும் ஆட்டமிழப்புக்காக நடுவரிடம் முறையீடு செய்தனர். இதை நகைச்சுவையாக குறிப்பிட்ட தென்னாபிரிக்க நடுவர் மரியஸ் எராஸ்மஸ், இந்திய வீரர்கள் தனக்கு நெஞ்சடைப்பை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய கிரிக்கெட் தகுதிகாண் சுற்றுக்கான இலங்கை மகளிர் குழாம் அறிவிப்பு

2022 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டு போட்டிகள் எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், குறித்த விளையாட்டு விழாவின் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்கான தகுதிகாண் சுற்றில் விளையாடும் இலங்கை மகளிர் அணியின் 16 பேர் கொண்ட குழாம் நேற்று வெளியானது.

இலங்கை மகளிர் அணியானது 19, 20, 22 மற்றும் 24 ஆம் திகதிகளில் முறையே ஸ்கொட்லாந்து, கென்யா, மலேசியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளை எதிர்கொள்ளும். பொதுநலவாய மகளிர் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிக்கு தகுதி பெறுவதற்காக இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மலேசியாவுக்கு செல்லவுள்ளது.

இலங்கை மகளிர் அணியின் குழாம்.

சாமரி அத்தபத்து (தலைவர்), ஹர்ஷிதா மாதவி (உப தலைவர்), ஹாசினி பெரேரா, நிலக்ஷிகா சில்வா, அனுஷ்கா சஞ்சீவனி, கவிஷா தில்ஹாரி, அமா காஞ்சனா, சச்சினி நிசான்சாலா, உதேஷிகா பிரபோதனி, இனோகா ரணவீர, விஷ்மி ராஜுக்ஷ, தாரிகா செவ்வந்தி, பிரசாதினி வீரக்கொடி மற்றும் அச்சினி குலசூரிய, சுகந்திகா குமாரி.

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி உட்பட பல்வேறு நிகழ்வுகள்

(பாலமுனை நிருபர்)

2022 புத்தாண்டை முன்னிட்டு பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டி, கழகத்தின் அங்கத்தவர்கள் கௌரவிப்பு, கழக உறுப்பினர்களுக்கான ரீசேட் அறிமுகம், மற்றும் கலை நிகழ்ச்சி போன்ற பல்வேறு நிகழ்வுகள் அண்மையில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம். பாயிஸ் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல். அமானுள்ளா, உதவி தவிசாளர் எஸ்.எம்.எம். ஹனிபா, தென் கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடாதிபதி ஏ. அப்துல் மஜீத், ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.எல்.ஏ. கபூர், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி. பல்மில், எம்.எம். சித்தி பாத்திமா, சட்டத்தரணி றிஸ்மியா அசாம், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.எம். றிபாஸ்தீன், பொத்துவில் மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.எல். சுதைஸ் அகமட், அம்பாறை மாவட்ட மெய்வல்லுனர் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எஸ்.எல். தாஜுதீன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜி. அஸ்மில், பாலமுனை 4 கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ஐ.எம். அர்சாத் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், கழகத்தின் ஆரம்பகால ஸ்தாபக உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தின் உருவாக்கத்தில் பங்களிப்பாற்றிய அனைத்து கழக கம்மோனைத்தின் தலைவர் எஸ். அப்துல் கரீம், பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் கலீல் ஆசிரியர் உட்பட ஆரம்பகால உறுப்பினர்கள் அதிகிகளினால் 2022 றைஸ்டார் ஞாபகார்த்த நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7